Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

முரசு – 02 திருவள்ளுவர் ஆண்டு 2042 கார்த்திகை 11 ஞாயிற்றுக்கிழமை (27.11.2011) பக்கங்கள் 16 ஓசை – 57

ராம்கோ





RAMCO CEMENT

RAMCO


SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C) ராம்கோ சீமெந்து

(C/1049)



மஞ்சள் பத்திரிகையுடன்

11



நீர் விநியோகத்தில் குறைபாடு

04



யுத்த சன்னம் அகற்ற ஏற்பாடு

06



ஒரு ஓட்டத்தால் போனது வெற்றி

07

# போர்க்குற்றங்கள் தொடர்பில் பொறுப்புக் கூறுவது முக்கியம்

## மீளவும் வலியுறுத்துகிறது ஐ.நா.



(கொழும்பு)

போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் தேசிய ரீதியில் பொறுப்புக் கூறுவதற்கான பொறிமுறை எப்போதும் முக்கியமானது என ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகத்தின் பேச்சாளர் மார்ட்டின் நெஸர்க்கி தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பாக கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் கையளிக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கையின் பரிந்துரைகள் சிலவற்றை (15 ஆம் பக்கம் பார்க்க)

## சட்டவிரோத மின்சாரம் நகரில் 31 பேர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ். பொலிஸ் நிலையத்திற்குட்பட்ட நகரப் பகுதியில் உள்ள வீடுகள், வியாபார நிலையங்களுக்கு சட்டவிரோதமாக மின்சாரத்தைப் பெற்றனரெனத் தெரிவித்து 31 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பில் இருந்து வருகை தந்த இலங்கை மின்சார சபையின் விசேட மின் பரிசோதனையாளர் குழுவினர் யாழ். பொலிஸாருடன் இணைந்து மேற்கொண்ட தேடுதலின் போதே மேற்படி 31 பேரும் சிக்கினர்.

யாழ். பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இவர்கள் நாளைய தினம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர்.

## பொன்சேகாவை விடுவிக்குமாறு அழுத்தம் கொடுக்கப்படவில்லை

### அமெரிக்கத் தூதரகம் மறுப்பு

(கொழும்பு)

சிறையில் அடைக்கப்பட்டுள்ள முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவை விடுதலை செய்யுமாறு அமெரிக்கா கோரியதாக வெளியான தகவல்களை கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் நிராகரித்துள்ளது.

சரத் பொன்சேகாவை விடுதலை செய்யாது போனால் ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தொடரில் இலங்கைக்கு எதிரான நகர்வுகளை மேற்கொள்ளப் போவதாக அமெரிக்கா எச்சரித்ததாக கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்று தகவல் வெளியிட்டிருந்தது. (15 ஆம் பக்கம் பார்க்க)

## அரசியல் தீர்வு வழங்காமை தமிழர் மனங்களில் கவலை

### யாழ். ஆயர் விசனம்

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களின் மனங்களில் அவர்களுக்கான அரசியல் தீர்வினை அரசு வழங்கவில்லை என்ற கவலை குடிகொண்டிருப்பதாக யாழ். மறைமாவட்ட ஆயர் வண.தோமஸ் சவுந்தரநாயம் ஆண்டகை தம்மைச் சந்தித்த ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்ற பிரதிநிதி ஜியோபெறி ஓடனிடம் தெரிவித்துள்ளார்.

நேற்று முற்பகல் 11.30 மணியளவில் யாழ். மறைமாவட்ட ஆயர் இல்லத்திற்கு விஜயம் செய்த ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினர், யாழ். மறைமாவட்ட ஆயர் வண.தோமஸ் சவுந்தரநாயம் ஆண்டகையுடன் சுமார் 20 நிமிடநேர சந்திப்பு ஒன்றை மேற்கொண்டார்.

இச்சந்திப்பின் போது யாழ். ஆயர் கருத்துத் தெரிவிக்கை



யில், 30 வருட காலம் நீடித்த யுத்த சூழல் நீங்கி அமைதி (15 ஆம் பக்கம் பார்க்க)

## ஐரோப்பிய நாடாளுமன்ற பிரதிநிதிக்கு குடாநாட்டு நிலை குறித்து விளக்கம்



(யாழ்ப்பாணம்)

வடக்கிற்கு இரண்டு நாள் விஜயத்தை மேற்கொண்டு நேற்றைய தினம் குடாநாட்டிற்கு வருகைதந்த ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்ற உறுப்பினர் ஜியோபெறி ஓடன் தலைமையிலான குழுவினர், யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்கவை சந்தித்து குடாநாட்டின் தற்போதைய நிலை குறித்து கேட்டறிந்து கொண்டார்.

யாழ்ப்பாணத்திலுள்ள படைத் தலைமையகத்தில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில், மூன்று தசாப்த காலம் நீடித்த போருக்குப் பின்னர் குடாநாட்டில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்ற அபிவிருத்தி, சுகாதார மற்றும் கல்வி நடவடிக்கைகளில் ஏற்பட்டுள்ள (15 ஆம் பக்கம் பார்க்க)

## பஸ் – மோட்டார் சைக்கிள் விபத்து; சகோதரர்கள் இருவர் உயிரிழப்பு

(மன்னார்)

மன்னார் முருங்கன் - நானாட்டான் பகுதியில் மோட் டார் சைக்கிள் ஒன் றுடன் இலங்கை போக்குவரத்துச் சபை பஸ் மோதியதில், மோட்டார் சைக்கிளில் பய ணித்த இருவரும் உயிரிழந்துள்ளனர்.

முருங்கன் - நானாட்டான் பகுதியில் மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த இருவர் நேற்றுக் காலை 9.50 அளவில் பஸ் ஒன்றில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளனர்.

விபத்தில் படுகாயமடைந்த சகோதரர்கள் இருவரும் மன்னார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டு பலனின்றி உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கண்ணாகரன் கேதீஸ் மற்றும் கண்ணாகரன் சுதன் ஆகிய சகோதரர்களே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

முருங்கன் பொலிஸார் விபத்து குறித்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதுடன் பஸ் சாரதியையும் கைது செய்துள்ளனர்.

## சீரற்ற காலநிலை 17 பேர் உயிரிழப்பு

(கொழும்பு)

நாட்டின் பல பாகங்களிலும் நிலவும் சீரற்ற காலநிலையால் இதுவரை 17 பேர் உயிரிழந்துள்ளதோடு 18 பேர் காயமடைந்துள்ளதுடன் 33 பேர் காணாமல் போயுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் கணிப்பீட்டு அறிக்கை தெரிவித்துள்ளது.

தென் மாகாணத்தில் வீசிய கடும் காற்று காரணமாக இதுவரை 30 பேர் காணாமல் போயுள்ளதாக இடர் முகாமைத்துவ நிலையம் குறிப்பிட்டுள்ளது.

காணாமல் போனவர்களைத் தேடும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக அந்த நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர் பரதீப் கொடிப்பிலி (15 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா. அமைப்பினை பிழையாக மொகான் பீரிஸ் வழிநடத்தினார்

### சுதந்திர ஊடக அமைப்பு குற்றச்சாட்டு

(கொழும்பு)

முன்னாள் சட்ட மா அதிபர் ஐக்கிய நாடுகள் அமைப்பினை பிழையாக வழிநடத்தியுள்ளதாக சுதந்திர ஊடக அமைப்பு குற்றம் சுமத்தியுள்ளது.

கடத்தப்பட்ட மற்றும் காணாமல் போன ஊடகவியலாளர்கள் தொடர்பில் முன்னாள் சட்ட மா அதிபர் மொஹான் பீரிஸ் பிழையான தகவல்களை வெளியிட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகளின் சித்திரவதைகளுக்கு எதிரான அமைப்பின் அமர்வுகளில் பங்கேற்ற மொஹான் பீரிஸ், இலங்கை ஊடகவியலாளர்களின் (15 ஆம் பக்கம் பார்க்க)

# ஏழாலைப் பாடசாலைக்கு உபகரணங்கள் அமைச்சர் டக்ளஸ் நிதி ஒதுக்கீடு



(யாழ்ப்பாணம்)

அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் ஆகியோரின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதிஒதுக்கீட்டின் கீழ் சுன்னாகம் ஏழாலைதெற்கு அ.மி.த.க. பாடசாலைக்கு உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளது.

நேற்று காலை 10.00 மணியளவில் பாடசாலையில் இடம்பெற்ற நிகழ்வில் இப்பாடசாலைக்கு ஒரு இலட்சம் பெறுமதியான பாண்ட்வாத்திய உபகரணங்கள் இந்நிதியின் மூலம் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இவற்றை ஈ.பி.டி.பி.யின் வலி வடக்குப் பிரதேச அமைப்பாளர் இ.ஜெயபாலசிங்கம் பாடசாலை அதிபரிடம் கையளித்தார்.

## விசேட கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் இயங்கும் சாரத்தியப் பயிற்சிப் பாடசாலைகளின் உரிமையாளர்களுக்கான கலந்துரையாடல் நாளை காலை 9.00 மணிக்கு நடைபெற உள்ளதாக யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ரூபினி வரதலிங்கம் அறிவித்துள்ளார்.

மாவட்ட செயலக உதவி அரசாங்க அதிபர் (பதில் மோடடார் போக்குவரத்து உதவி ஆணையாளர்) இன் அலுவலகத்தில் இடம்பெறவுள்ள கலந்துரையாடலில் பயிற்சிப் பாடசாலைகளை நடாத்துவதற்காக வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரத்தின் மூலப் பிரதி, வியாபாரப் பதிவுச் சான்றிதழ் உட்பட தொடர்புபட்ட ஆவணங்களின் மூலப்பிரதிகள் அனைத்துடன் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார். (எப்.எஸ்)

# கடற்தொழில் குடும்பங்களுக்கு கடன்வசதி பருத்தித்துறை இலங்கை வங்கிக் கிளை ஏற்பாடு



(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கியின் பருத்தித்துறைக் கிளை பொதுமக்களுக்கான தனது சேவையை மேலும் சிறப்பாக மேற்கொள்வதற்காக நவீன மயப்படுத்தப் படவுள்ளது.

அத்துடன் வடமராட்சியில் உள்ள கடற்தொழில் குடும்பங்களின் பொருளாதார மேம்பாட்டுக்காகத் தற்போது புதிய செயற திட்டங்களையும் இலங்கை வங்கிக்கிளை அறிமுகப்படுத்தியுள்ளது.

இச்செயற்திட்டத்தின்படி இலகு தவணை அடிப்படையில் குறைந்த வட்டியுடன் கூடிய தொழில் முயற்சிக்கான கடன் திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்தியிருப்பதாக இந்த வங்கிக் கிளையின் முகாமையாளர் தெரிவித்தார்.

இதன்படி "டியவரதிரிய" என்ற இத்திட்டத்தின் கீழ் குறைந்த வட்டியுடன் ஐந்து இலட்சம் ரூபாவரையான கடன் தொகையைக் கடற்தொழிலாளர்கள் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் முகாமையாளர் தெரிவித்தார். (116)

# காசுக்கான வேலை கிளிநொச்சியில் ஆரம்பம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தின் விநாயகபுரம், கிருஸ்ணபுரம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்களுக்கான காசுக்கான வேலைத திட்டம் கடந்த வாரம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வின் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலர் நாகேஸ்வரன் ஏனைய அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். இத்திட்டத்தில் 225 குடும்பங்கள் காசுக்கான வேலைக்கும், 190 குடும்பங்கள் வீட்டுத்தோட்டமும், 65 குடும்பங்கள் வாழ்வாதார உதவிகளைப் பெறுவதற்கும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இந்நிகழ்வில் பிரதேச செயலர் கருத்துத் தெரிவிக்கும்போது தாம் இக் கிராமத்திற்கு வந்ததையிட்டு மகிழ்வதாகவும் இம்மக்கள் எல்லாப் பணிகளிலும் ஒற்றுமையாகச் செயற்படுவதாகவும் 2012 ஆம் ஆண்டு இந்திய வீட்டுத்திட்டம் வழங்கப்படவுள்ளதாகவும் இப் பகுதியில் இதுவரை வீட்டுத் திட்டம் கிடைக்காதவர்களுக்குக் கிடைப்பதற்குரிய ஒழுங்குகளைச் செய்து தருவதாகவும் குறிப்பிட்டிருந்தார். அத்துடன் காசுக்கான வேலைத்திட்டச் செயற்பாட்டினையும் ஆரம்பித்து வைத்தார். (77)

# வங்கிக் கிளை திறப்பு

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி நகரில் திருமுருகண்டிப் பகுதியில் இலங்கை வங்கி கிளை ஒன்று திறந்து வைக்கப்பட்டது. இந் நிகழ்வின் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட இராணுவத் தளபதி பெண்டிஸ் மற்றும் இலங்கை வங்கியின் பிரதிநிதி, இலங்கை வங்கியின் கிளிநொச்சிக் கிளைகளின் பொறுப்பதிகாரி பிரேம்குமார், கிளிநொச்சி இலங்கை வங்கி முகாமையாளர் சிவகுமாரன் மற்றும் ஏனைய வங்கிகளின் முகாமையாளர்கள், வர்த்தகர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், வங்கியின் வாடிக்கையாளர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

அத்துடன் வங்கி சிறப்பு நடைபெறவேண்டுமென வாழ்த்து தெரிவித்திருந்தனர். இந்நிகழ்வில் கலந்து சிறப்பித்த அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் பிரதிநிதிகளுக்கும் திருமுருகண்டி கிளையின் முகாமையாளர் நன்றி தெரிவித்தார். இன்றைய தினம் புதிய வைப்புக்களும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (77)

## "மீட்சி" உளவள நூல் வெளியீடு

உள சமூகப்பணி உதவி வழங்குபவர்களை வளப்படுத்தும் நோக்கோடு வெளியிடப்படும் "மீட்சி" என்ற நூல் நாளை மறுதினம் வவுனியா சுவர்க்காக ஹோட்டலில் இடம்பெறவுள்ளது. ஓகன் நிறுவனம் வெளியிடவுள்ள இந் நூலின் வெளியீட்டு விழாவானது அந்நிறுவனத்தின் தலைவர் சுப்பிரமணியம் தலைமையில் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (125)

# பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வீட்டு வசதி வழங்க திட்டம்

## பருத்தித்துறையில் ஏற்பாடு

வடமராட்சி வடக்கு பருத்தித்துறை பிரதேச செயலகத்திற்குட்பட்டவர்கள், இந்தியாவிலிருந்து வந்து மீளக்குடியமர்ந்தவர்கள், வன்னி யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் மற்றும் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்ந்து வருகின்ற இதுவரை வீட்டுத் திட்டம் பெற்றுக்கொள்ளாத குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகளை வழங்குவதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதில் குறிப்பிடப்பட்ட தகுதி வாய்ந்தவர்கள் தாம் வாழ்ந்து வரும் வீட்டின் முன்னால் குடும்ப உறுப்பினர்களுடன் நின்று எடுக்கப்பட்ட புகைப்படம் மற்றும் காணி உறுதி என்பவற்றுடன் சென்று மிக விரைவாக காலதாமதமின்றி தத்தம் கிராம அலுவலர் பிரிவிலோ அல்லது பருத்தித்துறைப பிரதேச செயலகத்திலோ பதிவுகளை மேற்கொள்ளுமாறு வடமராட்சி வடக்கு பருத்தித்துறை பிரதேச செயலர் ஆர். வரதீஸ்வரன் அறிவித்துள்ளார். (116)

## ஆன்மீக நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வாரின் அருளினால் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிற்றுக் கிழமைகள் தோறும் ஆன்மீக நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன. அதன் பிரகாரம் இன்று ஞாயிற்றுக கிழமை பகல் 10.00 மணிக்கு சுற்று பூசைகள் நிறைவுபெற்றதும் ஆச்சிரம மண்டபத்தில் பருததித்துறை பகவான் சத்ய சாயி சேவா நிலையத்தினரால் பஜனைப் பாடல்கள் இடம்பெறுவதுடன் மகேஸ்வர பூசையும் நடைபெறவுள்ளதாகப் பெரியாழ்வார் ஆச்சிரம மடாதிபதி வை.ஆனந்தராசா தெரிவித்துள்ளார். (116)

# தவறி விழுந்த குடும்பஸ்தர் மரணம்

(யாழ்ப்பாணம்)

வீட்டு மாடிப்படியில் இருந்து தவறுதலாக வீழ்ந்த குடும்பஸ்தர் ஒருவர உயிரிழந்துள்ளார். இச்சம்பவம் கடந்த 21 ஆம் திகதி இடம்பெற்றது. படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் மேற்படி நபர் உயிரிழந்துள்ளார்.

தொண்டமனாறு பகுதியைச் சேர்ந்த செல்லையா சபேஷ்குமார் (வயது - 41) என்பவராவார். இவர் மூன்று பிள்ளைகளின் தந்தை என்பதும் குறிப்பிடத்தக்கது. (எஸ்)

# கல்விக் கருத்தரங்கு



(யாழ்ப்பாணம்)

வேலணை, ஊர்காவற்றுறைக் கோட்டப் பாடசாலைகளுக்கான கணித, விஞ்ஞான சாதாரண தரப் பரீட்சைக்கான முன்னோடிக் கருத்தரங்கு நிகழ்வு நேற்று இடம்பெற்றது. இந்நிகழ்வு 512 ஆவது படைப்பிரிவின் ஏற்பாட்டில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பொறுப்பதிகாரி கேணல் சன்ன வீரசூரிய, கரம்பன் இராணுவமுகாம் பொறுப்பதிகாரி லெப்டினன் கேணல் சேனகபிரேமவம்ச, கோட்டக்கல்விப் பணிப்பாளர் சரவணபவானந்தன், வேலணை மத்திய கல்லூரி, புங்குடுதீவு மகாவித்தியாலயம், ஊர்காவற்றுறை சென்.அன்ரனீஸ் மற்றும் பாடசாலை அதிபர்களும், ஆசிரியர்களும், மாணவர்களும் கலந்துகொண்டனர். (85)

## சாரதிப் பரீட்சை பிற்போடப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

இன்றைய தினம் நடைபெறும் என ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்த சாரதி அனுமதிப் பத்திரப் பரீட்சை தவிர்க்க முடியாத காரணங்களால் பிற்போடப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ரூபினி வரதலிங்கம் அறிவித்துள்ளார். புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும். எனவே பரீட்சார்த்திகள் அனைவரும் ஒத்துழைப்பு வழங்கி உதவுமாறு கேட்டுள்ளார். (எப்.எஸ்)

# தயார்ப்படுத்தல் செயலமர்வு

(சாவகச்சேரி)

எதிர்வரும் டிசம்பர் மாதம் நடைபெறவுள்ள க.பொ.த (சா/த) பரீட்சைக்குத் தோற்றும் தென்மராட்சி கல்வி வலயத்திற்குட்பட்ட மாணவர்களுக்கான கணித விஞ்ஞானபாட முன்னோடிப் பரீட்சை செயலர்வு இன்று தென்மராட்சியிலுள்ள மூன்று பாடசாலைகளில் நடைபெறவுள்ளது.

இதில் சாவகச்சேரி இந்துக்கல்லூரி, கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம், கைதடி முத்துக்குமாரசாமி மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

வடமாகாண கல்வித் திணைக்களத்தின் நெறிப்படுத்தலில் 523 ஆவது படையணியின் அனுசரணையுடன் நடத்தப்படும் இச் செயலமர்வில் தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த முன்னணி ஆசிரியர்கள் கலந்துகொள்ளவுள்ளனர்.

இச்செயலமர்வில் தோற்றும் மாணவர்கள் தமக்கு அருகிலுள்ள நிலையங்களிற்கு சமுகமளிக்குமாறு தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (உ-11)

புத்தகங்களை நன்கு கற்றுத்தேர்ந்து அவற்றிற்கு அதிகாரியாக இருந்திடுங்கள் புத்தகங்களுக்கு நீங்கள் அடிமையாகி விடாதீர்கள், வாழ்வதற்காகப் பல கருத்துக்களையும் படித்திடுங்கள் படிப்பதற்காகவே வாழாதீர்கள்.

- பேகன் லட்டன்.

தினப்பதிப்பு தினமுரசு THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

## ஊடகக் கனவும் மெய்ப்பட வேண்டும்!

ஒரு நாட்டின் அதிகாரக் கட்டமைப்பில் ஊடகம் நான்காவது தூணாகக் கருதப்படுகிறது. ஏனைய மூன்று தூண்களாக ஆட்சி அதிகாரப் பிரிவு, நாடாளுமன்றம், நீதிமன்றம் ஆகியன சொல்லப்படுகின்றன. மற்றைய மூன்று தூண்களினதும் மக்களுக்கு விரோதமான செயற்பாடுகளை விமர்சித்தபடி இருக்கும் இந்த நான்காவது தூண் மக்களுக்கு என்ன செய்துகொண்டிருக்கிறது?

மக்களைத் தகவலறிவு உள்ளவர்களாக்குதல், கல்வியூட்டுதல், ஆட்சியும் அதிகாரப் பிரிவும் நீதியும் மக்களுக்குரியவையாகச் செயற்படுவதைக் கண்காணித்து வழிப்படுத்துதல், மக்களின் வாழ்வுக்குத் தீங்கானவற்றைக் கண்டு வெளிப்படுத்துதலும் சரியான திசை நோக்கிச் செல்ல வேண்டிய மக்களின் குரலாக ஒலித்தலும் ஊடகங்களின் கடமை. நமது ஊடகங்கள் என்ன செய்கின்றன என்பதை அவற்றின் செய்திப் பொழிதல்களுக்கு அப்பால் நம் சிந்தனையைத் தப்புவித்து வைத்துக்கொண்டு கொஞ்சம் ஆய்ந்து பார்க்க வேண்டியது அவசியம்.

முதலாவது கேள்வி, நாம் நம்பியிருந்தது அல்லது நம்ப வைக்கப்பட்டது நடக்காமல் போய் ஏமாந்திருக்கிறோம். சுமார் முப்பது வருடங்களாக பாடழிவு ஒன்றை நோக்கியே இழுத்துச் செல்லப்பட்டுக் கொண்டிருந்தது பற்றிய எந்த எச்சரிக்கையுணர்வுகளும் மேலெழுந்து சமூகத்தின் குரலாக ஒலித்துவிடாதபடி மறைக்கப்பட்டிருக்கிறோம். தொடர்ச்சியாக இவ்வளவு அவலங்களைச் சுமந்து வருகிறோம். இதிலிருந்து மீள்வதற்குரிய சாத்தியமான மக்கள் நம்பக்கூடிய வழி ஏதும் இந்த ஊடகங்களால் இதுவரை எப்போதாவது சொல்லப்பட்டிருக்கிறதா?

உணர்ச்சிகரமாக விடயங்களை அணுகும் முறை தவிர, புத்திசாலித்தனமான, தமிழ் ராஜதந்திர நகர்வில் ஒரு சிறு வெற்றியையேனும் எப்போதாவது பெற்றுக்கொள்ளும்படியான ஆலோசனைகளை இவை சொல்லியிருந்ததுண்டா? எல்லாவற்றுக்கும் அரசியல்வாதிகளையோ ஆயுதப் போராளிகளையோ பழிசுமத்திவிட்டுத் தப்புவதைத் தவிர ஊடகங்களின் பொறுப்புணர்ச்சியை எப்போதாவது காண்பித்ததுண்டா? நடந்து முடிந்தவற்றுக்கும் நடக்கும் அவலங்களுக்கும் இந்த நான்காவது தூணின் பொறுப்பென்ன?

இன்றைய தமிழ் அபிப்பிராயத்தைப் பெருமளவு வடிவமைத்துக் கொண்டிருப்பவை இந்த செல்வாக்குமிக்க ஊடகங்கள்தான். எந்தக் கஷ்டங்களையும் கடந்துவிட முடியாதவாறு இன்னும் நம் சிந்தனை இருந்துகொண்டிருப்பதற்கு வேறு யார் முதற் காரணமாக முடியும்?

எல்லாவற்றையும் தீர்மானிக்க வல்ல உலக பயங்கரவாத சக்தியாக வருணிக்கப்படும் தகவல்தொழில்நுட்பப் புரட்சிக் கால கட்டத்திற்குள் நாமிருக்கிறோம். முதலாவது கார் உற்பத்தித் தொழிற்சாலையாக கூறப்படும் அமெரிக்காவின் ஃபோர்ட் கார் தொழிற்சாலையில் கொண்டுவரப்பட்ட தயாரிப்பு நடைமுறை ஓர் உதாரணம். தொழிற்சாலையின் 'அசெம்பிளி லைன்' எனப்படும் இயந்திர வரிசைப் பிரிவுகளில், காரின் பாகங்கள் ஒவ்வொன்றாகப் பொருத்தப்பட்டு இறுதியில் முழு கார் வெளியே வரும். முதலாளித்துவ சரக்கு உற்பத்தியைப் பொறுத்தவரையில், இயந்திர வரிசையில் இந்த இந்த வேலைகளுக்கு இந்த இந்தத் தொழிலாளர்கள் என்று பிரிக்கப்பட்டு விடுகிறார்கள் தொழிலாளிகள் உயிரும் உணர்வுமற்ற கருவிகளாக மாற்றப்படுகிறார்கள். தொழிலாளி இப்படி இயந்திரத்தோடு இயந்திரமாய், இறுதியில் என்ன பொருள் உருவாகிறது என்பதைக் கூட அறியாதவராய், மறையாணிகளை முடுக்கிக்கொண்டிருப்பதே வாழ்க்கையாய் வார்க்கப்படுவதை, உலகம் போற்றும் நகைச்சுவை நடிகர் சார்ளி சப்ளின் தமது புகழ்பெற்ற 'மொடேர்ன் ரைம்ஸ்' திரைப்படத்தில் தமக்கே உரிய நையாண்டியோடு சித்தரித்திருப்பார்.

முதலாளித்துவ அமைப்பின் மிகச்சிறந்த அடையாளமாகக் கருதப்பட்டவரான ஹென்றி ஃபோர்ட், "எந்த ஒரு வாடிக்கையாளரும் தான் வாங்குகிற கார் கறுப்பு நிறத்தில் இருக்கிற வரையில் அதை தான் விரும்புகிற எந்த ஒரு நிறத்திற்கும் மாற்றிக்கொள்ள முடியும்," என்று கூறியதாகச் சொல்லப்படுவதுண்டு. ஏனென்றால் அப்போது அவருடைய தொழிற்சாலையில் உருவான கார்கள் எல்லாமே கறுப்பு நிறத்தில் மட்டுமே இருந்தன.

நமது ஊடகங்களும் ஒரே வகையான சரக்கை உற்பத்தி செய்யும் இயந்திரங்கள் எனவே ஆக்கப்பட்டிருக்கின்றன. செய்திகள், தகவல்கள் அனைத்தும் பொறுப்புணர்வற்ற, வெறும் உணர்ச்சியூட்டி விற்பனையாக்கும் சரக்குகளாகி விட்டன. இந்தச் சரக்கு உற்பத்தியின் நோக்கம், மாற்றங்களை ஏற்படுத்துவதல்ல, பண ரீதியாகவும் அரசியல் வாய்ப்பு ரீதியாகவும் தங்கள் இலாபத்தை அதிகரிப்பது மட்டுமே.

ஊடகம் உண்மையைச் சொல்லவில்லை என்றால், மக்களின் உண்மை வாழ்க்கையைச் சொல்லவில்லை என்றால் அதன் நெருக்குதல்களிலிருந்து மீள்வதற்கு வேண்டிய யதார்த்தத்தை காட்டவில்லை என்றால், அது வெறும் உணர்ச்சிகளை விற்பனை செய்யும் பொழுதுபோக்காக, நுகர்பொருளாகவே முடிந்துவிடும். ஊடகத்தின் உண்மையான மாண்பையும் மரபையும் மீட்கிற கனவு மக்கள் விழிப்புணர்வினால் மட்டுமே மெய்ப்படும்.

- ஆசிரியர்

# பங்குச் சந்தையின் திடீர் பின்னடைவு பொருளாதாரத்திற்கு பெரும் பாதிப்பு


## - பொருளியல் பேராசிரியர் ஜகத் விக்கிரமசிங்க

(கொழும்பு)

பங்குச் சந்தையின் திடீர் பின்னடைவானது நாட்டின் பொருளாதாரத்திற்கு சிறந்த முன்னுதாரணமாக அமைய மாட்டாது இந்த நிலைமையை மாற்றுவதற்காக முதலீட்டாளர் தொடர்பில் அரசாங்கம் விசேட கவனம் செலுத்த வேண்டியுள்ளதாக சிறிஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தரும் பொருளியல் விஞ்ஞான பேராசிரியருமான ஜகத் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

முதலீட்டாளர்கள் மத்தியில் எதிர்காலம் பற்றிய எதிர்பார்ப்புகள் ஏற்படக்கூடிய வகையில் திடமான வகையில் கொள்கைகளை அறிமுகப்படுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டும்.

ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம் மற்றும் இலங்கை காப்புறுதிக கூட்டுத்தாபனம் ஆகியவற்றின் நிதி முதலீடு செய்யப்பட்டுள்ளதால் பங்குச் சந்தையின் திடீர் வீழ்ச்சி பொருளாதாரத்திற்கு அனுகூலமாக அமையாது.



முதலீட்டாளர்களின் மனநிலைக்கு ஏற்றவாறே பங்குச் சந்தை நடவடிக்கைகள் தீர்மானிக்கப்படுவதாகவும் முதலீட்டாளர்கள் மத்தியில் எதிர்காலம் பற்றிய நம்பிக்கை அற்றுப் போகின்ற பட்சத்தில் எத்தகைய கொள்கைகளை நடைமுறைப்படுத்திய போதிலும் பலனளிக்கமாட்டாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

# தரமற்ற பொருளை விநியோகிப்போரின் விலைமனு இரத்துச் செய்யப்படும்



(கொழும்பு)

தரமற்ற அத்தியாவசியப் பொருட்களை விநியோகிக்கின்றவர்களின் விலைமனுக்களை உடனடியாக இரத்துச் செய்யுமாறு கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சர் பணிப்புரை விடுத்துள்ளளார்.

ஒருசில விநியோகஸ்தர்கள் தரமற்ற மாதிரிகளைக் காட்டி பொருட்களை விநியோகிப்பதாக அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.கடந்த காலத்தில் இத்தகைய பல்வேறு சம்பவங்கள் பதிவானதாகவும் அமைச்சு குறிப்பிடுகிறது.

இவ்வாறான விநியோகஸ்தர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அமைச்சின் செயலாளருக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## காற்றினால் சேதமடைந்த வீடுகளுக்கு இழப்பீடு



(கொழும்பு)

தென் மாகாணத்தில் வீசிய கடும் காற்றினால் முற்றாகச் சேதமடைந்த வீடுகளுக்கு ஒரு இலட்ச ரூபாவும், பகுதியளவில் சேதமடைந்த வீடுகளுக்கு 50 ஆயிரம் ரூபாவும் இழப்பீடாக வழங்கப்படவுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் மகிந்த சமரவீர அறிவித்துள்ளார்.

இதுதவிர அனர்த்தத்தினால் உயிரிழந்தவர்களின் இறுதிக் கிரியைகளுக்காக 15 ஆயிரம் ரூபாவும், காயமடைந்தவர்களுக்கு 10 ஆயிரம் ரூபாவும் வழங்கப்படவுள்ளது. அனர்த்த நிலைமைகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கான சகல வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுப்பதற்காக சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு தெளிவுபடுத்தியுள்ளதாக அவர் மேலும் தெரிவிக்கிறார்.

## மழை அதிகரிப்பால் நீர் மின் உற்பத்தி உயர்வு

(கொழும்பு)

நாட்டின் நீர்மின் உற்பத்தி 20 சதவீதத்தால் உயர்வடைந்துள்ளதாக இலங்கை மின்சார சபை அறிவித்துள்ளது. நிலவுகின்ற மழையுடனான கால நிலை காரணமாக மின்சார உற்பத்தி தொடர்ந்து உயர்வடையக் கூடிய தன்மை காணப்படுவதாக மின்சார சபையின் தலைவரும், பேராசிரியருமான விமலதர்ம அபேவிக்கிரம தெரிவித்தார்.


கடந்த வாரத்தில் நீர்த்தேக்கங்களை அண்மித்த நீரேந்துப் பகுதிகளுக்கு அதிக மழைவீழ்ச்சி கிட்டியுள்ளது. எதிர்காலத்தில் வறட்சி நிலவக்கூடிய காலப்பகுதிகளில் தடையின்றி, மின் விநியோகத்தை மேற்கொள்வதற்கான நீரைச் சேமித்து வைப்பது தொடர்பாக கவனம் செலுத்தியுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார்.

# துமிந்த சில்வாவை பார்வையிட சிங்கப்பூர் விரையும் புலனாய்வு அதிகாரி

நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவைப் பார்வையிட புலனாய்வுப் பிரிவு அதிகாரியொருவர் சிங்கப்பூருக்கு விஜயம் செய்யவுள்ளார். அண்மையில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி காயமடைந்த துமிந்த சில்வாவிற்கு மேலதிக சிகிச்சைகளை வழங்கும் நோக்கில் சிங்கப்பூருக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

துமிந்த சில்வா, சிங்கப்பூர் வைத்தியசாலை ஒன்றில் சிகிச்சை பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.துமிந்தவின் நிலைமையை நேரில் பார்வையிடும் நோக்கில் புலனாய்வுப் பிரிவு அதிகாரி ஒருவரை சிங்கப்பூருக்கு அனுப்பி வைக்க பொலிஸ் தலைமையகம் தீர்மானித்துள்ளது.

எதிர்வரும் வாரங்களில் சிரேஷ்ட அதிகாரியொருவர் இவ்வாறு சிங்கப்பூருக்கு விஜயம் செய்யக் கூடுமென எதிர்பார்க்கப்படுகிறது.குறித்த புலனாய்வு அதிகாரி துமிந்த சில்வாவை நேரில் பார்வையிட்ட பின்னர் அவரது நிலைமை குறித்து அறிக்கை சமர்ப்பிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.



இதேவேளை, சிங்கப்பூரில் சிகிச்சை பெற்று வருவதாகக் கூறப்படும் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவுக்கு 6 மாத கால விடுமுறை கோரப்பட்டுள்ளது.

இலங்கையின் நாடாளுமன்றச் செயலாளருக்கு இந்தக் கோரிக்கை அனுப்பப்பட்டுள்ளது.இலங்கையின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் மூன்று மாதங்களுக்கு உரிய காரணம் இன்றி நாடாளுமன்றத்துக்கு சமூகமளிக்காவிடத்து அவரின் உறுப்புரிமை ரத்துச்செய்யப்படும்.இந்த நிலையிலேயே துமிந்த சில்வாவுக்கு 6 மாத கால விடுமுறை கோரப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# புலம்பெயர் தமிழர்களின் உதவிகள் பாதிக்கப்பட்டோருக்கு கிடைக்க வேண்டும்

## ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட அமைப்பாளர் கமல்

(யாழ்ப்பாணம்)

புலம்பெயர் வாழ் தமிழ் மக்களது உதவிகள் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதாக அமைய வேண்டும் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ் மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் (கமல்) தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் பாசிக் நிறுவனத்தின் நிதியுதவியுடன் வேலனை துறையூரில் கடற்றொழிலாளர்களுக்கான கடற்றொழில் உபகரணங்கள் கையளிக்கும் நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு சிறப்புரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், மூன்று தசாப்த காலமாக நீடித்த கொடிய யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டு தமிழ் மக்கள் சுதந்திரமாகவும், சுபீட்சமாகவும் வாழ்ந்து வரும் நிலையில் அரச சார்பற்ற நிறுவனங்களால் மக்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு வழங்கப்படுகின்ற கடற்றொழில் உபகரணங்களை சரியான வகையில் பயன்படுத்தி தமது வாழ்வாதாரத்தை மேம்படுத்த வேண்டும்.

அரச சார்பற்ற நிறுவனங்களால் யுத்த காலத்தில் பல்வேறுபட்ட உதவிகள் வழங்கப்பட்டன. ஆனால் இவை சரியான ஒழுங்குபடுத்தல் இன்றி தவறான வழிக்கு பயன்படுத்தப்பட்டது. எனினும் தற்போது அரச சார்பற்ற நிறுவனங்கள் அரசின் அனுமதியுடன் மக்களது வாழ்வாதாரத்தை கட்டியெழுப்புவதற்கும் பிரதேசங்களை அபிவிருத்தி செய்வதற்கும் பல்வேறு வகையான செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றன.

இவ்வாறே கடந்த காலங்களில் புலம்பெயர்வாழ் தமிழ் மக்களின் நிதியுதவிகளும் தவறான வழிக்கே பயன்படுத்தப்பட்டன. எனவே யுத்தம் ஓய்ந்த அமைதிச் சூழலில் புலம்பெயர் வாழ் தமிழ் மக்களது உதவிகள் போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதாக அமைய வேண்டும். தவறான பாதைக்கு இட்டுச்செல்லப்பட்ட இளைஞர், யுவதிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான உதவித்திட்டங்களை செயற்படுத்த புலம்பெயர் வாழ் தமிழர்களும் முன்வர வேண்டும் என மேலும் தெரிவித்தார்.

பாசிக் நிறுவனத்தின் நிதியுதவியுடன் வேலனை துறையூரில் கடற்றொழிலாளர்களுக்கான கடற்றொழில் உபகரணங்கள் கையளிக்கும் நிகழ்வு துறையூர் கிராமிய கடற்றொழிலாளர் சங்கத் தலைவர் இரங்க நாயகம் தலைமையில் நடைபெற்றது.



இங்கு கருத்துரைகளை பாசிக் நிறுவனத்தின் திட்ட அலுவலர் செல்வி மிற்சிக்கோ நிஷிமோறி பாசிக் நிறுவனத்தின் திட்ட இணைப்பாளர் பிரபாகரன் வேலனை பிரதேச சபை தவிசாளரும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் வேலனை பிரதேச அமைப்பாளருமான சிவராசா (போல்) ஆகியோர் நிகழ்த்தினர்.

இந் நிகழ்வில் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாச பிரதிநிதிகள் கிராம பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இதேவேளை அண்மையில் திறந்து வைக்கப்பட்ட துறையூர் ஐஸ் கட்டித் தொழிற்சாலையினை ஈ.பி.டி.பி.யின் யாழ் மாவட்ட அமைப்பாளர் கமல் மேற்பார்வையிட்டதுடன் தொழிற்சாலையின் செயற்பாடுகள் தொடர்பாகவும் சம்பந்தப்பட்டவர்களுடன் கலந்துரையாடினார். இதன்போது ஈ.பி.டி.பி.யின் வேலனை பிரதேச அமைப்பாளர் சிவராசாவும் கலந்து கொண்டார்.

# சீரற்ற நீர் விநியோக செயற்பாடுகளால் குடிநீரை பெறுவதில் மக்கள் சிரமம்

(அச்சுவேலி)

நிலாவரைப் பகுதியிலிருந்து பொதுமக்களுக்கென குடிநீர் விநியோகம் மேற்கொண்டுவரும் தேசிய நீர் வழங்கல் சபையின் நீர் விநியோகச் செயற்பாடுகளில் குறைபாடுகள் காணப்படுவதாக பொதுமக்கள் பலரும் விசனம் தெரிவிக்கின்றனர். குடிநீர் விநியோகம் காலை வேளைகளில் சில வேளைகளில் தாமதித்து மேற்கொள்ளப்படுவதாகவும் அதேபோல் சில சந்தர்ப்பங்களில் வழமையான நேரத்திற்கு முன்னதாகவே நிறுத்தப்பட்டு விடுவதாகவும் இதனால் பல நூற்றுக்கணக்கான குடும்பங்களுக்கு பாதிப்பு ஏற்படுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

மேலும் மின்சார சபையினால் மின் வெட்டு அமுல்படுத்தப்படும்வேளைகளில் இக்குடிநீர் விநியோகம் மிகவும் சொற்ப நேரத்திற்கே மேற்கொள்ளப்படுவதாகவும் இது தமக்கு பெரும் இடைஞ்சல்களை ஏற்படுத்துவதுடன் அன்றாட வேலைகளுக்கு தடங்கலாக இருப்பதாகவும் தெரிவிக்கின்றனர். இனிவரும் காலங்களிலாவது உரிய அதிகாரிகள் இவ்விடயத்தில் கவனம் செலுத்தி இப்பிரச்சினைகள் ஏற்படாத வண்ணம் நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டும் எனவும் பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.(03)

# பதிவாளர் பதவிக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

பதிவாளர் நாயகம் திணைக்களத்தினால் முல்லைத்தீவு மாவட்டத்தில் கரைதுறைப்பற்று ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவுகளில், விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற தமிழ் மொழி மூலமான பதிவாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் முஸ்லிம் பதிவாளர் பதவிக்கு ஆண்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பதாரிகள் பிறப்பு, இறப்பு, பதிவு செய்கின்ற பிரிவுக்குள் நிரந்தர முகவரியைக்கொண்டவராகவும், 30வயதுக்கு குறையாமலும், 60 வயதுக்கு மேற்படாமலும் இருக்கவேண்டும்.

இது சம்பந்தமான மேலதிக விபரங்களை உரிய மாவட்ட செயலகங்கள் மற்றும் மாவட்ட பதிவகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச்சபை, மற்றும் பொது இடங்களிலும், பார்வையிடலாம்.

விண்ணப்பப்படிவங்களைஉரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணிமற்றும் மாவட்ட பதிவாளர் அலுவலகத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

முஸ்லீம் பதிவாளர்கள் பதவிக்கு, விண்ணப்பிப்போர் விண்ணப்பங்களை 2011.12.28ஆம் திகதிக்கு முன்பாகவும், தமிழ் மொழி மூலமான பதிவாளர் பதவிக்கு விண்ணப்பிப்போர் 2011.12.29அம் திகதிக்கு முன்பதாகவும் உரிய மாவட்ட செயலக முகவரிகளுக்கு அனுப்பிவைக்க வேண்டும்.

மேலதிக விபரங்களை 25.11.2011 வர்த்த மானியிலோ அல்லது தினமுரசுக் காரியாலயத்திலோ பார்வையிடலாம்.

# இலங்கை வங்கிக் கிளையால் வடமராட்சியில் வறுமை ஒழிப்புத்திட்டம்

(வடமராட்சி)

இலங்கை மத்திய வங்கியினால் அறிமுகப் படுத்தப்பட்டு இலங்கை வங்கியின் பருத்தித் துறை கிளையினால் மேற்கொள்ளப்படும் வறுமை ஒழிப்புத்திட்டம் வடமராட்சி பிரதேசத்தில் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி வடமராட்சியில் உள்ள ஓடக்கரை புலோலி மத்தி, புலோலி வடகிழக்கு காந்தியூர் சிங்கநகர், தும்பளைமேற்கு, தும்பளை தெற்கு, பருத்தித்துறை கிழக்கு பருத்தித்துறை ஆகிய இடங்களில் குழுக்களை உருவாக்கி அதில் வறுமைக் கோட்டில் வாழும் குடும்பங்களை இணைத்து ஒவ்வொரு சங்கத்திற்கும் 12 வீத வட்டியுடன் 50 ஆயிரம் ரூபா கடனுதவிகள் வழங்கப்பட்டுள்ளதாக கிளையின் வெளிக்கள உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார்.

வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்ப அங்கத்தவர்களுக்கு சுயதொழிலை பெற்றுக் கொடுத்து அந்த உற்பத்திகளூடாக அவற்றை சந்தைப் படுத்தக் கூடிய வசதிகளும் பெற்றுக் கொடுக்கப் பட்டுள்ளது.

இத்திட்டத்தின் மூலம் இதுவரை 20 இலட்சம் ரூபா பெறுமதியான உற்பத்திப்பொருட்கள் தென்னிலங்கைக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வருமானம் ஈட்டப்பட்டுள்ளது. சுயதொழில் சார்ந்த உற்பத்தி நிறுவனங்களை இந்தக் குழுக்களுடன் இணைத்து குறுகிய சந்தை வாய்ப்பும் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை வடமராட்சி கிழக்கு பகுதி மக்களையும் இவ் வறுமை ஒழிப்புத் திட்டத்தின் கீழ் கொண்டுவருவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவரும் நிலையில் அடுத்த வருட நடுப்பகுதியில் இவை நடைமுறைப்படுத்தப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (உ-116)

# அபராதம் விதிப்பு

(யாழ்ப்பா்ணம்)

யாழ். நகரப்பகுதியில் உரிய ஆவணங்கள் இன்றி 49 சிசி மோட்டார் சைக்கிளை செலுத்திய 12 நபர்களுக்கு யாழ். நீதிமன்றம் அபராதம் விதித்துள்ளது.

குறித்த நபர்களை யாழ். பொலிஸார் கைது செய்து யாழ். மாவட்ட நீதிமன்றில் நேற்று முன்தினம் ஆஜர்படுத்தினர்.

வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட யாழ். மாவட்ட நீதிபதியும் நீதவான் நீதிமன்ற பதில் நீதவானுமாகிய அ. பிரேமசங்கர் குறித்த நபர் களுக்கு தலா 8 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து தீர்ப்பளித்தார்.

★ ★ ★

வாகன ஆசனப்பட்டி அணியாது வாகனத்தை செலுத்திய 12 பேருக்கு யாழ். நீதவான் நீதிமன்றம் 9ஆயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளது.

குறித்த நபர்களுக்கு எதிராக யாழ்.பொலிஸாரினால் பதிவு செய்யப்பட்ட வழக்கு நேற்று முன்தினம் யாழ். மாவட்ட நீதிபதியும் நீதவான் நீதிமன்ற பதில் நீதவானுமாகிய அ.பிரேம்சங்கர் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதில் நீதிபதி குறித்த நபர்களுக்கு தலா 750 ரூபா வீதம் அபராதத்தை செலுத்துமாறு உத்தரவிட்டார். (எஸ்)

# இலவச கண்பரிசோதனை

(யாழ்ப்பாணம்)

சமூக சேவை அடிப்படையில் உற்பத்தி செலவை பெற்றுக்கொள்ளும் முகமாக இலவச கண்பரிசோதனையும் மூக்குக் கண்ணாடி விநியோகமும் நாளை திங்கட்கிழமை காலை 9 மணிமுதல் பிற்பகல் 5 மணிவரை யாழ். மாவட்ட செயலகத்திற்கு அருகாமையில் உள்ள வை. எம்.சி.ஏ. மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இச்செயற்பாட்டில் குறைந்த விலையில் மூக்குக் கண்ணாடிகள் பெற்றுக்கொடுக்கப்படவுள்ளதுடன் கண்ணாடிகள் திருத்தி கொடுப்பதற்கான செயற்பாடுகளும் மேற்கொள்ளப்படவுள்ளதால் பொதுமக்கள் தவறாது கலந்து கொண்டு சேவையை பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (உ)





யாழ். இந்துக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா அண்மையில் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கல்லூரி அதிபர் வீ.கணேசராசா உரையாற்றுவதையும், பிரதம விருந்தினராக கலந்து கொண்ட திருமதி கோகிலாதேவி குகபாலன் மாணவன் ஒருவனுக்கு சான்றிதழ் வழங்குவதையும் கலந்துகொண்ட விருந்தினர்களில் ஒரு பகுதியினரையும் காணலாம்.

# கிளிநொச்சி, யாழ்ப்பாணம் மாவட்டங்களில் 6 உப தபாலகங்களை ஆரம்பிக்க ஏற்பாடு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி, யாழ். மாவட்டங்களில் மீண்டும் ஆறு உப தபாலகங்களை ஆரம்பிப்பதற்கு தபால் துறையமைச்சர் ஜீவன்குமார துங்க நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார். இவ்விடயம் தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான மு. சந்திரகுமார் அமைச்சருடன் மேற்கொண்ட கலந்துரையாடலை அடுத்தே இவ் ஆறு தபாலகங்களையும் உடனடியாக திறப்பதற்கு அமைச்சர் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

யாழ். மாவட்டத்தில் குரும்பசிட்டி, கீரிமலை, தனங்கிளப்பு ஆகிய பகுதிகளிலும், கிளிநொச்சி மாவட்டத்தில் கிளாலி, ஆனையிறவு, தட்டுவன்கொட்டி ஆகிய பகுதிகளிலும் இவ் உப தபாலகங்கள் அமையப்பெறவுள்ளன.

ஏற்கனவே, இப்பகுதிகளில் தபாலகங்கள் இயங்கிவந்த நிலையில் மீள்குடியேற்றத்தின் பின் இற்றை வரை இயங்கவில்லை. இதனை இப்பிரதேச மக்கள் நாடாளுமன்ற உறுப்பினரின் கவனத்திற்கு கொண்டு வந்ததனை அடுத்து அவரினால் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (29)

## நுளம்பு பரவக்கூடிய வகையில் செயற்பட்ட நபர்களுக்கு அபராதம்


(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளில் நுளம்பு பெருகுவதற்கான செயற்பாடுகளில் ஈடுபட்ட 14 பேருக்கு யாழ். நீதிமன்றம் 17 ஆயிரம் ரூபா அபராதம் விதிததுள்ளது.

குறித்த பகுதியில் டெங்கு நுளம்பு பரவக்கூடிய பழைய பொருட்கள், இளநீர், கோம்பைகள், ரயர்கள் என்பவற்றை வைத்திருந்த இந்நபர்களுக்கு எதிராக யாழ். பொலிஸார் யாழ். நீதிமன்றின் வழக்குத் தாக்கல் செய்தனர்.

நேற்று முன்தினம் மேற்படி வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட யாழ். மாவட்ட நீதிபதியும், நீதவான் நீதிமன்ற பதில் நீதவானுமாகிய அ. பிரேம்சங்கர் குறித்த நபர்களில் எட்டுப் பேருக்கு தலா ஆயிரம் ரூபா வீதமும் மன்றைய ஆறு பேருக்கு தலா ஆயிரத்து 500 ரூபா வீதமும் அபராதம் செலுத்துமாறும் செலுத்தத் தவறின் தலா ஒரு மாத சாதாரண சிறைத்தண்டனையை அனுபவிக்குமாறு உத்தரவிட்டார். (எஸ்)

## இடித்துக் கட்டப்பட்ட அரசடிப்பிள்ளையார் ஆலயம்



(தெல்லிப்பளை)

இணுவில் வைத்தியசாலையின் முன்பாக கே.கே.எஸ் வீதி ஓரத்தில் அமைந்திருந்த அரசடிப்பிள்ளையார் ஆலயம் இடித்து கட்டப்பட்டு புதுப்பொலிவுடன் காணப்படுகிறது.

முன்னர் இப்பிள்ளையார் ஆலயம் வீதி அகலிப்பு காரணமாக இடித்து அகற்றப்பட வேண்டிய நிலை ஏற்பட்டது. இந்நிலையில் அவ் ஆலயம் இடித்து அகற்றப்பட்டு அதே இடத்தில் ஊர்மக்களின் பெரும் முயற்சியின் பயனால் சற்று பின்னகர்த்தப்பட்டு புதிதாக அமைக்கப்பட்டுள்ளது. இவ் ஆலய கும்பாபிஷேக நிகழ்வு அண்மையில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (உ-44)

# வன்னிப் பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை

## அதிபர்கள் ஆதங்கம்

(கிளிநொச்சி)

வடமாகாணத்தில் இன்றும் பெரும்பாலான பாடசாலைகளில் ஆசிரியர்களின் பற்றாக்குறை நிலவி வருகின்ற அதே வேளை, வடமாகாணத்தில் உள்ள தேசிய பாடசாலைகளில் மேலதிகமாக ஆசிரியர்கள் காணப்படுவதாக வடமாகாணத்தைச் சேர்ந்த கல்வியலாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக, வடமாகாணத்தில் உள்ள தேசிய பாடசாலைகளில் மட்டும் 286 ஆசிரியர்களுக்கு அதிகமானவர்கள் மேலதிகமாகக் காணப்படுகின்றனர். இத்தகவல்களை வடமாகாண கல்வி அபிவிருத்திக் கூட்டத்தில் வைத்து சில பாடசாலைகளின் அதிபர்களால் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது.

குறிப்பாக, மீள்குடியேறிய வன்னிப் பிரதேசங்களில் பெரும்பாலான பாடசாலைகளில் இன்னமும் மிக மோசமான ஆசிரியர் வளப்பற்றாக்குறைகள் நிலவி வருகிறது. அத்தோடு பௌதீக ரீதியான வளப்பற்றாக்குறைகளும் பின்தங்கிய பிரதேச பாடசாலைகளில் மிக அதிகளவில் காணப்படுகிறது எனத் தெரிவிக்கப்பட்டது. (29)

## 2ஆம் ஆண்டு நிறைவு விழா

(யாழ்ப்பாணம்)

நெல்லியடி செலான் வங்கியின் 2ஆம் ஆண்டு நிறைவு விழா எதிர்வரும் 30 ஆம் திகதி காலை 8.30 மணிக்கு நெல்லியடி கிளையில் நடைபெறவுள்ளது. (உ-18)

## பதிவு செய்யவும்

(யாழ். நிருபர்)

பிரித்தானிய காரை நலன் புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் காரைக்கதம்பம் 2012ஆம் ஆண்டு பொங்கல்விழா நடத்தப்படவுள்ளது.

எதிர்வரும் ஜனவரி மாதம் 21 ஆம் திகதி சனிக்கிழமை இலண்டனில் நடைபெறவுள்ள இந் நிகழ்வுகளில் கலந்து கொண்டு நிழ்ச்சி செய்ய விரும்புபவர்கள் பிரித்தானிய காரை நலன்புரிச் சங்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (10)

## அமெரிக்கன் சிலோன் மிஷன் திருச்சபையின் இன்னிசை வழிபாடு

(யாழ்ப்பாணம்)

வன்னி மறை மாவட்ட அமெரிக்கன் சிலோன் மிஷன் திருச்சபையின் வருடாந்த இறைவருகை இன்னிசை வழிபாடு எதிர்வரும் 3ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு கிளிநொச்சி மத்திய கல்லூரி மண்டபத்தில் மறை மாவட்டத் தலைவர் அருட்திரு டி.எஸ். குகனேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், சிறப்பு அதிதியாக திருச்சபைத் தலைவர் அருட்திரு அ. ஜெயக்குமாரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். இந்நாளின் இறை செய்தியினை சபை முன்னாள் தலைவர் அருட்கலாநிதி எஸ் ஜெயநேசன் பகிரவுள்ளார்.

இவ்வழிபாட்டில் மன்னார், முல்லைத்தீவு, வவுனியா, கிளிநொச்சிப் பகுதிகளில் இருக்கும் மிஷன் திருச்சபைகளின் 20 திருச்சபைகளின் பாடல்கள், கலை நிகழ்வுகள் என்பன இடம்பெறவுள்ளதாக மன்ற மாவட்ட செயலாளர் அருட்திரு டி.எஸ். மதியாபரணம் தெரிவித்தார்.

## நத்தார் புதுவருட ஆரம்ப நிகழ்வு

கிளிநொச்சி அமெரிக்கன் சிலோன் மிஷன் திருச்சபை கிறிஸ்து அரசர் ஆலய நத்தார் புதுவருட ஆரம்ப நிகழ்வுகள் இன்று ஞாயிற்றுக் கிழமை ஆரம்பமாகி ஜனவரி மாதம் முதலாம் திகதி வரை நடைபெறவுள்ளது. இதின் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணிக்கு திருவிலிருந்து வழிபாடும், எதிர்வரும் 03ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு இறை வருகை வழிபாட்டில் மறையுரையை தென்னிந்திய திருச்சபையின் முன்னாள் தலைவர் அருட்கலாநிதி எஸ். ஜெபநேசன் வழங்கவுள்ளார்.

## ஸ்ரீதரின் இன்றைய பலன்

(27.11.2011 – ஞாயிற்றுக்கிழமை)

பஞ்சாங்கக் குறிப்புக்கள்
கர வருஷம்
கார்த்திகை 11 ஆம் நாள்.
இராகுகாலம் 4.42-6.12 சுபநேரம் 9.12-10.42
நட்சத்திரம்: மூலம் பி.இ. 12.48 வரை
திதி: துதியை மு.ப.8.55 வரை

இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது

**மேடம்:–** பணம்வரும், காரியசித்தி, குடும்பத்தில் மகிழ்ச்சி. வீண் கலவரம். தெருவிபத்து வரலாம்.

**ரிஷபம்:–** காரியத் தடை, பணக் கஷ்டம், இசைன உதவி, சான்றோர் பாராட்டு, தேகம் சுகம்.

**மிதுனம் :–** பணம் வரும். வேண்டாத செயல், மனக் கவலை, தொழில் ஆதாயம், தேக பலவீனம்.

**கடகம்:–** குடும்பத்தில் சுமை, சாசுக் கஷ்டம், தேகம் சுகம், சுபகாரியப்பேச்சு, வீண் அலைச்சல்.

**சிம்மம்:–** காசு வரும், குடும்பத்தில் குழப்ப நிலை, சகோதர வெறுப்பு, தேக ஆரோக்கியம்.

**கன்னி :–** குடும்பத்தில் கவலை, காசுக் கஷ்டம், எதிர்பாராத உதவி கிட்டும், இனசனம் பகை, தேகம் சுகம்.

**துலாம் :–** பணம் வரும், அவசரமான முழவு, வீண் பயம், உறவினர் வருகை, தேக சுகம்.

**விருச்சிகம்:–** சுபகாரியச் செலவு, பணம் வரும், சகோதர உதவி, வீண் அலைச்சல், மனக் குழப்ப நிலை.

**தனுசு:–** காசுக் கஷ்டம், சுற்றத்தார் ஆதரவு, மேலிடத்தோர் சினம், தொழில் மந்தம், உடல் சுகம்.

**மகரம:–** குடும்பத்தில் மகிழ்ச்சி, பணம் வரும். சான்றோர் பாராட்டு, வேண்டாத செயல், தேகம் சுகம்.

**கும்பம் :–** பணம் வரும், குடும்பத்தில் குழப்பம், இனசன கொண்டாட்டம், சுப காரியச் செலவு.

**மீனம் :–** முகங்கோணல், பணக் கஷ்டம், பயணத்தால் நன்மை, தேக ஆரோக்கியம், மனக் குழப்பம்.

# மாநகர முதல்வரின் பணிப்புரைக்கமைய வெள்ள நீரை அகற்றும் நடவடிக்கை



(யாழ்ப்பாணம்)

யாழ். நகரின் பல பகுதிகளில் தேங்கி நிற்கும் மழை நீரை அப்புறப்படுத்தும் துரித நடவடிக்கைகளை யாழ். மாநகர முதல்வர் யோகேஸ்வரி பற்குணராசா மேற்கொண்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் பருவ மழை ஆரம்பித்துள்ளதால் நகரின் பல பகுதிகளில் மழை நீர் வழிந்தோட முடியாமல் குறிப்பாக, நெடுங்குளம், கோவில் வீதி ,இந்துக்கல்லூரி வீதி, வண்ணார் பண்ணை மெதடிஸ் திருட்சபைக்கு அருகாமையில் செல்லும் வாய்க்கால்களில் தேங்கி நிற்கும் வெள்ளம் அப்பகுதிகளில் வசிக்கும் மக்களின் வீடுகளுக்குள் புகுந்து அவர்கள் குடியிருக்க முடியாத நிலையை மாநகர முதல்வர் நேரடியாகச் சென்று அவதானித்துள்ளார்.

இந்நிலையில் வீடுகளுக்கு முன் தேங்கி நிற்கும் நீரை பக்கோ இயந்திரம் மூலம் கடலுக்குள் செல்லுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மராமரத்துப் பகுதியினருக்கு அவர் பணிப்புரை வழங்கியதைத் தொடர்ந்து அவ்விதம் தேங்கி நிற்கும் நீரை அப்புறப்படுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இப்பணிகள் மாநகர முதல்வர் ,முதல்வரின் செயலாளர் ,மாநகர சபை பொறியியலாளர் ஆகியோர் மேற்பார்வையின் கீழ் நடைபெற்று வருகிறது.

துப்புரவு செய்யப்படாத வாய்க்கால்களில் தேங்கி நிற்கும் மழை வெள்ளம் மக்கள் குடியிருப்பு ஆரம்பிக்கப்படாத காலத்தில் நெடுங்குளம் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட மண் அகழ்வு காரணமாக ஏற்பட்ட பாரிய கிடங்குகளில் தேங்கி நிற்கும் வெள்ளம் ஆகியனவே மக்கள் வீடுகளுக்குள் புகுந்து அசௌகரிய நிலையை ஏற்படுத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.




## ரிஷபம்



கிருத்திகை, 2,3,4 பாதங்கள், ரோகிணி, மிருகசீர்ஷம் 1-2 பாதங்கள் வரை, பெயர் முதல் எழுத்துக்கள் இ ஈ உ எ ஒ வ வி வீ வு வே வோ

நீங்கள் நடுத்தர உயரம் உடையவர்கள், குறைவான நிறம் உடையவர்களாக இருந்தாலும் வசீகரமான தோற்றம் உடையவர்கள். அனைவரையும் கவரக்கூடிய அமைதியான முகத்தோற்றம் உடையவர்கள். எப்போதும் சிரித்த முகத்தோற்றம் உடையவர்கள் புதிய வித நூதனமான திட்டங்களை செயற்படுத்தி மற்றவர்களுடைய பாராட்டுக்களை வெகு சுலபத்தில் பெறுபவர்கள். உடல் தூய்மை, உள்ளத் தூய்மை உடையவர்கள். கொடுத்த வாக்கை எப்படியும் காப்பாற்ற நினைப்பீர்கள். தீர்கக தரிசனத்தால் எதையும் முன்கூட்டியே தெரிந்து கொள்ளக் கூடியவர்கள். எல்லாவிதமான சுகபோகங்களையும் வளமாக அமைத்துக் கொள்வீர்கள். அன்புள்ளங் கொண்ட நீங்கள் எல்லோரிடமும் பண்புடன் பழகுவீர்கள். கவலை என்பதே இல்லாதவர்கள்.

அதிர்ஷ்டத்தினாலும், பக்குவமான அணுகுமுறையினாலும் எந்தச் செயலிலும் வெற்றி காண்பீர்கள். அறிவாற்றல் உடையவர்கள். பிரச்சினை விவகாரங்களில் நல்ல தீர்வு காணக்கூடியவர்கள். கலையார்வம், ரசிப்புத் தன்மையும் வளமாகக் கொண்டவர்கள். சமயோசித சாமர்த்தியமும் உடையவர்கள். உலக அனுபவ ஞானம் உடையவர்கள். ஸ்திரீகளின் நட்பு உடையவர்கள். அவர்களால் அனுகூல ஆதாயங்கள் அதிகமாகவே அடிக்கடி பெறுபவர்கள். கல்வி கேள்விகளில் அதிக ஆற்றலும் தேர்ச்சியும் உடையவா் கள். பலன் உண்டு என்று தெரிந்தால் மட்டுமே காரியத்தில் ஈடுபடுவார்கள். தொழில் துறையில் நிதானமான உறுதியுடைய முன்னேற்றத்தை உடையவர்கள். இப்படிப்பட்ட உங்களுக்கு 2012 புத்தாண்டின் பலன்களைப் பற்றிப் பார்ப்போம்.

2012 இல் உச்ச ராகு சப்தம கேந்திரமும் சனி 6 மிடமும் பெறுவதால் எடுக்கும் முயற்சிகள் யாவற்றிலும் திருப்திகரமானதாக வெற்றிகளை அடையலாம். நண்பர்கள் வருகையும், விருந்துபசார நிகழ்ச்சிகளும், சுபகாரிய நிகழ்ச்சிகளுக்கான பேச்சு வார்த்தையும் நடைபெறும்.

குடும்பத்தில் பொன், பொருள், ஆடை துணிமணிகள் சேர்க்கைகள் யாவும் அமோகமாகச் சேரும். கணவன், மனைவி உறவுநிலையில் அன்பும் அனுசரணையும் குறையாமல் மேலோங்கி அமையும். குடும்பத்தில் ஒருவருக்கு ஒருவர் அனுசரணையுடன் செயற்படுவார்கள். பணவசதி பெருகும். அண்டை அயலவர்களுடன் சகஜ நிலை நட்புறவு அதிகரிக்கும். இருப்பிடத்தில் சௌகர்யங்கள் பெருகி வருவதுடன் நன்றாகச் செயற்படும். ஸ்தல வழிபாடுகள் பல குடும்பத்துடன் அமைய வாய்ப்பு உண்டாகும்.

24.01.2012 முதல் 14.04.2012 வரை செவ்வாய் வக்கிரக்தி பெறுவதால் இக்கால கட்டத்தில் மட்டும் சொத்துக்கள் வகையில் வீண் செலவு, அலைச்சல் கிரய விக்கிர வகைகளில் இழுபறி காணப்படும். கவனமுடன் செயற்பட நல்லது. 15.05.2012 முதல் 27.06.2012 வரை சுக்கிரன் வக்கிரம் அடைவதால் திடீர் சலிப்பு விரக்தி உருவாகும். எதிலும் பின்னணியாக இருந்து செயற்பட உத்தமம்.

16.05.2012 முதல் 04.08.2012 வரை சனி பகவான் தமது வக்கிர கதியில் மறுபடி கன்னி ராசியில் சென்று திரும்புவார். இக்காலம் 5 மிட பலன் மறுபடி தொடங்கி சஞ்சலம் தரும் என்றாலும், ஓரளவே இருக்கும் என பது குறிப்பிடத்தக்கது. எதிர்பாராத பெரிய தன இலாபம், தொழில் வரய்ப்பு அமையும்.

2012 முழுவதும் பண வசதிகள் தாராளமாகக் கிடைத்து வரும். தொழில் வளம் சிறந்து உங்களை பல சாதனைகளைச் செய்ய வைக்கும். எடுக்கும் முயற்சிகள் யாவும் நல்ல வெற்றியைக் கொடுக்கும். நண்பர்கள் நலம் புரிவார்கள். உறவினர்கள் வருகைகளும் குடும்பத்தில் நடக்க வேண்டிய சுப காரிய நிகழ்ச்சிகளை முடிப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெறும். சுபகாரியங்களை நல்லபடியாக நடத்தி முடித்து நிம்மதி அடைவீர்கள். உடல் நலம் உற்சாகமாகச் செயற்படும். கணவன் மனைவி உறவு நிலை திருப்திகரமாக இருக்கும். சந்தோசமான வாழ்க்கையே இப்போது உங்களுக்கு.

அரசாங்க உதவிகள் அதிகமான அலைச்சலின் பேரில் கிடைத்துவிடும். லோன் வாங்கி, பல காரிய சாதனைகள் செய்வீர்கள். தொழில், கூட்டுத் தொழில், சுயதொழில் வெளிதேசத் தொழில் முயற்சிகள் யாவும் நூற்றுக்கு ஐம்பதான பலன்களைக் கொடுக்கும். பதவி உயர்வு வேலைப்பளு மிக்க வகையில் வந்து சேரும். திருப்தியற்ற இடமாற்றம் வலிய வரும். பொறுப்புக்களை இழுத்துப் போட்டுக் கொண்டு அல்லதப்பட்டாலும் மதிப்பு, வெற்றி உயர்ந்து வரும். மொத்தத்தில் இது ஒரு யோகமான வருடமேயாகும்.

**பெண்களுக்கு:**

இப்போது உங்களுடைய உடல்நலம் ஆரோக்கியம் அடையும். குடும்பத்தில் பொன், பொருள் சேர்க்கை, ஆடை அணி மணிகள் சேர்க்கைகள் யாவும் அமோகமாசச் சேர்ந்து மனதுக்கு சந்தோசத்தையும், உற்சாகத்தையும் கொடுக்கும். கணவன், மனைவி உறவுநிலை நல்ல அன்னியோன்னியமாக இருக்கும். குழந்தைகளால் நல்ல பாக்கியம் சந்தோசமும் இருக்கும். பெற்றோர் வகையில் உதவிகரமாகச் செயற்படுவார்கள். உடன் பிறந்த சகோதரர்களால் நல்ல அன்பும் ஒத்துழைப்பும் கொடுத்து உதவுவார்கள். நினைத்தது நடக்கும் காலமிது.

**உத்தியோகத்தர்களுக்கு:**

இது நமக்கு கிடைக்காதா என்று நீங்கள் ஏங்கியிருந்த இடமாற்றத்தையோ பதவி உயர்வையோ இப்போது நீங்கள் அடையலாம். மேலதிகாரிகள் உங்கள் சொல்லுக்குக் கட்டுப்படுபவர்களாக நடந்து கொள்ள ஆரம்பிப்பார்கள். குடும்பத்தில் நடக்க வேண்டிய சுபகாரியங்கள் யாவும் இப்போது நடைபெறும்.

**வியாபாரிகளுக்கு:**

வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வியாபாரம் சூடு பிடிக்கும். எதிர்ப்புகளும் போட்டிகளும் இருந்த இடம் தெரியாமல் ஓடிவிடும். கூட்டு வியாபாரமும் புதிய வியாபாரமும் நல்லபடியாகக் கைகொடுக்கும். அதிகப்படியான இலாபம் கிடைப்பதால் சேமிப்பு எடுத்து வைத்து திருப்திப்படுவீர்கள்.

**தொழிலாளிகளுக்கு:**

இப்போது பல புதிய ஒப்பந்தங்கள் உருவாகி உங்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும். வேலைப் பளு குறைந்து சுலபமாக இருக்கும். யூனியன் மூலமாக முன்னேற்றத்திற்கான நல்ல தகவல்கள் கிடைக்கும். குடும்பத்தில் சுபகாரியங்கள் நடைபெறும்.

**விவசாயிகளுக்கு:**

விவசாயத்தில் இப்போது பல நூதனமான செயற்பாடுகளைக் கடைப்பிடித்து அமோகமான விளைச்சலை விளைவித்து அதிகப்படியான மகசூலைக் குவித்து மிகுந்த இலாபத்தை அடைவீர்கள். தடை, தாமதப்பட்டு வந்த காரியம் ஏதுவாயினும் இப்போது நிறைவேறலாம்.

**மாணவர்களுக்கு:**

கல்வி கேள்விகளில் சிறந்து விளங்குவீர்கள். டெக்னிகல் ஆட்டோ மொபைல் கல்வி தேர்ச்சி பரவாயில்லை. மேற்கல்வி, வாய்ப்பு, ஹாஸ்டல் வசதிகள் போன்றவை கிடைக்கப்பெறவும் உண்டு. சோம்பல், மறதி இவைகளைப் புறக்கணித்து தீவிர உழைப்பு இருப்பின் தேர்ச்சி நிச்சயமாகும்.

# மாணவர்களின் உடலில் காணப்படும் யுத்த சன்னங்களை அகற்ற ஏற்பாடு



(கொழும்பு)

வடபகுதியில் இடம்பெற்ற யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு உடம்பில் தோட்டாக்கள், ஷெல் துண்டுகள் காணப்படும் மாணவர்களுக்கு சிகிச்சை அளித்து அவற்றை அகற்ற நடவடிக்கை எடுப்பதாகப் பிரதி சுகாதார அமைச்சர் லலித் திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டு இரண்டாம் வாசிப்பு மீதான நான்காவது நாள் விவாதத்தில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் உரையாற்றினார். இவரின் உரைக்கு குறுக்கீடு செய்து பதிலளித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

யுத்தத்தினால் உடலில் ஷெல துண்டுகள், தோட்டாக்களின் பாகங்கள் என்பவற்றுடன் பல மாணவர்கள் இருப்பதாகவும் இவற்றை அகற்ற சிகிச்சை எதுவும் எடுக்கப்படவில்லை எனவும் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தார். இதற்குக் குறுக்கீடு செய்த பிரதி அமைச்சர் அவ்வாறான மாணவர்களின் விபரங்களை வழங்குமாறும் அவர்களின் உடலிலுள்ள தோட்டாக்கள் மற்றும் ஷெல் துண்டுகளை அகற்ற நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தனதுரையில்,

இடம்பெயர்ந்த மக்கள் மழையினால் பாதிக்கப்பட்டுள்ளனர். யுத்தத்தினால் உழவு இயந்திரங்களை இழந்த மக்களுக்கு அவற்றை வழங்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

உயிர் இழந்தவர்களுக்கான நஷ்டஈடு பெறுவதில் சிக்கல் காணப்படுகிறது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு நல்லெண்ணம் காட்டப்படவில்லை. ஷெல் வீச்சினால் பாதிக்கப்பட்டு உடலில் ஷெல் துண்டுகள் உள்ள மாணவர்கள் கல்வியைத் தொடர முடியாது அவஸ்தைப்படுகின்றனர்.

பாதிக்கப்பட்ட மக்களின் விபரங்களைதர அரச அதிகாரிகள் பயப்படுகின்றனர். யுத்தத்தினால் எத்தனை பேர் இறந்துள்ளனர், காயமடைந்துள்ளனர். எததனை மாணவர்களின் உடல்களில் சன்னங்கள் உள்ளன. போன்ற விபரங்களைத் திரட்ட வேண்டும் எனவும் கோருகின்றேன் என்றார்.

# வருமானவரி அலுவலர் இலஞ்ச ஊழலில் கைது

(கொழும்பு)

இலஞ்ச குற்றச்சாட்டின் பேரில், தேசிய வருமான வரித் திணைக்களத்தின் மாத்தறை அலுவலக மதிப்பீட்டு உத்தியோகத்தர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.தவணைக் கட்டணங்களைக் குறைத்து அறிக்கை தயாரித்து வழங்குவதற்காக வல்கம பகுதி வர்த்தகரிடம் ஒரு இலட்சம் ரூபா இலஞ்சம் கோரியுள்ளதாக இலஞ்ச - ஊழல் விசாரணை ஆணைக்குழு குறிப்பிடுகின்றது.

இந்தத் தொகையில் 75 ஆயிரம் ரூபா பெற்றுக்கொண்ட சந்தர்ப்பத்தில், சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டதாகவும் இலஞ்ச - ஊழல் விசாரணை ஆணைக்குழு தெரிவிக்கின்றது

# ஊழியர்களின் வாக்குவாதம் கைகலப்பில் முடிந்தது


(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலை சாதாரண தொழிலாளிக்கும் அமைய ஊழியருக்கும் இடையே ஏற்பட்ட வாக்குவாதம் கைகலப்பில் முடிந்துள்ளது.

இரத்தப் பரிசோதனைக் கூடத்திற்கு அருகாமையில் இருவருக்கும் இடையில் நடைபெற்ற வாக்குவாதமே இறுதியில் சண்டையில் முடிந்துள்ளது.

இந்தச் சம்பவத்தைக் கேள்வியுற்ற வைத்தியர் பொலிஸ் நிலையத்திற்கு அழைப்பை மேற்கொண்டு முறைப்பாடு செய்துள்ளார்.

பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். தாக்குதலில் காயமடைந்தவருக்குச் சிகிச்சையளிக்கப்பட்டுள்ளது. (எஸ்)



**பருத்தித்துறை முகைதீன் ஹமீதியா ஜும்மா பள்ளிவாசலுக்கு நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம் அண்மையில் விஜயம் செய்தார். பருத்தித்துறை கிராம சபை உபதலைவர் எஸ்.நாகநாதன் உரையாற்றுவதையும். அமைச்சர், இணைப்பாளர், பள்ளித் தலைவர்கள் அருகில் அமர்ந்திருப்பதையும் காணலாம். (105)**

# 750,000 ஆவது உல்லாசப் பயணிக்கு கட்டுநாயக்காவில் கௌரவிப்பு

(கொழும்பு)

இலங்கைக்கு இவ்வருடம் வருகை தந்த 750,000 ஆவது வெளிநாட்டு உல்லாசப் பிரயாணி நேற்றுமுன்தினம் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வரவேற்கப்பட்டார். இலங்கை உல்லாசப் பயணத்துறையில் இது புதிய சாதனையாகும். வருடமொன்றில் 700,000 இற்கும் அதிகமான உல்லாசப் பிரயாணிகள் இலங்கைக்கு வருவது இதுவே முதல் தடவையாகும்.

பலஸ்தீனத்தைச் சேர்ந்த கட்டாரில் வசிப்பவர்களான மொஹமட் அல் பார்டினி, அவரின் மனைவி மொனா அலாத்தர் ஆகியோரே இவ்வருடத்தின் 750,000 ஆவது உல்லாசப் பயணிகளாக இலங்கை வந்துள்ளனர்.

டோஹாவிலிருந்து நேற்றுமுன் தினம் மாலை கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த இவ்விருவரும் இலங்கை உல்லாசப் பிரயாண சபை மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு ஆகியவற்றைச் சேர்ந்த குழுவினரால் வரவேற்கப்பட்டனர். அவர்களுக்கு இலங்கை உல்லாச பிரயாண சபையினால் விசேட பரிசும் சலுகைப் பொதியொன்றும் வழங்கப்பட்டன. இதற்கு முன் அதிகபட்சமாக கடந்த வரும் 654, 476 உல்லாசப் பயணிகள் இலங்கைக்கு வந்தமை குறிப்பிடத்தக்கது.



# யாழ்.புதிய சிறைச்சாலைக்கு டிசம்பர் 4 இல் அடிக்கல்

(யாழ்ப்பாணம்)

யாழ்பாணத்தில் சிறைச்சாலை அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு எதிர்வரும் டிசம்பர் 4 ஆம் திகதி நடைபெறவுள்ளது. இதற்காக 58.5 கோடி ரூபா நிதி ஒதுக்கீடு செய்துள்ளதாக புனரமைப்பு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் சந்திர சிரி கஜதீர தெரிவித்தார்.

யாழ்பாணத்தில் பன்னைய் பிரதேசத்தில் 3.5 ஏக்கர் நிலப்பரப்பில் 2000 பேர் தங்குமளவுக்கு இடவசதிகளைக் கொண்டதாக புதிய வடிவத்தில் அமைக்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# விளையாட்டை மேம்படுத்த அரும்பாடு படுகின்றோம்

## டயமன்ஸ் கழகச் செயலாளர் பிரசன்னா

(நெல்லியடி)

அல்வாய் டயமன்ஸ் கழகம் வருடந்தோறும் பல இலட்சக்கணக்கான நிதியை விளையாட்டிற்கென செலவழித்து வருவதுடன் சிறந்த நிர்வாகக் கட்டமைப்பையும் கொண்டு விளக்குகிறது என கழகத்தின் செயலாளர் எஸ். பிரசன்னா தெரிவித்துள்ளார்.

அல்வாய் பகுதியில் கால்பந்தாட்ட வீழ்ச்சி குறித்து பத்திரிகையில் வெளியான செய்திகளுக்குப் பதிலளித்து கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வடமராட்சியில் கால்பந்தாட்டச் சூழல் எமக்கு அச்சுறுத்தலாகவே அமைகின்றது. போட்டிகளை ஒழுங்கமைக்கும் ஒழுங்கமைப்பாளார்கள், நிர்வாகங்கள், வீரர்கள், பயிற்றுநர்கள் மற்றும் பார்வையாளர்கள் கூட அச்சுறுத்தலாக அமைவதால் எமது வீரர்கள் பெரும் உளப்பதிப்பிற்குள்ளாகின்றனர்.

மேலும் 2010ஆம் ஆண்டில் சென் மேரிஸ் நடத்திய சுற்றுப் போட்டியில் எமது அணியே சம்பியன் ஆனது. இன்றும் சென் றோக்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் சுற்றுப் போட்டியில் வடமராட்சியிலிருந்து நான்கு அணிகள் பங்குபற்றின. அதில் எமது அணி மட்டுமே இரண்டாம் சுற்றில் விளையாடி வருகிறது.

2010ஆம் ஆண்டு பருத்தித்துறை கால்பந்தாட்ட லீக்கில் எமது அணி வீரர்கள் மூவர் விளையாடினர். அதில் பிறேம்குமார் 16 கோல் போட்டு கோல் மன்னன் என்ற பட்டத்தையும் பெற்றுள்ளார்.

இம்முறை நடைபெற்ற லீக்கிற்கான தெரிவில் சில முரண்பாடுகள் காரணமாக நாம் அதில் பங்குபற்றவில்லையே ஒழிய நாம் தகுதி இல்லை என்று தெரிவு செய்யாமல் இல்லை.

பருத்தித்துறை கால்பந்தாட்ட லீக்கில் சுமார் 30 அணிகள் இருந்தபோதும் விரல் விட்டு எண்ணக்கூடிய அணிகள் மாத்திரமே இத்தெரிவிற்குச் சென்றுள்ளது. ஏனைய எல்லா அணிகளையும் சேர்த்து தெரிவு நடத்த முடியாமல் இருப்பது யார் குற்றம்? மேலும் எமது அணி வீரர் பிறேம்குமார் மட்டுமே தேசிய அணிப் பயிற்சிக் குழாமில் இடம்பிடித்துள்ளார் எனவும் தெரிவித்தார். (12)



அண்மையில் நடைபெற்ற சங்கத்தானை ஸ்ரீமுருகன் முன்பள்ளியின் விளையாட்டு விழாவில் சாவகச்சேரி நகர சபையின் முன்னாள் நூலகர் பாலசுப்பிரமணியம் வெற்றிபெற்ற மாணவிக்கு பரிசில் வழங்கிக் கௌரவிப்பதனைக் காணலாம். (11)

## அவுஸ். தொடருக்கான இந்திய அணி அறிவிப்பு

### ஹர்பஜன் மீண்டும் புறக்கணிப்பு

(புதுடில்லி)

அவுஸ்ரேலியா டெஸ்ட தொடருக்கான அணியிலிருந்து யுவராஜ்சிங், ஹர்பஜன் சிங் நீக்கப்பட்டுள்ளனர்.

அவுஸ்ரேலியா டெஸ்ட் தொடருக்கான 17 பேர் கொண்ட இந்திய அணியின் விபரம் இந்திய கிரிக்கெட் சபையால் நேற்று வெளியிடப்பட்டது.

இதில் மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கெதிரான தொடரில் சிறப்பாகச் செயற்பட்ட ஓஜா, அஷ்வின் ஆகியோர் அணியில் இடம்பிடித்துள்ளதுடன் வேகப்பந்து வீச்சாளர் சகீர்கானும் இடம்பிடித்துள்ளார்.

இதேவேளை, பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட ஹர்பஜன்சிங், யுவராஜ்சிங் ஆகியோர் நீக்கப்பட்டுள்ளனர்.

17 பேர் கொண்ட இந்திய அணி வீரர்கள் விபரம்: டோனி (கப்டன், விக்கெட் கீப்பர்), கம்பீர், சேவாக், ராவிட், சச்சின் வி.வி.எஸ்.லட்ஸ்மன், ஹோலி, அஸ்வின், இஷாந்த் சர்மா, உமேஷ் யாதவ், வருண் ஆரோன், ரோஹித் சர்மா, ஓஜா, அஜன்கியா ரஹானே, பிரவீன் குமார், விரித்திமன் சஹா மற்றும் சகீர்கான்.

இதேவேளை, மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கெதிரான ஐந்து போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரின் முதல் மூன்று போட்டிகளுக்கான இந்திய அணி நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டது.

இத்தொடருக்கான அணித் தலைவராக சேவாக் நியமிக்கப்பட்டுள்ள துடன், டோனி, சச்சினுக்கு ஓய்வளிக்கப்பட்டுள்ளது.

15 பேர் கொண்ட இந்திய அணி: சேவாக (கப்டன்), கம்பீர் (துணைக் கப்டன்), பார்த்திவ் பட்டேல் (விக்கெட் கீப்பர்), ரெய்னா, ஹோலி, அஜின்கியா ரகானே, ரோகித் சர்மா, மனோஜ் திவாரி, ரவிந்திர ஜடேஜா, பிரவீண் குமார், வினய் குமார், வருண் ஆரோன், உமேஷ் யாதவ், அஷ்வின், ராகுல் சர்மா.

## பாகிஸ்தான் வெற்றி

(அபுதாபி)

அபுதாபியில் நடைபெற்ற இலங்கை அணியுடனான ருவென்ரி 20 கிரிக்கெட் போட்டியில் பாகிஸ்தான் அணி 5 விக்கெட்டுக்களால் வெற்றியீட்டியுள்ளது.

இப்போட்டியில் முதலில் துடுப் பெடுத்தாடிய இலங்கை அணி 19.3 ஓவர்களில் 141 ஓட்டங்களுடன் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.


இதில் தினேஷ் சந்திமால் 44 பந்துகளில் 56 ஓட்டங்களைப் பெற்றார். இலங்கை அணியின் கடைசி 7 விக்கெட்டுக்கள் 22 ஓட்டங்கள் இடைவெளியில் வீழ்ந்தன. பந்துவீச்சில் அய்ஸாஸ் சீமா 34 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 19.3 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. மிஸ்பா உல் ஹக் 38 பந்துகளில் ஆட்ட மிழக்காமல் 48 ஓட்டங்களைப் பெற்றர். போட்டியின் ஆட்டநாயகனாக சீமா தெரிவானார்.

## லண்டன் ஒலிம்பிக் போட்டியில் 200 மீற்றரில் தங்கம் எனக்கே

(லண்டன்)

200 மீற்றம் ஓட்டம் என்பது எனக்கு மிகவும் பிடித்தமான ஒன்று. இதற்காகவே கடந்த சில ஆண்டுகளாக சிறப்பான முறையில் பயிற்சி எடுத்து வருகிறேன். லண்டன் ஒலிம்பிக் போட்டியிலும் 200 மீற்றர் ஓட்டப் போட்டியில் என்னை யாராலும் வெல்ல முடியாது என ஜமைக்காவின் தங்கமகன் உசைன் போல்ட் தெரிவித்துள்ளார்.



எங்களது பயிற்சி முகாமுக்கு யோகன் பிளேக் வந்த போதே, எனக்கு சரியான போட்டியாக வருவார் என்று நினைத்தேன். பயிற்சியின் போது ஒரு சில முறை என்னை வென்றுள்ளார். ஆனால் இதுவெல்லாம் ஒரு பொருட்டல்ல என்று நினைப்பேன். ஆனால், கடுமையான போட்டியை தருவார் என எதிர்பார்க்கின்றேன்.

மிகவும் நகைச்சுவை உணர்வு உள்ளவர். இளம் வயது என்பதால், எப்போதும் வேடிக்கையாக பேசிக்கொண்டு இருப்பார். தேவையான நேரங்களில் ஓய்வாக இருக்க வேண்டும் என்று நான் அறிவுரை செய்துள்ளேன்.

சமீபத்திய போட்டிகளில் யோகன் பிளேக், எப்படி வென்றார் என்பது எனக்கு அதிர்ச்சியாக உள்ளது. ஏனெனில், டிராக்கின் கார்னர் பகுதியில் இருந்து ஓடுவதில் அவருக்கு அவ்வளவு அனுபவம் இல்லை. இருப்பினும், சிறந்த வீரரான அவர் போட்டியில் வென்றது மகிழ்ச்சி தான்.

மற்றபடி, யோகன் பிளேக் மற்றும் அனைத்து வீரர்களுக்கும் ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். 100 மீ., ஓட்டத்தில் என்ன வேண்டுமானாலும் நடக்கலாம். 200 மீ., ஓட்டம் என்பது எனக்கு மிகவும் பிடித்தமான ஒன்று. இதற்காகவே கடந்த சில ஆண்டுகளாக சிறப்பான முறையில் பயிற்சி செய்து வருகிறேன். இதில் யோகன் பிளேக்கை வெல்ல விடமாட்டேன். வேறுயாரும் வெற்றி பெறவும் முடியாது. இதனை அவரிடமும் தெரிவித்து விட்டேன் எனவும் தெரிவித்தார்.

## மீண்டும் தோல்வி



(லண்டன்)

லண்டனில் நடைபெற்று வரும் முன்னணி வீரர்கள் பங்குபற்றும் ரென்னிஸ் தொடரின் லீக் போட்டி ஒன்றில் கோஜோவிச் மீண்டும் தோல்வியடைந்துள்ளார்.

'ஏ' பிரிவில் நேற்று முன்தினம் நடந்த ஒரு ஆட்டத்தில் முதல் நிலை வீரர் செர்பியாவின் ஜோகோவிச் 6-3, 3-6, 3-6 என்ற செட் கணக்கில் செர்பியாவின் டிப்சரேவிச்சிடம் அதிர்ச்சிகரமாக வீழ்ந்தார்.

இத்தொடரில் 2ஆவது தோல்வியைத் தழுவியதன் மூலம் ஜோகோவிச்சின் அரையிறுதி வாய்ப்பு கேள்விக்குறியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, முன்னணி வீரர் நடால் இத்தொடரிலிருந்து வெளியேற்றப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

## மே.தீவுகள் சிறப்பான பந்து வீச்சு இந்தியாவின் வெற்றி பறிபோனது


(மும்பை)

ராம்போல், பிஷோ, டரன் சமி ஆகியோரின் சிறப்பான பந்து வீச்சின் மூலம் இந்திய அணியின் வெற்றி வாய்ப்பு ஒரு ஓட்டத்தால் கைநழுவியது. இருப்பினும் டெஸ்ட் தொடரை 2-0 என்ற கணக்கில் இந்திய அணி கைப்பற்றியது.

இரு அணிகளுக்குமிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் மூன்றாவதும், இறுதியுமான டெஸ்ட் போட்டி நேற்று மும்பையில் நிறைவடைந்தது.

இரண்டாவது இனிங்ஸில் இரண்டு விக்கெட்டுக்களை இழந்து 81 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் நேற்றைய ஐந்தாம் நாள் ஆட்டத்தை மேற்கிந்தியத்தீவுகள் அணி தொடர்ந்தது. ஓஜா, அஷ்வின் ஆகியோரின் சுழற்பந்து வீச்சை எதிர்கொள்ளத் திணறிய மேற்கிந்தியத்தீவுகள் அணி ஏனைய எட்டு விக்கெட்டுக்களையும் 43 ஓட்டங்களுக்குள் பறிகொடுத்தது. இறுதியில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 134 ஓட்டங்களை மேற்கிந்தியத்தீவுகள் பெற்றது. இதில் டரன் பிராவோ 48, பரத் வைற்ட் 35 ஓட்டங்களைப் பெற்றனர். மற்றைய அனைத்து வீரர்களும் ஒற்றை இலக்குடன் ஆட்டமிழந்தனர். பந்து வீச்சில் ஓஜா 47 ஓட்டங்களைக் கொடுத்து ஆறு விக்கெட்டுக்களையும், அஷ்வின் 34 ஓட்டங்களைக் கொடுத்து நான்கு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 64 ஓவர்களில் 243 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் இந்திய அணி களமிறங்கியது. இதில் சேவாக், ஹோலி ஆகியோர் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி இந்திய அணியை வெற்றியின் விளிம்பு வரை கொண்டு சென்றனர். இருப்பினும் மேற்கிந்தியத்தீவுகள் அணியின் சிறப்பான பந்து வீச்சின் மூலம் இந்திய அணியின் வெற்றிக் கனவு கைகூடவில்லை. இந்தியாவின் வெற்றி ஒரு ஓட்டத்தால் கைநழுவியது. இறுதியில் நிர்ணயிக்கப்பட்ட ஓவர்கள் நிறைவில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 242 ஓட்டங்களைப் பெற்று போட்டியைப்



சமநிலைப்படுத்தியது. இதில் சேவாக் 60, ஹோலி 63, ராவிட் 33, லக்ஸ்மன் 31 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ராம்போல் மூன்று, டரன் சமி, பிஷோ தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர். நேற்றைய இறுதி நாள் ஆட்டத்தில் 17 விக்கெட்டுக்கள் வீழ்த்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. போட்டியின் ஆட்டநாயகனாகவும் ... தொடரின் நாயகனாகவும் 'அஷ்வின் தெரிவானார்.

# வடக்கில் இராணுவ மயமாக்கலை முடிவிற்கு கொண்டுவர வேண்டும்

## அமெரிக்க செனட் சபை உறுப்பினர்கள் வலியுறுத்து

(கொழும்பு)

இலங்கைக்கான அமெரிக்காவின் உதவிகள் பயனளிக்கக் கூடியதாகவும் மற்றும் மீள் நல்லிணக்கம் வெற்றியளிக்க வேண்டுமெனில் இலங்கை அரசாங்கத்தால் வடக்கில் மேற்கொள்ளப்படும் இராணுவ மயமாக்கல் முடிவிற்குக் கொண்டுவரப்பட வேண்டுமென அமெரிக்க செனட் சபையின் மூன்று உறுப்பினர்கள் அமெரிக்க வெளியுறவுச் செயலர் ஹிலாரி கிளின்டனுக்கு எழுதியுள்ள கடிதத்தில் வலியுறுத்தியுள்ளார்.

செனட் சபை உறுப்பினர்களான Patrick Leahy, Benjamin, L.Cardin  மற்றும் P.Casey ஆகியோரால் கையெழுத்திடப்பட்ட இக்கடிதத்தில் கைது செய்யப்பட்டவர்கள் மீது சட்டத்திற்குப் புறம்பான படுகொலைகள் மற்றும் போரற்ற வலையமாகப் பிரகடனப்படுத்தப்பட்ட பகுதிக்குள் மருத்துவமனைகளை இலக்கு வைத்துப் படையினர் மேற்கொண்ட எறிகணைகள், குண்டு வீச்சுத் தாக்குதல்கள் தொடர்பாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேவேளை அமெரிக்கா எதிர்பார்க்கும் சுதந்திரத்தன்மை மற்றும் நம்பகத்தன்மை சார்ந்த அடிப்படைத் தரங்களைப பேண உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழு தவறுமாயின் இரு தரப்பிலும் மோசமான போர்க் குற்றங்களுக்குப் பொறுப்பானவர்களை சட்டத்தின் முன் நிறுத்துவதற்குரிய நகர்வினை இலங்கை அரசாங்கம் முன்னெடுக்காது விடுமாயின்-சுதந்திரமான அனைதுலக விசாரணைப் பொறிமுறை ஒன்றினை அமைப்பதற்குரிய அழுத்தத்தினைப் பிரயோகிக்க வேண்டுமெனத் தங்களைக் கோருகின்றோம் என இக்கடிதத்தில் மேலும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் ஆய்வறிக்கையை தாமதப்படுத்தியது மட்டுமல்ல, தமது உள்ளகப் பரிந்துரைகளை ஒன்றைக்கூட நிறைவேற்றவில்லை என்பதோடு, பொறுப்புக் கூறலுக்குரிய விசாரணைகளையும் இலங்கை அரசாங்கம் வலியுறுத்தவில்லை.

ஐக்கிய நாடுகள் சபை நிபுணர்கள் குழுவின் அறிக்கையில் ஆவணப்படுத்தப்பட்டுள்ள போர்க்குற்றச்சாட்டுகளுக்குரிய பொறுப்புக்கூறல் விசாரணைகளுக்குரிய நம்பகமான நடவடிக்கைளை இலங்கை அரசாங்கம் இந்த ஆண்டு இறுதிக்குள் முன்னெடுக்காவிடின், அனைத்துலகப் பொறிமுறையினை அமைப்பதற்குரிய அழுத்தத்தினை வெளிப்படையாக அமெரிக்கா தலைமையேற்க வேண்டும்.

ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைகள் ஆணைக்குழு அல்லது ஐக்கிய நாடுகள் சபை செயலாளர் நாயகத்தின் அதிகாரத்தின் கீழ் அனைத்துலகப் பொறிமுறை அமைக்கப்பட வேண்டுமென இக்கடிதத்தில் செனற் சபை உறுப்பினர்களால் வலியுறுத்தப்பட்டுள்ளது.

## ஜனாதிபதியின் உரை நூல் வடிவில்

(கொழும்பு)



ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நாடாளுமன்றத்தில் நிகழ்த்திய உரைகள் அடங்கிய நூலொன்று நாளை மறுதினம் அலரி மாளிகையில் வெளியிடப்படவுள்ளது.

"மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதி அன்று நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரைகள்" எனும் பெயரில் இந்நூல் எழுதபபட்டுள்ளது. 1970 மே மாதம் 27ஆம் திகதி நடைபெற்ற நாடாளுமன்றத் தேரதலில் நாடாளுமன்றத்திற்குத் தெரிவான வயதில் மிகவும் குறைந்த நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்ட மஹிந்த ராஜபக்ஷ 1970 ஜூன் மாதம் 07ஆம் திகதி சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

ஜனாதிபதி அன்று முதல் 2005 ஆம் ஆண்டு வரையில் நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரைகள் இந்நூலில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இந்நூலை ஜனாதிபதி தகவல்கள் மற்றும் ஆவணங்கள் நிலையம் வெளியிட்டுள்ளது.

## நாடாளுமன்ற உறுப்புரிமை பறிப்பு; பொன்சேகாவின் மனுவிசாரணை ஒத்திவைப்பு



(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர் பதவி பறிக்கப்பட்டமைக்கு எதிர்ாக சரத் பொன்சேகா தாக்கல் செய்த மனு மீதான விசாரணை கொழும்பு நீதிமன்றால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.


நாடாளுமன்ற உறுப்பினர் பதவி பறிக்கப்பட்டமைக்கு எதிராக சரத் பொன்சேகா தாக்கல் செய்த மேன்முறையீட்டு மனு மீதான விசாரணை நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றால் விசாரணை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. குறித்த மனு எதிர்வரும் டிசெம்பர் 15ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என மேன்முறையீட்டு நீதிமன்றம் அறிவித்துள்ளது.

ரஞ்சித் டி சில்வா தலைமையிலான மூன்று நீதியரசர்கள் குழு முன்னிலையில் குறித்த மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, மனுதாரர் மற்றும் பிரதிவாதிகள் தரப்பில் முன்வைக்கப்பட்ட கருத்துக்களைப் பரிசீலித்த நீதிமன்றம் விசாரணையை பிற்போட்டுள்ளது.

இரண்டாவது இராணுவ நீதிமன்றில் தனக்கு 30 மாதகால சிறைத் தண்டனை விதிக்கப்பட்டதை அடுத்து தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைப் பறிக்க நாடாளுமன்ற செயலாளர் நடவடிக்கை எடுத்தமை சட்டவிரோதமானது என அறிவிக்கும்படி கோரி சரத் பொன்சேகா மேன்முறையீடு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பொன்சேகாவைப் பலவீனப்படுத்த அரசாங்கம் தீவிரம் காட்டியது

### அமெரிக்கத் தூதரகம் தெரிவித்ததாக விக்கிலீக்ஸ் தகவல்




(கொழும்பு)

இலங்கையின் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவை பலவீனப்படுத்த அரசாங்கம் கூடுதல் முனைப்புக் காடடியது என அமெரிக்கத் தூதரகம் தெரிவித்துள்ளதாக விக்கிலீக்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது.

சரத் பொன்சேகா ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டால் சிங்கள வாக்குகள் சிதறடிக்கப்படலாம் என ராஜபக்ஷ சகோதரர்கள் கருதியதாக இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகத்தினால் அந்நாட்டு இராஜாங்கத் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்ட குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

சரத் பொன்சேகா அமைதியான முறையில் பதவியை ஓய்வு பெற்றுக்கொள்ள வேண்டுமென்றே அரசாங்கம் விரும்பியதாக அமெரிக்கத் தூதுவர் பற்றீசியா புட்டீனாஸ் சுட்டிக்காட்டியிருந்தார்.

எனினும், சரத் பொன்சேகா வேறு விதமாகச் சிந்தித்து தீர்மானம் எடுத்துள்ளார் எனக் குறிபபிடப்பட்டுள்ளது. அமெரிக்க உள்துறை திணைக்களம் சரத் பொன்சேகாவிடம் விசாரணை நடத்த ஆர்வம் காட்டியதா? இல்லையா? என்பது தெரியவில்லை என புட்டீனாஸ் சுட்டிக்காட்டியுள்ளார்.

ராஜபக்ஷக்களை அச்சுறுத்தும் நோக்கில் இந்தத் தகவல்களை சரத் பொன்சேகா திரிபுபடுத்தி வெளியிட்டாரோ தெரியவில்லை, என புட்டீனாஸ் தெரிவித்திருந்தார்.

உண்மை நிலைமை எவ்வாறு இருப்பினும் சரத் பொன்சேகாவிடம் அமெரிக்க அதிகாரிகள் விசாரணை நடத்தும் விவகாரம் இலங்கை அரசாங்கத்தை பெரிதும் பாதித்துள்ளது என அவர் சுட்டிக்காட்டியிருந்தார்.

2009ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 2ஆம் திகதி அப்போதைய வெளிவிவகார அமைச்சர் ரோஹித்த பொகொல்லாகமவுடன் நடைபெற்ற சந்திப்புக் குறித்து அமெரிக்கத் தூதரகம் குறிப்புக்களை அனுப்பிவைத்துள்ளது.

## 2009 நவம்பருக்குப் பின்னர் இலங்கையில் 882 பேர் கடத்தல்

(கொழும்பு)

2009ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் இது வரை 882 பேர் கடத்தப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் மா அதிபர் என்.கே. இளங்கோன் தலைமையிலான பொலிஸ் குழுவினால் தயாரிக்கப்பட்டுள்ள புதிய அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

முறைப்பாடுகளுக்கு அமைய 875 முறைப்பாடுகள் தீர்க்கப்பட்டுள்ளன என்றும் இச்சம்பவங்களுடன் தொடர்புடையதான 849 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

இவற்றுள் குறித்த சில சம்பவங்கள் மாத்திரமே தனிப்பட்ட விரோதங்கள் காரணமாக இடம்பெற்றுள்ளன என்றும் ஏனையவை பணத்திற்காக மேற்கொள்ளப்பட்ட் கடத்தல் சம்பவங்கள் என்றும் தெரியவந்துள்ளது.

2009ஆம் ஆண்டில் 398பேரும் கடந்த வருடத்தில் 237 பேரும் இவ்வருடத்தில் 247பேரும் கடத்தப்பட்டுள்ளனர் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## கொழும்பு - தூத்துக்குடி கப்பலை தடுத்துவைக்க நீதிமன்றம் உத்தரவு

(கொழும்பு)




கொழும்புக்கும் தூத்துக்குடிக்குமிடையில் சேவையில் ஈடுபட்டுவந்த எம்.டி ஸ்கொட்டியா பிரின்ஸ் கப்பலை கொழும்புத் துறைகத்தில் தடுத்துவைக்குமாறு கொழும்பு வர்த்தக மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. கொழும்பு 3இல் அமைந்துள்ள நிறுவனம் ஒன்றின் சார்பில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் அடிப்படையிலேயே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. எம்.ஏ.ராசிக் அன் கம்பனி லிமிட்டட் என்ற நிறுவனத்தினர் இந்த வழக்கைத் தாக்கல் செய்திருந்தனர்.

கடந்த ஒக்டோபர் மாதம் தாம் இந்தக் கப்பலுக்கு 478, 173.23 அமெரிக்க டொலர்களுக்கு எரிபொருள் வழங்கியதாகவும் அதற்குரிய பணத்தினை இந்தக் கப்பலை சேவையில் ஈடுபடுத்தியோர் வழங்கவில்லையென்றும் இந்தப் பணத்தினைப் பெற்றுத் தர வேண்டுமெனக் கோரியே இந்த வழக்கினை குறித்த நிறுவனம் தாக்கல் செய்திருந்தது. இந்தக் கப்பல் சேவையினை மும்பையிலுள்ள பிளமிங்கோ நிறுவனமே நடத்தி வந்தது. இந்த நிறுவனத்துக்கு எதிராகவே வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

நீதிபதி டபிள்யூ.பி.டி.எல். ஜயதிலக முன்னிலையில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது சிரேஷ்ட சட்டத்தரணி கே.பூபாலசிங்கத்தின் அனுசரணையுடன் சட்டத்தரணி தமயந்தி பிரான்சிஸ் மனுதாரர் சார்பில் ஆஜராகியிருந்தார்.

மனுதாரர் தரப்பு வாதங்களை செவிமடுத்த நீதிபதி, குறித்த கப்பலைத் தடுத்துவைக்குமாறு துறைமுக அதிகாரசபைக்கு உத்தரவிட்டதுடன் வழக்கு விசாரணையினை எதிர்வரும் 7ஆம் திகதிக்கு ஒத்திவைத்துள்ளார்.

## வடமாகாண விஞ்ஞான வினாடி வினாவிடை வவுனியா தெற்கு வலயத்திற்கு 14 இடங்கள்

(வவுனியா)

வடமாகாண மட்டத்தில் பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்பட்ட தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல விஞ்ஞான வினாடி வினாவிடைப் போட்டிகளில் வவுனியா தெற்கு வலயத்தைச் சேர்ந்த மாணவர்கள் 14 இடங்களைத் தட்டிக்கொண்டுள்ளனர்.

யாழ்.கல்வி வலயம் 9 இடங்களையும், வடமராட்சி கல்வி வலயம் 6 இடங்களையும், தென்மராட்சி கல்வி வலயம் 3 இடங்களையும், கிளிநொச்சி கல்வி வலயம் 2 இடங்களையும், மன்னார் வலிகாமம் ஆகிய கல்வி வலயங்கள் தலா ஒரு இடத்தையும் பெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

# ஆசிரியையின் கொலையைக் கண்டித்து மூதூரில் கல்விச் சமூகத்தினர் ஊர்வலம்



(மட்டக்களப்பு)

மூதூர் கிழக்கில் இடம்பெற்ற ஆசிரியையின் கொலையைக் கண்டித்தும் கொலையாளிகளைச் சட்டத்தின் முன் நிறுத்துமாறு கோரியும் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் இணைந்து நேற்றுமுன்தினம் பெரும் கண்டன ஊர்வலத்தினை நடத்தியுள்ளனர்.

இந்த ஊர்வலத்தில் ஆயிரக் கணக்கான மாணவர்களும், ஆசிரியர்களும் கலந்துகொண்டனர். சேனையூர் மத்திய கல்லூரி முன்பாக முற்பகல் 11.45 மணியளவில் ஆரம்பமான இந்த ஊர்வலம் நாவலடிச் சந்தி சம்பூர் பொலிஸ் நிலையத்தின் முன் வீதியூடாகச் சென்று கொலையுண்ட ஆசிரியையின் வீட்டிற்கு முன்பாக முடிவடைந்தது.

ஊர்வலத்தில் சென்ற ஆசிரியர்களும், மாணவர்களும் கொலையைக் கண்டிக்கும் வாசகங்கள் எழுதப்பட்ட சுலோக அட்டைகளையும் மலர் வளையங்களையும் ஏந்தியிருந்தனர். இவர்கள் கறுப்புப் பட்டியை அணிந்தும் தமது எதிர்ப்பை வெளிக்காட்டினர்.

ஆசிரியையின் கொலையையடுத்து நடைபெறவிருந்த பரீட்சைகள் மற்றும் கல்வி நடவடிக்கைகள் பாடசாலைகளில் இடம்பெறவில்லை. இவை பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# தொழிற் பயிற்சி நெறிகளுக்கு கிளிநொச்சியில் விண்ணப்பம் கோரல்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து வாகன ஓட்டுனர் தாதியர் பயிற்சி, நீர்க்குழாய் பொருத்துதல், குளிரூட்டி திருத்தம் ஆகிய தொழிற பயிற்சிகளுக்கு தேசிய பயிலுனர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

இம் மாவட்டத்தில் வேலை வாய்ப்பற்றிருக்கும் இளைஞர், யுவதிகளுக்கென ஜனவரி 2 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ள இத்தொழிற் பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் அடுத்த மாதம் 26ஆம் திகதிக்கு முன்பதாக தேசிய பயிலுனர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை, மாவட்ட அலுவலகம், ஆனந்தபுரம், கிளிநொச்சி என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு அதிகார சபையின் மாவட்ட முகாமையாளர் அறிவித்துள்ளார்.

மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள விரும்பும் விண்ணப்பதாரிகள் 021-2285615 தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறும் மாவட்ட முகாமையாளர் அறிவித்துள்ளார்.

## இராணுவச் சிப்பாய் கைது செய்யப்பட்டார்

(கொழும்பு)

பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடைய இராணுவச் சிப்பாய் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர். களுத்துறை காவல் நிலையத்தைச் சேர்ந்த அதிகாரிகளினால் குறித்த படைச்சிப்பாய் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேக நபரிடமிருந்து ரி-56 ரக துப்பாக்கி மற்றும் தோட்டாக்களும் மீட்கப்பட்டுள்ளன.

சந்தேக நபரிடம் நடத்தப்பட்ட ஆரம்பகட்ட விசாரணைகளின் போது பல்வேறு உண்மைகள் புலப்பட்டுள்ளதாகவும், குறித்த படைச் சிப்பாய் பாரிய குற்றச் செயற்களுடன் தொடர்புடையவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# யாழ்ப்பாணம் வந்துகொண்டிருந்த சொகுசு பேருந்துகள் விபத்து

## நடத்துனர் பலி, 12 பேர் படுகாயம்

(கொழும்பு)

புத்தளம் - சிலாபம் வீதியில் மங்களஎலிய பகுதியில் பயணிகள் பேருந்துகள் விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்ததோடு 12 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்று கொண்டிருந்த இரு சொகுசு பேருந்துகள் ஒன்றை ஒன்று முந்திச் செல்ல முற்பட்ட வேளையில் இவ்விபத்து ஏற்பட்டுள்ளது.

முந்திச் செல்ல முற்பட்ட பேருந்து மற்றைய பேருந்துடன் மோதிய பின் கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது. விபத்தில் குறித்த பேருந்தின் நடத்துனரே உயிரிழந்துள்ளார். விபத்தில் காயமடைந்தவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

# வேலையற்ற பட்டதாரிகளினை ஒன்றிணைக்கும் செயற்றிட்டம்

(கிளிநொச்சி)

வன்னி மாவட்ட வேலையற்ற பட்டதாரிகளை ஒன்றிணைக்கும் செயற்றிட்டத்தினை வவுனியா மாவட்ட தமிழ் பட்டதாரிகள் சங்கத்தினர் மேற்கொண்டுள்ளனர். இது தொடர்பாக அச்சங்கத்தின் அமைப்பாளர் இரா.ஜெயமோகன் தெரிவிக்கையில்,

வவுனியா மாவட்ட பட்டதாரிகள் சங்கம் வன்னி தேர்தல் மாவடட வேலையற்ற பட்டதாரிகளின் தேவைகளை கருத்தில் கொண்டு வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் மாவட்ட வேலைவாய்ப்பற்ற பட்டதாரிகளைப் பதிவு செய்கின்ற நடவடிக்கையை டிசம்பர் முதலாம் திகதியில் இருந்து 5 ஆம் திகதி வரை காலை 9 மணி முதல 4 மணிவரை வவுனியா சுத்தானந்தா இந்து இளைஞர் சங்கத்தின் முதலாம் மாடியில் முன்னெடுக்கவுள்ளது.

பட்டதாரிகளை ஒன்றிணைத்தல், அவர்களுக்கான தொழில் மற்றும் நலன்சார் செயற்பாடுகளை மேம்படுத்தல் முதலியவற்றை மையமாக கொண்டு மேற்கொள்ளப்படவுள்ள இச்செயற்பாட்டிற்கு பட்டதாரிகள் தமது கல்வித்தகுதிச்சான்றிதழ், தேசிய அடையாள அட்டை, பிறப்பு அத்தாட்சிப்பத்திரம், நற்சான்றிதழ் பத்திரம் ஆகியவற்றின் பிரதிகளுடன் சமூகமளிக்குமாறு அவர் கேட்டுள்ளார். (125)

# வெள்ளத்தில் மூழ்கியது பயிர்கள் விவசாயிகள் பெரும் நட்டம்

(வவுனியா)

வன்னிப் பகுதியில் கடும் மழை காரணமாக தமது விவசாய நிலங்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளதாக விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

தொடர்ச்சியாகப் பெய்து வரும் மழை காரணமாக வயல் நிலங்கள் நீரில் மூழ்கியுள்ளதுடன் குளங்கள் பெருக்கெடுத்துள்ளமையினால் குளத்து நீர் விளை நிலங்களினூடாக அடித்துச் செல்வதால் பயிரிடப்பட்ட தானியங்கள் அழித்துள்ளது. நெல், உழுந்து, பயறு மற்றும் கௌப்பி என்பன வெள்ளம் காரணமாக அழிவடைந்துள்ளன.

இதேவேளை மீள்குடியேற்றம் செய்யப்பட்ட பல பகுதிகளில் முதல் முறையாக விவசாயம் செய்ய முற்பட்ட நிலையில் இவ்வாறான இயற்கை அனர்த்தத்தால் நெற்செய்கை பாதிப்படைந்துள்ளமை தமக்கு பெரும் வேதனையாகவுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர். (125)

# நவீன நீர்ப்பாசன முறைகள் மூலம் வாழைச் செய்கையை வளமாக்கலாம்

## பொறியியலாளர் இரவீந்திரன் சயந்த

(யாழ்ப்பாணம்)

எமது பிரதேசத்தில் வாழைச் செய்கையை ஊக்குவித்து உற்பத்தியை அதிகரிக்க முடியும் என பொறியியலாளர் இரவீந்திரன் சயந்த தெரிவித்துள்ளார்.

நவீன நீர்ப்பாசனவியல் தொழில்நுட்பம் பற்றிய ஆய்வினை மேற கொள்வதற்காக நீர்வேலியைச் சேர்ந்த பொறியியலாளர் இரவீந்திரன் சயந்த இந்தியா சென்று திரும்பியுள்ளார்.

தற்போது கிளிநொச்சி மாவட்டத்தில் பொறியியலாளராகக் கடமையாற்றிவரும் இவர் "ஜெயின் எரிக்கேஷன்" திட்டத்தின் கீழ் வழிநடத்தப்படும் மைக்ரோ எரிக்கேசன் திட்டம் பற்றிய ஆய்வினை மேற்கொள்வதற்காகவே இந்தியா சென்று வந்துள்ளார்.

இந்தியாவின் மகாராஷ்டிரா ஜல்கோன் மற்றும் மும்மை போன்ற இடங்களுக்குச் சென்று அங்கே நவீன முறைப்படி செய்யப்படும் நுண் விவசாயச் செயற்றிட்டங்களை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்திருக்கிறார்.

இது தொடர்பாக கருத்துரைக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.


அவர் மேலும் தெரிவிக்கையில்,

நவீன மரபின்படி எப்படி வாழைச் செய்கையை ஊக்குவித்து வளர்ச்சி பெறலாம் என்பது பற்றி இந்தியா சென்று ஆய்வு செய்துள்ளேன்.

எமது பிரதேசத்திலும் நான் மேற்கொண்ட ஆய்வின் மூலம் வாழைச் செய்கையை ஊக்குவித்து உற்பத்தியை அதிகரிக்க முடியும் என்றார். (10)

# சிறு நீரகங்கள் பாதிக்கப்பட்ட நான்கு பிள்ளைகளின் தந்தை


வவுனியா யங்கராவூரைச்சேர்ந்த 52 வயதுடைய 4 பிள்ளைகளின் தந்தையான சுப்பிரமணியம் யோகராஜா என்பவர் இரண்டு சிறுநீரகங்களும் பாதிப்படைந்த நிலையில் காணப்படுவதனால் இவரைப் பராமரிக்கும் மருத்துவர்கள் சிறுநீரக மாற்று சத்திர சிகிச்சை செய்ய வேண்டும் என சிபாரிசு செய்துள்ளனர். எனவே O+ (ஓ பொசிரிவ்) சிறுநீரகம் தேவைப்படுவதனால் தாராள குணம் படைத்தவர்கள் 0750975422 சிறுநீரகம் தந்துதவுமாறும் அவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும் எனவும் குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர். (125)





வடமாகாண ஆரம்பக் கல்விப் பாடசாலை மாணவர்களுக்கான, பரிசளிப்பு நிகழ்வு நேற்று கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெற்றது. இந்நிகழ்வில் வடமாகாண ஆளுநரின் பிரதிச் செயலாளர் ஆர்.சிவசுவாமி மாணவி ஒருவருக்கு விருது வழங்கிக் கௌரவிப்பதையும், மாணவர்களின் கலை நிகழ்வையும் காணலாம்.

# Safe mode எதற்காக?




விண்டோஸ் தன்னைப் பராமரிப்பு பணிகளில் ஈடுபடுத்திக் கொள்ள ஏற்படுத்தியுள்ள அமைப்பு தான் சேவ் மோட். இந்த மோடில் அடிப்படையான சில டிரைவர் புரோகிராம்கள் மட்டுமே கம்ப்யூட்டரில் லோட் செய்யப்படுகின்றன.

சி.டி. ரொம், பிரிண்டர் மற்றும் தேவைப்படாத சில உபகரணங்கள் இதில் இயங்காது. உங்கள் பெர்சனல் கம்ப்யூட்டரில் பிரச்சினை இருக்கையில் இந்த சேவ் மோடினைப் பயன்படுத்துவது நல்லது. எடுத்துக் காட்டாக புதிய வீடியோ கார்ட் ஒன்றை நிறுவி இருக்கிறீர்கள். புதியதாக ஒன்று கிட்டியுள்ள பரவசத்தில் தவறான டிரைவர் புரோகிராமினை இன்ஸ்ரோல் செய்துவிட்டீர்கள் என்று வைத்துக் கொள்வோம். இது எதில் முடியும் என்றால் வீடியோ டிஸ்பிளே எதுவும் இல்லாது செய்துவிடும். இந்நேரத்தில் சேவ் மோடில் சென்றால் இதனை பிக்ஸ் செய்து விடலாம். சில புரோகிராம்களில் பிரச்சினை இருந்தாலும் இதன் மூலம் சரி செய்துவிடலாம்.

ஒரு குறிப்பிட்ட புரோகிராமை இயக்குகையில அடிக்கடி * "illegal operation"* என்று செய்தி வருகிறதா? அப்படியானால் இந்த புரோகிராமினை சேப் மோடில் இயக்கிப் பார்த்து இந்த புரோகிராமில் ஏதேனும் பிரச்சினை உள்ளதா என்று தெரிந்து கொள்ளலாம். ஆனால் சேவ் மோடில் புரோகிராம் சரியாக இயங்கினால் இன்னொரு புரோகிராம் அல்லது தேவைப்படாத டிரைவர் இதில் தலையிடுவதாக முடிவு செய்து கொள்ளலாம். (எல்லா சொப்ட்வேர் புரோகிராம்களும் சேவ் மோடில் இயங்காது. இருந்தாலும் முயற்சி செய்து பார்க்கலாம்) சேவ் மோடில் செல்ல எப் 8 கீயை விண்டோஸ் பூட் ஆவதற்காக தயாராகுகையில் அழுத்தவேண்டும். முதல் விண்டோஸ் ஸ்கிரீன் தோன்று முன்பே இதனை மேற்கொள்ள வேண்டும்.

எப்போதாவது நமக்கு கிடைக்கும் ஒரு சில படங்களில் காணப்படும் எழுத்து வகைகள் நாம் ரசிக்கும்படி காட்சி தரும். இந்த Font இருந்தால் நன்றாக இருக்குமே என்று எண்ணுவோம். ஆனால் அந்த Font பெயர் என்னவென்று தெரியாமல் எப்படி தேடுவது? இதற்கு வழிகாட்டுகிறது ஓர் இணைய தளம். அதன் முகவரி: *http://www.myfonts.com/WhatTheFont/ *

இந்தத் தளம் எப்படி செயற்படுகிறது? வெகு எளிது.

முதலில் எந்த டெக்ஸ்ட்டில் உள்ள எழுத்து அல்லது படத்தில் இணைந்த எழுத்து குறித்து சந்தேகம் உள்ளதோ அதன் Scan செய்யப்பட்ட படத்தை எடுத்து வைத்துக் கொள்ளுங்கள், Scan செய்திடாமல் பட பைலாக இருந்தால் இன்னும்

## இந்த எழுத்து எங்கு இருக்கும்?

வசதி. இந்த தளத்தைத் திறந்து உங்கள் கம்ப்யூட்டரில் உள்ள Scan செய்யப்பட்ட பைல் அல்லது இமேஜ் பைலை அப்லோட் செய்திடுங்கள். அதற்கு இந்தத் தளத்திலேயே வசதி உள்ளது. உடன் இந்தத் தளம் அந்த எழுத்து என்ன என்று கண்டுபிடித்துச் சொல்லும். இமேஜைக் கொண்டு ஒவ்வொரு எழுத்தாக அது சரிதானா என்று உங்களிடம் கேட்கும். நீங்கள் சரியென்று தோன்றினால் உடனே அந்த எழுத்து பைல் உங்களுக்குக் கிடைக்கும். இந்தத் தளத்தினால் கண்டு பிடிக்க முடியவில்லை என்றால் அதனை *What The Font Forum* என்ற அமைப்பிற்கு அனுப்பலாம். இதன் உறுப்பினர்கள் எவரேனும் எழுத்து என்ன வகை என்று கண்டறிந்து சொல்வார்கள்.

எழுத்துக்கள் குறித்து தீவிரமாக செயல்படுபவர்களுக்கு இந்த தளம் ஒரு உதவிடும் தளமாகும்.


## கேர்சர் காட்டும் குறிப்பு

சில புரோகிராம்களின் ஐகொன்கள் மீதாகக் கர்சரைக் கொண்டு சென்றால், அந்த புரோகிராம் குறித்த சிறிய குறிப்பு காட்டப்படும். நீங்களே அதனை அமைக்கலாம். அந்த Shortcut அல்லது ஐகொன் மீது ரைட் கிளிக் செய்திடுங்கள். கிடைக்கும் மெனுவில், Properties தேர்ந்தெடுக்கவும். கிடைக்கும் விண்டோவில் கமெண்ட் (Comment) என்று ஒரு கட்டம் இருக்கும். அதில நீங்கள் விரும்பும் வகையில் குறிப்பினை எழுதி, பின்னர் அப்ளை (Apply) பட்டனிலும் ஓகே பட்டனிலும் கிளிக் செய்து வெளியேறவும்.

இதுவே பைல் ஐகொனாக இருந்தால், Properties தேர்ந்தெடுத்து, பின்னர் சம்மரி (Summary) என்ற பிரிவில் உள்ள Comment பொக்ஸில் நீங்கள் விரும்புவதை எழுதி, அப்ளை (Apply) கிளிக் செய்து வெளி யேறினால், நீங்கள் எழுதிய கொமென்ட் மொத்த தகவல் கட்டத்தில் மற்ற தகவல்களுடன் கிடைக்கும்.

## Fire fox இல் சுலபமாக தேடலாம்

கூகுள் தன் குரோம் பிரவுசரில், தன் கூகுள் சேர்ச் இஞ்சினைத் தந்திருப்பது போல, பயர்பொக்ஸ் பிரவுசரில் இத்தகைய சேர்ச் இஞ்சின் இலலை. ஆனால் அதற்கான ஆட் ஒன் தொகுப்பு ஒன்று இணையத்தில் கிடைக்கிறது. மிகவும் வேகமாகத் தகவல்களைத் தேடித் தருகிறது. இதனை பயர் பெர்க்ஸ் பிரவுசருடன் இணைத்து இயக்க லாம். இதன் பெயர் சைபர் சேர்ச் (Cybersearch).




1. உங்கள் பயர்பொக்ஸ் பிரவுசரை முதலில் இயக்கவும்.
2. அடுத்து https://addons.mozilla.org/enUS/firefox/addon/ 7931 என்ற முகவரியில் உள்ள தளத்திற்குச் செல்லவும். அங்கு "add to Firefox" என்று இருக்கும் பச்சை வண்ண பட்டனில் கிளிக் செய்திடவும். தானாக் ஆட் ஒன் இணைக் கப்படும். இனி மீண்டும் பயர்பொக்ஸ் பிரவுசரை மூடி மீண்டும் திறக்கவும். இப்போது சைபர் சர்ச் இயக்கத்தினைத் தர பயர்பொக்ஸ் தயாராக இருக்கும்.
3. அட்ரஸ் பாரில் டைப் செய்திடும்போதே, தளங்கள் வேகமாகத் தேடித் தரப்படுவதனைக் காணலாம்.

# கம்ப்யூட்டர் ஒன்றின் வேகத்தினை அதிகப்படுத்தக் கூடிய சில வழிகள்



### 1. check disk:

உங்களுடைய ஒப்பரேட்டிங் சிஸ்டமும், டேட்டாவும் உங்கள் ஹார்ட் ட்ரைவல் பதியப்பட்டு தங்குகின்றன. சில மாதங்கள் அல்லது ஆண்டுகள் கழிந்த பின்னர், முறையற்ற வழியில் கம்ப்யூட்டரின் இயக்கத்தை நிறுத்துவதாலும், மற்றும் சில காரணங்களினாலும், ஹாரட் டிஸ்க்கின் சில இடங்களில், மோசமான பாதிப்புகள் ஏற்பட்டு, அந்த இடத்தில் உள்ள டேட்டா படிக்கப்பட முடியாமல் போகலாம். இந்த டேட்டா, உங்கள் ஒப்பரேட்டிங் சிஸ்டம் சம்பந்தப்பட்டது எனில், உங்கள் கம்ப்யூட்டர் இயங்கத் தொடங்க சற்று அதிக நேரம் ஆகலாம். இது போன்ற பிரச்சினைகளை டிஸ்க் செக்கிங புரோகிராம் மூலம் சரி செய்துவிடலாம்.

விண்டோஸ் எக்ஸ்புளோரர் திறந்து சி ட்ரைவ் என்பதில் ரைட் கிளிக் செய்யவும். Properties கிடைக்கும். Tools தேர்ந்தெடுக்கவும். இதில் "Check now" என்ற பட்டனில் கிளிக் செய்யவும். இந்த விண்டோவில் உள்ள இரண்டு பெட்டிகளிலும் டிக் அடையாளம் உள்ளதை உறுதி செய்து கொள்ளவும். அதன் பின்னர் Start என்பதில் கிளிக் செய்யவும். உங்கள் ட்ரைவின் கொள்ளளவின் அடிப்படையில் இதற்குச் சற்று நேரம் ஆகலாம். உங்கள் சி ட்ரைவ் இந்த வகையில் Scan செய்யப்படுகையில், வேறு எந்த வேலையையும் கம்ப்யூட்டரில் மேற்கொள்ளாமல் இருப்பது நல்லது. இவ்வாறு Scan செய்யப்படும் முன், கம்ப்யூட்டர் தானாகவே ரீஸ்டார்ட் ஆகித் தான் செயற்படத் தொடங்கும். இதே போல மற்ற ட்ரைவ்களுக்கும் Scan மேற்கொள்வது நல்லது.

இதே வேலையை ரன் கட்டத்தில், Chkdsk C: என்ற கட்டளை கொடுத்தும் மேற்கொள்ளலாம்.

இந்த வழி தான் கம்ப்யூட்டரின் ஹார்ட் டிஸ்க்கில் உள்ள பழுதடைந்த செக்டார் பிரிவுகளை சரி செய்திடும் சிறந்த வழி ஆகும்.

### 2. தேவையற்ற டேட்டாவினை நீக்குக:

பல புரோகிராம்களைத் தொடர்ந்து இன்ஸ்டோல் செய்வதனால், நம் கம்ப்யூட்டரின் இயக்க வேகம் குறையத் தொடங்கும். எனவே நமக்கு ஒரு காலத்தில் தேவைப்பட்ட, இப்போது நாம் தொடாத புரோகிராம்களை அன் இன்ஸ்டோல் செய்வது நல்லது. இதனை முறையான அன் இன்ஸ்டோல் மூலம் செய்திட வேண்டும். இதனால் நீக்கப்படும் புரோகிராம் சார்ந்த அனைத்து பைல்களும் நீக்கப்படும்.

அடுத்தபடியாக, கம்ப்யூட்டர் தன் இயக்கத்தின் போது ஏற்படுத்திக் கொள்ளும் தற்காலிக பைல்களை நீக்க வேண்டும். இதற்கு System Tools என்ற போல்டரில், Accessories என்ற பிரிவில் இருக்கும் Disk Cleanup என்ற புரோகிராமினைப் பயன்படுத்தலாம். இதன் மூலம் எந்த ட்ரைவ் சுத்தப்படுத்தப்பட வேண்டுமோ, அதனைத் தேர்ந்தெடுத்து இந்த கட்டளையை இயக்கலாம். இந்தச் செயற்பாடு, டிஸ்க்கை Scan செய்து, எந்த பைல்களை நீங்கள் நீக்கலாம் என்று உங்களுக்கு வழி காட்டும். நீங்களும் தேவையற்ற பைல்களைத் தேர்ந்தெடுத்து நீக்கலாம். இதன் மூலம் தேவையற்ற ஒரு புரோகிராம் சார்ந்த அனைத்து பைல்களையும் நீக்கலாம்.

### 3. ஹார்ட் ட்ரைவினை Defrag செய்க:

டிஸ்க்கில் இருக்க வேண்டிய டேட்டா பைல்கள் குறித்து முடிவு எடுத்து, தேவையற்ற டேட்டாவின நீக் கிய பின்னர், Disk Defrag menter புரோகிராமினை இயக்கலாம். இதன் மூலம் பல இடங்களில் சிதறலாகப் பதியப்பட்ட பைலை ஒன்றிணைக் கலாம். இதனால் பைல் ஒன்றைத் தேடுவதன் நேரம் குறையும். கம்ப்யூட்டரின் செயல் வேகம் அதிகரிக் கும்.

இதற்கு விண்டோஸ் எக்ஸ்புளோரர் திறந்து, சி ட்ரைவ் மீது ரைட் கிளிக் செய்யவும். பின்னர் Tools கிளிக் செய்து "Defragment now" பட்டன் மீது கிளிக் செய்திடவும். இந்த விண்டோவில் காணப்படும் இரண்டு பெட்டிகளிலும் டிக் அடையாளம் இருப்பதனை உறுதி செய்து கொள்ளவும்.

இந்த செயற்பாட்டினை, நீங்கள் கம்ப்யூட்டரில் உருவாக்கும் பைல்களின் எண்ணிக்கைகளுக்கேற்ப, வாரம் ஒரு முறை அல்லது பத்து நாட்களுக்கு ஒரு முறை எனக் கால வரையறை செய்து கொண்டு மேற்கொள்ளலாம்.

### 4. ட்ரைவர் பைல்களை மேம்படுத்துக:

ஹார்ட்வேர் தயாரிக்கும் நிறுவனங்கள் அனைத்தும், தங்கள் சாதனங்களின் இயக்கத்தில் ஏற்படும் பிரச்சினைகளின் அடிப்படையில், அவற்றை இயக்கும் ட்ரைவர் பைல்களை மேம்படுத்து கின்றன.

எனவே, குறிப்பிட்ட கால இடை வெளியில், கம்ப்யூட்டரின் ஹார்ட்வேர் அனைத்திற்குமான ட்ரைவர் புரோகிராம்களை, அந்த நிறுவனங்களின் தளங்களுக்குச் சென்று அப்டேட் செய்திட வேண்டும்.

### 5. Solid state disk பயன்படுத்துக:

இந்த மாற்றத்தினை இப்போது அனைவராலும் மேற்கொள்ள முடியாது என்றாலும், இதனை இங்கு குறிப்பிட்டாக வேண்டும். தற்போதைய சுழலும் ஹார்ட் டிஸ்க்குகளுக்குப் பதிலாக, அண்மைக் காலமாக, Solid state disk என்று ஒரு வகை ஹார்ட் டிஸ்க் வந்துள்ளது.

இதன் சிறப்பு என்னவென்றால், எத்தனை மாதங்கள், ஆண்டுகள் இதனைப் பயன்படுத்தினாலும், இதன் செயல் வேகம் குறையாது. Data Defrag செய்தல் என்னும் பேச்சுக்கே இதில் இடமில்லை. மிகவும் குறைவான மின் சக்தியை இது பயன்படுத்துகிறது.

இது செயற்படுகையில் இதன் எந்த பகுதியும் நகர்ந்து செயற்படுவ தில்லை என்பதால், இந்த டிஸ்க் எந்தவிதமான அதிர்ச்சிக்கும் ஆளாவதில்லை.

ஆனால், இதன் விலை நாம் வழக்கமாகப் பயன்படுத்தும் ஹார்ட் டிஸ்க்கினைக் காட்டிலும் அதிகம் என்பதால், பலரும் இதனை வாங்கிப் பயன்படுத்தத் தயங்குகின்றனர்.

தண்ணீர் மூலமே செல்போன்கள் அதிக அளவில் பாழாகிறது என்கிறது ஓர் ஆய்வு. நம் ஆறாம் விரலாகிப்போன செலபோன்களை நாம் அடிக்கடி மாற்றிக்கொண்டே இருக்கிறோம். செல்போன்களை மாற்றுவதற்கு முக்கிய காரணம் ஒன்று அது பாழாகியிருக்க வேண்டும் அல்லது தொலைந்து போயிருக்க வேண்டும்.



செல்போன்கள் எவ்வாறு பாழாகிறது என்பது குறித்து இங்கிலாந்தில் ஒரு செல்போன் நிறுவனம் ஆய்வு செய்தது. 18 வயதுக்கு மேற்பட்ட 2,000 பேரிடம் நடத்தப்பட்ட ஆய்வில் சுமார் 73 சதவீதம் பேர் தண்ணீர் மூலம்தான் செல்போன்கள் பாழாகிறது என்று கூறியுள்ளனர்.

தண்ணீரிலும் கழிவறைதான் முதலிடம் பிடித்துள்ளது. இரண்டாவதாக தேனீர், கோப்பி, மது போன்றவை சிந்துவதால் செல்போன்

# செல்போன்களின் வில்லன்!

கள் பாழாகிறது. மூன்றாவதாக குளியல் அறை, நான்காவதாக சமையல் பாத்திரங்கள் கழுவும் இடம், அதற்கு அடுத்ததாக சிலர் சட்டைப் பைகளில் செல்போன்கள் இருக்கும்படியாக வோஷிங்மெஷினில் போட்டு துவைத்துவிடுகின்றனர் என்கிறது ஆய்வு முடிவு.

உலகிலேயே அதிக செல்போன்களை உபயோகப் படுத்துவதில் இங்கிலாந்துக்கு 14 ஆவது இடம். முதலிடம் சீனாவுக்கு. அங்கு 95 கோடி செல் போன்கள் புழக்கத்தில் உள்ளனவாம்.

# மஞ்சள் பத்திரிகையுடன் மாவை ஐயா!



புதினங்கள் புதிசு புதிசா நாட்டில நடக்குது பாருங்கோ, இப்ப புதிசா என்ன புதினம் எண்டால் கூடடமைப்புப் பதிவுக்கு மாட்டன் எண்டு முரண்டு பிடிக்கிற தமிழரசுக்கட்சி தங்கட கட்சிக்கு ஆக்களச் சேக்கிறதுக்கு முழுச் சவரையில பாடுபடுகினமாம் என்ன?

தமிழரசுக்கட்சி கறை படியாத ஆக்களைக் கொண்ட கட்சி, அதால அந்தக் கட்சிக்கு வாங்கோ, இனிவருங் காலத்தில கறைபடாத எங்கட கட்சியத்தான் நாங்கள் தமிழ் மக்களின்ர பிரதிநிதிகளாகக் கொண்ட கட்சியாக வைச்சிருக்கப்போறம் எண்டு அவையள் ஒற்றக் கால்ல நிக்கினமாம் என்ன?

கூட்டமைப்பு வீட்டுச் சின்னத்தில கேட்ட படியால்தான் இப்பிடி வெண்டது எண்ட வியாக்கியானத்தையும் அவையள் வைச்சிருக்கினையாம் எண்டு கேள்வி. ஆனால் பாருங்கோ இந்த விசயத்தில மாவை ஐயா தீவிரமா ஈடுபட்டிருக்கிறதா சொல்லுகினம் என்ன?

அவர் கையில வைச்சிருக்கிற கைப் பையில நிறைய மஞ்சள் கலர் பேப்பர் இருக்குமாம். ஆராவது வசதியான தொழில் அதிபர்மார், கொஞ்சம் பிரபல்யமான ஆக்கள் மாட்டினால் உடன பையத் திறந்து ஒரு பேப்பர் எடுத்துக் குடுப்பாராம். நீங்கள் தமிழரசுக்கட்சியில சேருங்கோ. இனிமேல் காலத்தில நாங்கள் மட்டும் தான் தமிழ் மக்களுக்கு வழிகாட்டப் போறம் எண்டு.

அவர் குடுக்கிற மஞ்சள் பேப்பரில தமிழரசுக் கட்சிக்கு ஆக்கள் சேர்க்கிறதுக்கான விபரங்கள் இருக்குமாம் எண்டால் பாருங்கோவன் "ஐயா எப்பிடித் தீவிரமாக இருக்கிறார் எண்டு..


*- சுரேஷ் ஆதரவு இணையத்தளத்தில்*

இங்கிலாந்து இளவரசர் வில்லியம், லண்டனின் பக்கிங்காம் அரண்மனையில் உள்ள, "நோர்த் ஒப் வேல்ஸ்" என்ற பகுதியல் வசிக்கிறார். கதேயுடன் திருமணம் ஆன பின்பும், அதே பகுதியில் தான் வசிக்கிறார். இளவரசர் வில்லியமுக்கு நீண்ட நாட்களாக ஒரு ஆசை இருந்து வந்தது. திருமணம் ஆனதும், காலம் சென்ற, தன் தாயார் டயானா, வசித்து வந்த கென்சிங்டன் அரண்மனையில் வசிக்க வேண்டும் என்று! இதுவும், பக்கிங்காம் அரண்மனை வளாகத்தில் தான் உள்ளது. இளவரசர்கள் வில்லியம், ஹரி ஆகியோர் பிறந்து, வளர்ந்ததும் இங்கு தான்.



டயானா மறைவுக்கு பின், இந்த கென்சிங்டன் அரண்மனையை, தன் சகோதரியும், இளவரசியுமான மார்க் ரெட்டுக்கு கொடுத்து விட்டார், ராணி எலிசபெத். 2002 இல் மார்க்ரெட் இறந்து விட்டார். அதிலிருந்து, கென்சிங்டன் அரண்மனையில் யாரும் வசிக்கவில்லை.

# டயானா அரண்மனைக்கு வில்லியம் ஆசை!




தன் தாயார் வசித்த அரண்மனையில், புது மனை வியுடன் வசிக்க வேண்டும் என்ற தன் விருப்பத்தை, பாட்டி எலிசபெத்திடம் தெரிவித்தார், வில்லியம். இதற்கு, அவரும் சம்மதித்து விடவே, அரண்மனையை புனரமைக்கும் பணிகள் முழு வீச்சில் நடந்து வருகின்றன.

இந்த அரண்மனைக்கு, 2013 ஆம் ஆண்டில் தான், குடிபுகப் போகிறார், வில்லியம். இந்த புனரமைப்பு பணிக்காக செலவிடப் போகும் தொகை எவ்வளவு தெரியுமா? சுமார் இருபது கோடி ரூபா!

# புலிகளின் உள்ளக அதிகாரப் போராட்டம்

(6)

- டி.பி.எஸ்.ஜெயராஜ்

இதில் குறிப்பிடத்தக்கது என்னவென்றால் இலங்கையைச் சேர்ந்த தமிழர்கள் எவரையும் இந்த விசாரணைகளின்போதோ அல்லது கைதுகளின்போதோ மொழிமாற்றல் மற்றும் விளங்கப் படுத்தும் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தாததுதான். பூரணமான ஒட்டுக்கேட்கப்பட்ட தொலைபேசிப் பதிவு நாடாக்களையும் மொழி பெயர்ப்பதற்காக இந்திய வம்சாவழித் தமிழர்களே பயன் படுத்தப்பட்டனர். பாண்டிச்சேரியைச் சேர்ந்த கணிசமானளவு தமிழர்கள் பிரான்சில் குடியேறியுள்ளார்கள். இந்தச் செயற்பாடு எல்.ரீ.ரீ.ஈயினருக்கு தகவல்கள் கசிவதை தடைசெய்ததாகச் சொல்லப்படுகிறது.

இந்தச் சோதனைகளுக்குப் பிறகு நிலமையில் சுவாரஷ்யமான முன்னேற்றம் ஏற்பட்டது. அநேக தமிழர்கள் தொலைக்காட்சியில் தோன்றி தாங்கள் எல்.ரீ.ரீ.ஈ யினரால் மிரட்டப்பட்டதாகவும், அதற்கு பணம் வழங்குமாறு கட்டாயப்படுத்தப்பட்டதாகவும் துணிந்து சொன்னார்கள். புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் அச்சிடப்பட்ட கையெழுத்து உள்ள, பிரான்சிய எல்.ரீ.ரீ.ஈ கிளையினரால் வழங்கப்பட்ட பற்றுச்சீட்டுகளையும் சிலர் எடுத்துக் காட்டினர்.

ஆகஸ்ட் 2007 இல் பிரெஞ்சு நீதிமன்றம் ஏப்ரல் 1, 2007 இல் கைது செய்யப்பட்ட 14 எல்.ரீ.ரீ.ஈ சந்தேகநபர்களுக்குமான தடுப்புக் காவல் காலத்தை 2007 டிசம்பர் முதல் வாரம் வரை வரத்தக்கதாக மேலும் நான்கு மாதங்களுக்கு நீட்டிப்புச் செய்தன.

2007 செப்ரம்பர் 25 இல் பிரெஞ்சு பொலிஸார் பரிதி என்கிற நடராஜா மதீந்திரனுக்குப் பதிலாக தற்காலிகமாக எல்.ரீ.ரீ.ஈ தலைமைப் பொறுப்பை ஏற்றிருந்த ரஞ்சன் எனும் இரண்டாம் நிலை எல்.ரீ.ரீ.ஈ தலைவரை கைது செய்தனர். ரஞ்சனுடன் சேர்ந்து வெண்ணிலா கோஷ்டியைச் சேர்ந்த பல அங்கத்தவர்களும் பரிஸில் வைத்து கைதானார்கள். ஊத்தை ரவி என்றழைக்கப்படும் ரவி மாணிக்கம் என்கிற வெண்ணிலா கோஷ்டியின் தலைவரும் கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர். வெண்ணிலா கோஷ்டியானது பலவந்தமாகவும் மிரட்டல் கண்டனங்களூடாகவும் நிதி சேகரிப்பதற்காக 20 விகிதம் தரகுப்பணம் வழங்கப்படும் என்கிற நிபந்தனையின் பேரில் எல்.ரீ.ரீ.ஈ யினால் அமர்த்தப்பட்ட வெளி அமைப்பாகும்.

டிசம்பர் 2007 இல் பிரெஞ்சு நீதிமன்றம் பிரான்சிலுள்ள 19 உயர்மட்ட எல்.ரீ.ரீ.ஈ அங்கத்தவர்களுக்கும் மேலும் நான்கு மாதங்களுக்கு தடுப்புக் காவலை நீட்டித்து உத்தரவிட்டது. இதில் ஏபரல் 2007 இல் கைதான 14 பேரும் செப்ரம்பர் 2007 இல் கைதான ஐந்து பேர்களும் அடங்குவர். 2007 கைதுகளிலிருந்து நழுவி, பாரிய சுற்றிவளைப்புகள் பரீசில் நடக்கும்போது நாட்டைவிட்டு வெளியேறியிருந்த இரண்டு எல்.ரீ.ரீ.ஈ தலைவர்களை பிரெஞ்சு பொலிஸார் மே 2008 இல் கைது செய்தனர். பிரான்சின் பயங்கரவாதத்துக்கு எதிரான துணை இயக்குனரகம் அறிவித்ததன்படி, சுப்பிரமணியம் முகுந்தன் மற்றும் யோகராசா சிவராசன் ஆகிய இருவரும் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின்படி மற்றைய எல்.ரீ.ரீ.ஈ செயற்பாட்டாளர்கள் 2007 இல் கைதானதன் பின்னர் எல்.ரீ.ரீ.ஈ யின் அரசியல் மற்றும் நிதிப் பிரிவுகளுக்கு தலைமையேற்று நடத்திவருவது தெரியவந்துள்ளதனால் மே 13 இல் பரிஸில் வைத்து கைது செய்யப்பட்டனர் என்று தெரியவருகிறது.

ஒக்டோபர் 2008 இல் தான் 22 எல்.ரீ.ரீ.ஈ செயற்பாட்டாளர்கள் பிரான்சில் வழக்கு விசாரணையை எதிர்கொண்டார்கள். தலைமைக் குற்றவாளியாக குற்றம் சாட்டப்பட்டவர் பரிதி. பிரான்சிலுள்ள 75.000 தமிழர்களை மிரட்டி அவர்களிடமிருந்து ஐந்து மில்லியன் யூரோக்களை பலவந்தமாக பெற்றதாக எல்.ரீ.ரீ.ஈமீது குற்றம் சுமத்தப்பட்டது. அத்தோடு பிரான்சிலுள்ள எல்.ரீ.ரீ.ஈ முன்னணி அமைப்பான தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவும் (ரி.சீ.சீ) குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட்டது. பெரும்பாலானவர்கள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு, குற்றவியல் சதி மூலம் பயங்கரவாதச் செயல்களைப் புரிந்தது, பயங்கரவாதத்துக்கு நிதி வழங்கியது அல்லது பயங்கரவாதத்துக்கு நிதி வழங்குவதற்காக பெரும் அமளியில் ஈடுபட்டது என்பனவாகவிருந்தன.

2009 மேயில் எல்.ரீ.ரீ.ஈ க்கு இராணுவத் தோல்வி ஏற்பட்டதன் பின்புதான், 2009 நவம்பரில் பிரான்சிலிருந்த எல்.ரீ.ரீ.ஈ செயற்பாட்டாளர்களுக்கு தண்டனை வழங்கப்பட்டது. குற்றம் சாட்டப்பட்ட 21 பேரில் 20 பேருக்கு தண்டனை வழங்கப்பட்டது. ஏ.எப்.பி செய்தியின்படி குழுவின் தலைவரான நடராஜா மதீந்திரனுக்கு, அச்சுறுத்தல் வழங்கி பரிஸிலும் அதைச் சுற்றியுள்ள பகுதியிலும் வாழும் தமிழ் சமூகத்தினரிடமிருந்து இலங்கையில் எல்.ரீ.ரீ.ஈயின் பயங்கரவாத நட்வடிக்கைகளுக்கு நிதி வழங்குவதற்காக வரிகள் மூலமாக சுமார் 5 மில்லியன் யூரோக்களை மிரட்டிப் பெற்ற குற்றத்திற்காக 7 வருட சிறைத்தண்டனை வழங்கப்பட்டது. மற்றைய 19 குற்றவாளிகளுக்கும் ஆறு வருடமோ அல்லது அதற்குக் குறைவான சிறைத் தண்டனையே வழங்கப்பட்டது. அதேவேளை ஒருவர் விடுவிக்கப்பட்டார். பிரான்சின் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுமம் (ரி.சீ.சீ) ஒரு எல்.ரீ.ரீ.ஈயின் முன்னணி அமைப்பு எனத் தீர்ப்பு வழங்கிய நீதிமன்றம் அது கலைக்கப்பட வேண்டும் எனவும் உத்தரவிட்டது.

பரிதியும் மற்றவர்களும் தங்களுக்கு எதிராக வழங்கப்பட்ட தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீடு செய்துள்ளதால் இப்போது பிணையில் வெளிவந்து உள்ளனர். ரி.சீ.சீ யின் தடைக்கு எதிரான மேன்முறையீடும் நிலுவையிலுள்ளதால் அதுவும் இயங்கி வருகிறது. இந்த மேல்முறையீடுகளுக்கான தீர்ப்புகளை பிரெஞ்சு நீதிமன்றங்கள் வெகு விரைவில் வழங்கவுள்ளன.

*தொடரும்....*

# சில்லறை வர்த்தகத்தில் பல்தேசிய நிறுவனங்கள்

## பா.ம.க. ராமதாஸ் கண்டனம்




(சென்னை)

சில்லறை வர்த்தகத்தில் அன்னிய முதலீட்டுக்கு அனுமதி அளித்துள்ள மத்திய அரசுக்கு பா.ம.க நிறுவுனர் ராமதாஸ் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக நேற்று முன்தினம் அவர் வெளியிட்ட அறிக்கையில் பல்பொருள் அங்காடி அமைப்பதில் 51 சதவீத நேரடி அன்னிய முதலீட்டை அனுமதிக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

இதன் மூலம் ஆண்டுக்கு 25 இலட்சம் கோடி ரூபா பணம் புழங்கும் சில்லறை வணிகச் சந்தை வால்மார்ட், டெஸ்கோ, கேரி·.போர் உள்ளிட்ட பன்னாட்டு நிறுவனங்களிடம் வழங்கப்பட்டுள்ளது.

இதனால் சுமார் 5 கோடி சிறு வணிகர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்த 25 கோடி பேரின் வாழ்வாதாரம் பறிக்கப்பட்டிருக்கிறது. வணிகர்களின் நலனைப் பாதிக்கும் மத்திய அரசின் இந்த முடிவு கடுமையாகக் கண்டிக்கத்தக்கது.

கொள்கை முடிவுகளை எடுக்க முடியாமல் இந்திய அரசு இருக்கிறது என்று உலக அரங்கில் ஏற்பட்டுள்ளத் தோற்றத்தைப் போக்க இப்படியொரு கொடுமையான முடிவை அரசு எடுத்துள்ளது.

சிறு வணிகர்களின் எதிர்காலத்தை கேள்விக் குறியாக்கும் இந்த முடிவை மத்திய அரசு உடனடியாகத் திரும்பப் பெற வேண்டும். இல்லாவிட்டால், இந்த முடிவை எதிர்த்து பா.ம.க போராட்டம் நடத்தத் தயங்காது என்று ராமதாஸ் கூறியுள்ளார்.

இதேவேளை மத்திய அர சின் அறி விப்பை அமெ ரிக்கா வர வேற்றுள் ளது குறிப் பிடத்தக்கது.

## மும்பை சம்பவம் நினைவு கூரப்பட்டது



(மும்பை)

மும்பை தாக்குதல் சம்பவத்தின் 3 ஆம் ஆண்டு நினைவுதினம் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.


இதன்போது கருத்து தெரிவித்த மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா இச்சம்பவத்தில் தொடர்புடையவர்களையும் சதித்திட்டம் தீட்டியவர்களையும் பாகிஸ்தான் சட்டத்தின் முன் நிறுத்தி விரைவில் நீதி வழங்க வேண்டும் என்று தெரிவித்தார்.

# கனிமொழி பிணை மனு மீதான விசாரணை ஒத்திவைப்பு

2ஜி அலைக்கற்றை ஒதுக்கீட்டு ஊழல் வழக்கில் கனிமொழி தாக்கல் செய்த பிணை மனு மீதான விசாரணை நாளை மறுதினம் திங்கட்கிழமை டில்லி உயர்நீதிமன்றத்தில் நடைபெற உள்ளது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிபந்தனை மனு மீதான விசாரணையின் போது, கார்ப்பரேட் நிறுவன அதிகாரிகள் 5 பேருக்கு உச்சநீதிமன்றம் நிபந்தனை வழங்கிவிட்ட காரணத்தால் நீங்கள் நிபந்தனை பெற முயற்சி செய்கிறீர்களா என்று நீதிபதி வி.கே.ஷாலி கேள்வி எழுப்பினார்.

மேலும் உச்சநீதிமன்றம் அவர்களுக்கு ஜாமீன் வழங்கி விட்டதாலேயே இந்த வழக்கில் அனைவரும் சிறையில் இருந்து வெளியேறிவிட முடியுமா என்றும் இதுகுறித்து உயர்நீதிமன்றம் வேறு எதையும் பரிசீலிக்க தேவையில்லையா என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.





# 12 கோடி ரூபா நட்டமாம்

(புதுடில்லி)


கடந்த நான்கு நாட்களாக நாடாளுமன்ற நடவடிக்கைகள் முடங்கியதால், மத்திய அரசுக்கு 12 கோடி இந்திய ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளதாக, தகவல் வெளியாகியுள்ளது.

நாடாளுமன்ற குளிர்கால கூட்டத் தொடர், கடந்த 22 ஆம் திகதி ஆரம்பித்தது. கறுப்புப் பண பதுக்கல், விலைவாசி உயர்வு, சில்லரை வர்த்தகத்தில் நேரடி அன்னிய முதலீட்டை அனுமதித்தது, போன்றவற்றை முன்வைத்து, எதிர்க்கட்சியினர் பெரும் அம்ளியில் ஈடுபட்டனர். இதனால், நாடாளுமன்றில் இரு சபைகளும் கடந்த நான்கு நாட்களாக முடங்கின.

இதனால் அரசுக்கு 12 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளதாக, மத்திய அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.




# பதற்றத்தை ஏற்படுத்த வேண்டாம்



(புதுடில்லி)


தமிழக - கேரள மக்கள் இடையே பதற்றத்தை ஏற்படுத்தும் பிரசாரத்தில் ஈடுபட வேண்டாம் என்று கேரள அனைதது்க் கட்சி எம்.பி.க்கள் குழுவிடம் பிரதமர் மன்மோகன்சிங் வேண்டுகோள் விடுததார்.

முல்லைப் பெரியாறு அணை பலவீனமாக இருப்பதாக கூறிவரும் கேரள அரசு, அதற்கு பதிலாக புதிய அணை கட்ட தீவிர முயற்சி மேற்கொண்டுள்ளது. இந்த பிரச்சினை தொடர்பாக தமிழகம் - கேரள மாநிலங்களுக்கு இடையே உச்ச நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்று வருகிறது.

இந்த நிலையில், கேரளாவை சேர்ந்த அனைத்துக் கட்சி எம்.பி. க்கள் குழு நேற்றுமுன்தினம் டில்லி சென்று பிரதமரைசந்தித்தது. இதன் போது பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்தார். மேலும் கேரளாவில் தமிழர்கள் அதிகமாக வசிக்கின்றனர. எனவே, இருமாநிலத்துக்கும் இடையே பதற்றத்தை ஏற்படுத்தும் எந்த வகையான பிரசாரத்திலும் இரு தரப்பும் ஈடுபடக் கூடாது எனறு அறிவுரை கூறினார்.

மேலும் அணை விவகாரம் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார். அபபோது, முல்லை பெரியாறு அணை உடைவது போன்ற காட்சிகள் கொண்டடாம் 999 திரைபபடம் உட்பட, தமிழகத்துக்கு எதிராக எந்தவிதமான பிரசாரத்திலும் கேரளா ஈடுபடவில்லை என்று பிரதமரிடம் எம்.பி.க்கள் விளக்கினர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# திருட்டு சீடி மூலம் தமிழகத்தில் "டாம் 999"




(சென்னை)

தமிழகத்தில் டாம் 999 திரைப்படத்திற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளதால் திருட்டு சீடிக்கள் மூலம் இப்படத்தை மக்களிடம் கொண்டு சேர்க்க திட்டம் தீட்டியுள்ளனர்.

கேரளாவில் அமைந்துள்ள முல்லை பெரியாறு அணையை மையமாக வைத்து கேரளாவை சேர்ந்த திரைப்பட இயக்குனர் சோஹன்ராய் என்பவர் டாம் 999 என்னும் படத்தை எடுத்துள்ளார்.

அணை உடைந்து இலட்சக்கணக்கான மக்கள் மடிவது போன்ற காட்சிகள் இப்படத்தில் இடம் பெற்றுள்ளன. தமிழகம் தவிர இந்தியாவின் பிற மாநிலங்களில் இன்று இப்படம் வெளியானது. தமிழகத்தில் இத்திரைப்படத்திற்கு எழுந்த எதிர்ப்பால் டாம் 999 படத்திற்கு தமிழக அரசு தடை விதித்தது.

இந்நிலையில் கேரள மாநிலத்தில் அனைவரையும் இப்படத்தை பார்க்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. திரையரங்கிற்கு சென்று படம பார்க்க முடியாதவர்களுக்கு இப்படத்தின் சீடிக்களை இலவசமாக வழங்க முடிவு செய்துள்ளனர்.

இதற்காக இலட்சக்கணக்கில் சீடி தயாரிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. அரசு தரப்பில் சிலர் இதற்கு மறைமுக உதவி செய்து வருவதாக கூறப்படுகிறது.

# கொத்தடிமைகள் மீட்பு



(புழல்)

செங்குன்றம் பகுதி அரிசி ஆலையில் கொத்தடிமையாக நடத்தப்பட்ட 47 பேரை அதிகாரிகள் மீட்டனர். அவர்களுக்கு தலா 1000 ரூபா மற்றும் விடுதலை சான்றிதழ் வழங்கப்பட்டது.

செங்குன்றம் பகுதியில் உள்ள அரிசி ஆலைகளில் கொத்தடிமைகள் இருப்பதாக அதிகாரிகளுக்கு தகவல் கிடைத்தது.

இதையடுத்து, அங்கு சென்று அதிரடி சோதனை நடத்தினர். அம்பேத்கர் நகரில் உள்ள ஆலையில் கொத்தடிமைகளாக வேலை செய்து வந்த 11 குடும்பத்தை சேர்ந்த 15 ஆண்கள், 15 பெண்கள் மற்றும் 17 குழந்தைகள் என 47 பேரை மீட்டனர்.

இவர்கள், காஞ்சிபுரம் மாவட்டம் தாதங்குப்பம், திருவள்ளூர் மாவட்டம் அதிகத்தூர் பகுதியை சேர்ந்தவர்கள். அவர்கள் சொந்த ஊர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். பொலிஸார் அரிசி ஆலையில் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## ஞாயிறு சிந்தனை

### விழிப்பாயிருங்கள்...

வாழ்க்கையின் எல்லாச் சூழ்நிலைகளிலும் விழிப்புத் தேவை. விழிப்பு என்பது வரவிருக்கும் ஆபத்துக்களிலிருந்து தப்பிப்பதற்கு உதவும் வருகின்ற சவால்களைத் துணிச்சலோடு எதிர்கொள்ளப் பயன்படும் தடைகளைக் கண்டு தளர்ந்து போகாமல் அவற்றைத் தாண்டிச் செல்கின்ற வலிமையை நமக்குத் தரும். எனவே, விழித்திருப்போர் பொறுப்பான விதத்தில் செயற்படுகின்ற மனிதராக விளங்குவர்.

இயேசு நம்மிடம் எதிர்பார்க்கின்ற விழிப்பு அவரிடமிருந்து நாம் ஒவ்வொருவரும் பெற்றுக்கொண்ட பொறுப்பை முழுமனதோடு ஏற்று நடைமுறைப்படுத்துவதில் நாம் கண்ணும் கருத்துமாய் இருக்க நமக்கு உந்துதல் தர வேண்டும். விழித்திருப்போர் தூக்க மயக்கத்தில் இருக்கமாட்டார்கள் (மாற்கு 13:36). அவர்களுடைய இதயம் மழுங்கிய நிலையில் இருக்காது. மாறாக, விழித்திருப்போர் தம் இதயத்தைக் கடவுளுக்குத் திறந்து வைப்பார்கள் அவர்களது இதயத்தில் கடவுள் நுழைந்திட யாதொரு தடையும் இருக்காது. எந்த நேரத்தில் கடவுள் அவர்களைத் தேடி வந்தாலும் அவர்கள் தங்கள் இதயக் கதவுகளைத் திறந்துவிட உடனடியாக முன்வருவார்கள். எனவே, இயேசு நம்மைப் பார்த்து, "நான் உங்களுக்குச் சொல்வதை எல்லாருக்குமே சொல்கிறேன்: விழிப்பாயிருங்கள்" என அழைப்பு விடுக்கிறார். அந்த அழைப்பு நமக்கு விடுக்கப்படுகின்ற ஒரு சவால் கூட.

யா.அலெக்சாண்டர்
மறையாசிரியர்.

# தயாரிப்பதற்கு முன்னரே எதிர்ப்பு


உலகச் செய்திகள்



(சிக்காகோ)

அமெரிக்காவில் உள்ள "த்ரெட்லெஸ் டி" என்ற ஆடைதயாரிப்பு நிறுவனம், நான்கு வகையான ரீசேட்களை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த ரீசேட்டுகளில் பிள்ளையார் படங்கள் அச்சிடப்பட்டுள்ளன. வாடிக்கையாளர்களை கவரும் நோக்கில், இந்தப் படம் அச்சிடப்பட்டுள்ளதற்கு, அமெரிக்க வாழ் இந்துக்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். இது குறித்து, "த்ரெட்லெஸ் டி" நிறுவன தகவல் தொடர்பாளர் குறிப்பிடுகையில், "பிள்ளையார் படம் போட்ட ரீசேட் விளம்பரத் துக்காக இணையத்தில் தான் வெளியிடப்பட்டுள்ளது. இன்னும் இந்த ஆடை தயாரிக்கப்பட்டு விற்பனைக்கு வரவேயில்லை. தற்போது இதற்கு எதிர்ப்பு கிளம்பியுள்ள தையடுத்து, எதிர்காலத்தில் இது போன்ற ஆடை தயாரிப்பை நாங்கள் மேற்கொள்ளப்போவதில்லை" என்றார்.

# ஐரோப்பிய ஒன்றிய ஒப்பந்தத்தில் மாற்றம் கோரும் தலைவர்கள்



ஐரோப்பிய ஒன்றியம் உருவாவதற்கு காரணமான ஒப்பந்தங்களை மாற்றியமைக்க வேண்டும் என்று ஜேர்மனியின் பிரதமர் ஏஞ்சலா மெர்க்கெலும், பிரான்ஸின் ஜனாதிபதி நிக்கோலஸ் சர்கோசியும் கோரியுள்ளனர். இம்மாற்றத்தால் நம்பகத்தன்மையைத் திரும்பப்பெறும் என்று சர்கோசி நம்புகிறார். அவர்கள் இருவரும் கூட்டிய கூட்டம் ஒன்றிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். மேலும் அவர் தெரிவிக்கையில்

ஒன்றியத்தின் மீது இருந்த நம்பிக்கை இன்று தொலைந்து போனதால் இன்றைய சூழ்நிலை மிகவும் சிரமமாக உள்ளது. எனவே தான் ஒப்பந்தத்தை மாற்றியமைக்க இருவரும் முனைந்துள்ளதாகத் தெரிவித்தார். மாற்றங்களின் விபரம் குறித்து இரு தலைவர்களும் தெரிவிக்கவில்லை. டிசம்பர் மாதம் ஒன்பதாம் நாள் நடைபெறும் ஐரோப்பிய ஒன்றியக் கூட்டத்திற்குப் பிறகு மாற்றங்களின் விபரங்கள் வெளிவரும்.பிரான்ஸ், ஜேர்மன் தலைவர்கள் தாம் நடத்திய இந்தக் கூட்டத்திற்கு இத்தாலியின் புதிய பிரதமரான மரியோ மாண்ட்டியையும் அழைத்து இருந்தனர். இத்தாலி ஐரோப்பிய ஒன்றியத்தின் மூன்றாவது பெரிய பொருளாதார நாடாகும். இதன் கடன் நெருக்கடி ஐரோப்பாவின் மீது மிகப்பெரிய சுமையாக அழுத்துகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

# நேட்டோ ஹெலிகள் தாக்குதல் பாக். இராணுவத்தினர் 25 பேர் பலி

பாகிஸ்தான் இராணுவத்தினர் மீது நேட்டோ படையினர் நேற்று மேற்கொண்ட தாக்குதலில் பாகிஸ்தான் இராணுவத்தின் மேஜர் தரத்திலான அதிகாரியொருவரும் அடங்கலாக 25 பேர் பலியானதாக பாகிஸ்தான் இராணுவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். ஆப்கானிஸ்தானுடனான எல்லையிலுள்ள மொஹ்மான்ட் பிராந்தியத்தில் பாகிஸ்தான் காவலரண் ஒன்றின்மீது நேட்டோ ஹெலிகொப்டர்கள் தாக்கியதாக பாகிஸ்தான் இராணுவம் அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது.

எவ்வித ஆத்திரமூட்டல்களும் இடம்பெறாத நிலையில் பாரபட்சமான இத்தாக்குதல் இடம்பெற்றதாக பாகிஸ்தான் இராணுவம் தெரிவித்துள்ளது. இச்சம்பவத்தையடுத்து, ஆப்கானிஸ்தானிலுள்ள நேட்டோ படையினருக்கான விநியோகங்கள் இடம்பெறும் பாதையொன்றை பாகிஸ்தான் மூடியுள்ளது.

இச்சம்பவம் குறித்து நேட்டோ அறிந்துள்ளதாகவும் இது தொடர்பாக விசாரணை நடத்துவதாகவும் தெரிவித்துள்ளது. இத்தாக்குதலுக்கான பதிலடியாக நேட்டோ படையினருக்கு பொருட்களை ஏற்றிச்சென்ற வாகனங்களை பாகிஸ்தான் அதிகாரிகள் தடுத்துவைத்துள்ளனர். 40 கொள்கலன்கள் மற்றும் லொறிகளை ஜம்ருத் பாத் சோதனைச் சாவடியிலிருந்து நாம் திருப்பி அனுப்பியுள்ளோம் என சிரேஷ்ட பாகிஸ்தான் அதிகாரியான முதாஹிர் ஸெப் செய்திச் சேவையொன்றிற்கு தெரிவித்துள்ளார்.

# ஈராக்கில் தொடர் குண்டுவெடிப்பு

ஈராக் சந்தைக் கட்டடத்தொகுதியில் 3 இடங்களில் அடுத்தடுத்து சக்தி வாய்ந்த குண்டுகள் வெடித்ததில் 19 பேர் உடல் சிதறி இறந்தனர். ஈராக்கில் ஜனாதிபதி சதாம் உசேன் தூக்கிலிடப்பட்டபின் நாட்டின் பாதுகாப்புப் பொறுப்பை அமெரிக்க தலைமையிலான படைகள் ஏற்றிருந்தன.

டிசம்பர் இறுதிக்குள் ஈராக் இராணுவம் பொலிஸாரிடம் பாதுகாப்புப் பொறுப்பை ஒப்படைத்துவிட்டு படைகளை வாபஸ் பெற அமெரிக்கா முடிவு செய்துள்ளது. அதன்படி அமெரிக்க வீரர்கள் படிப்படியாக தாய்நாடு திரும்பிக் கொண்டிருக்கின்றனர். இந்நிலையில் தீவிரவாதிகளின் தாக்குதல்கள் அதிகரித்து வருவதற்கு சர்வதேச நாடுகள் அச்சம் தெரிவித்துள்ளன.


முக்கிய நகரான பாஸ்ராவில் சந்தைப் பகுதியில் நேற்றுமுன்தினம் 3 வெடிகுண்டுகள் அடுத்தடுத்து வெடித்துச் சிதறின. முதல் 2 குண்டுகள் வெடித்த தகவல் அறிந்து இராணுவத்தினரும் பொலிஸாரும் சந்தைக்கு விரைந்து சென்றனர். பாதிக்கப்பட்ட மக்களை மீட்டுக் கொண்டிருந்த போது 3ஆவது குண்டு வெடித்தது. இதில் 19 பேர் உடல்சிதறி இறந்தனர். அவர்களில் பலர் இராணுவ வீரர்கள், பொலிஸார். இந்தத் தாக்குதலுக்கு இதுவரை எந்த தீவிரவாத அமைப்பும் பொறுப்பேற்கவில்லை.

# தொழிற்சாலையில் தீ விபத்து

.(பீஜிங்)

சீனாவின் இரசாயன தொழிற்சாலையில் ஏற்பட்ட வெடி விபத்தினால் அப்பகுதியில் குடியிருந்த 6 ஆயிரத்திற்கும் அதிகமானவர்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர். சீனாவின் குவாங்சோ மாகாணத்தில் பான்யு மாவட்டத்தில் உள்ள இரசாயன தொழிற்சாலையில் கடந்த வியாழக்கிழமை இந்த வெடிவிபத்து ஏற்பட்டது. இதனால், பெரிய தீ விபத்து ஏற்பட்டது. 15 தீயணைப்பு வண்டிகளில் வந்த 90 தீயணைப்பு வீரர்கள் கடுமையாக முயற்சித்து தீயை அணைததனர். இருப்பினும் இரசாயன தொழிற்சாலையில் இருந்து வெளியேறிய ஹைட்ரஜன் குளோரைடு என்ற நச்சு வாயு காற்றில் கலந்துள்ளதால், அப்பகுதியில் உள்ள 6 ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் வெளியேறியுள்ளனர். இன்னும், இந்த நச்சு காற்று குறித்த பிரதேசங்களில் பரவியுள்ளதால் மக்கள் வீடு திரும்பவில்லை.

# டுபாயில் அதிக விபத்துக்கள்



(துபாய்)

டுபாய் வீதிகளில் அதிகமான விபத்துக்களை இந்தியா, பாகிஸ்தான் மற்றும் அரபு எமிரேட்ஸ் பிரஜைகள்தான் கடந்த வருடம் அதிகப்படியான விபத்துக்களை ஏற்படுத்திய சாரதிகள் என டுபாய் போக்குவரத்துப் பிரிவின் பொலிஸ் அதிகாரி ஸை.ஃப் அல்-ஜ.ஃபீன் தெரிவித்துள்ளார்.

இதற்காக வாகனங்களின் வேகங்களைக் கட்டுபடுத்தும் புதிய சட்டங்களை கொண்டுவர தயாராக உள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# பதிவிறக்கப் பெட்டகம்

கவிதை நேரடியாகச் சொல்லப்படுவதல்ல. நேரடியாக ஒன்றை சொல்லிவிடமுடியும் என்றால் அப்படியே சொல்லிவிடுவதே நல்லது. சொல்லமுடியாத ஒன்றைக் குறிப்புணர்த்தல் வழியாகச் சொல்வதே கவிதை. குறிப்புணர்த்திய பிறகு அத்துடன் நின்றுவிட வேண்டும். மேலும் விளக்க முனையக்கூடாது. உணர்ச்சிகளை மிகையாகச் சொல்லக்கூடாது. எந்த அளவுக்கு அனுபவம் உள்ளதோ அதை விட மிகக்கூடாது

கவிதை என்பது மொழிக்குள் 'செயற்படும் தனிமொழி. வார்த்தைகளை நேரடியாகப் பொருள்கொள்வதன் மூலம் அல்ல, அவற்றைக் குறியீடுகளாகவும் அடையாளங்களாகவும் எல்லாம் எடுத்துக்கொண்டு பொருள் கொள்வதன் மூலமே கவிதையை அறிகிறோம்.

நல்ல கவிதையின் இலக்கணங்கள் மூன்று 1. பிறிதொன்றிலாத புதுமை 2. கச்சிதமான வடிவ ஒருமை 3. உண்மையான அகவெழுச்சி

– ஜெயமோகன்

'இதில் என்ன சொல்கிறான் கவிஞன்?' என்ற கேள்விக்கே முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. இந்தக் கேள்வியால் கவிதையின் வாசகன் இடம்பெறும் பங்கு சாதாரணப்படுத்தப்படுகிறது. அர்த்தங்கள் தரப்படுபவையல்ல; வாசிக்கும்போது விடுவிக்கப்படுபவையே அர்த்தங்கள்.

– பிரம்மராஜன்

மனிதனுக்குள்ளிருந்து எழும் அக அழைப்பே கவிதை.

– நெரூடா

ஒரு நல்ல கவிதை தேவைக்கு மேலாகவோ அல்லது குறைவாகவோ கூறுவதில்லை. மோசமான கவிதையில் எப்போதும் சிறிது கழிக்கலாம், சிறிது சேர்க்கலாம்.

– வில்லியம் ராடிஸே

ஒரு நல்ல கவிதையில் ஒவ்வொரு வார்த்தையும் பேசுகிறது. ஒவ்வொன்றும் தவிர்க்க முடியாததாக இருக்கிறது. மாற்று சொற்கள் அற்றவையாக இருக்கின்றன. ஒவ்வொரு வார்த்தையும் நுட்பமான அர்த்த பேதங்களின் தொடர்புகளால் வலுவேறியது. வசீகரம் கொண்டது. ஒரு நல்ல கவிதையில் வார்த்தைகள் அமைதியாகப் பேசுகின்றன. எளிமையாக, அமைதியைக் குலைக்கப் பயந்தபடி பேசுகின்றன. 'மற்றொன்றை' சந்திப்பதற்கான படிகளாக அவை அமைகின்றன. 'மற்றொன்றின்' சந்திப்பை வரவேற்கின்றன. 'இருள்வலிமை' என கவிஞன் லோர்க்கா அழைத்த அந்த சக்தியை – தன்னையும் அசைத்து நம்மையும் அசைக்கும் சக்தி – அவை கொண்டிருக்கின்றன. உள்ளுணர்வினால் மட்டுமே இந்த மாயத்தன்மையை அறிந்துகொள்ள முடியும்.

– சீதாகாந்த் மகாபத்ர

ஞாபகத்தின் குடுவையைத் திறந்ததும் கவிதையின் விசித்திர வாசனை கசிகிறது. கவிதை சொற்களின் வழியே சொற்களால் அடைய முடியாத ஆழத்தை, நுண்மையை, உவப்பை கைப்பற்ற எத்தனிக்கிறது.

காதல் கவிதையைக் கண்டுகொள்ள எளிய வழி, அது அதிகம் திருடப்படும் பொருளாக இருப்பதுதான். ஒரு வசீகரமான, விலைமதிப்பற்ற சொல்லைத் திருடிச் சென்று காதலியின் முன் சமர்ப்பிக்கவே எல்லா காதலனும் விரும்புகிறான். காதல் வரிகள் கடத்தப்பட்டுக்கொண்டே இருக்கின்றன. அது ஒரு சமிக்ஞை போல ரகசியங்களைப் பரிமாறிக் கொள்கிறது.

ஒரு நல்ல கவிதையை அடையாளம் காண எனக்கிருக்கும் ஒரே வழி, அதை வாசித்து முடித்ததும் இதை நான் சொந்தம் கொண்டு தன்வசமாக்கிவிட வேண்டும் என்று மனம் எத்தனிப்பதுதான்.

– எஸ். ராமகிருஷ்ணன

வெகுசன ஊடகங்களில் இடம்பெறும் காதல் கவிதைகள் கவிதை சார்ந்த அனுபவத்தை ஒரு நிர்வாணப் புகைப்பட அளவுக்குச் சுருக்கி விட்டன. இத்தகைய ஓர் அபத்தமான சூழலில் ஒரு நவீனக் கவிஞன் காதலை எழுதும்போது இயற்கையாகவே ஒரு மனத்தடைக்கு ஆளாகிறான். எவ்வாறு புரட்சியைப் பற்றி எழுதினால் தனது மொழி சீரழிந்து விடுமென யோசிக்குமளவு அச்சுறுத்தப்பட்டிருக்கிறானோ அதேபோல காதலைப் பற்றி எழுதினால் அது தன்னை தாழ்வுறச் செய்துவிடும் என்று யோசிக்குமளவுக்குச் சில உணர்வுகள் மொழியின் வழியே சீரழிக்கப்பட்டிருக்கின்றன. இதில் இன்னொரு முக்கியமான சிக்கல், தமிழில் எழுதப்பட்டிருக்கும் காதல் கவிதைகளின் பெரும் நீரோட்டத்தை நீந்திக் கடந்து காதலைப் பற்றிய ஒரு புதிய புரிதலையோ உணர்வையோ உருவாக்குவதென்பதுதான்.

– மனுஷ்யபுத்திரன்

ஒரு கவிஞன் காதலிப்பது அவனுக்காக மட்டுமல்ல; அவனுக்கு முன்னும் பின்னுமான பலருக்குமாக என்று தோன்றுகிறது.

– சுகுமாரன்

இலட்சக்கணக்கான ஆண்டுகள், கோடிக்கணக்கான மனிதர்கள், சுமந்த காதலை, நான் ஒருவனே சுமக்கும்படி ஆகிவிட்டது.

– முகுந்த் நாகராஜன்

# வன்னியில் சட்டவிரோதச் செயற்பாடுகள்

மழை விட்டாலும் தூவானம் விடாது என்பார்கள். வன்னியில் யுத்தம் ஓய்ந்திருந்தாலும் அங்கே நிலவும் அச்சச் சூழல் ஓயவில்லை. சனங்களுக்கு ஏற்படும் பாதிப்புகள் நீங்கவில்லை. இயற்கை வளங்களின் சிதைவுகள் நின்று விடவில்லை.

போரின் காயங்களை ஆற விடாமல் மேலும்,மேலும் அவற்றைக் காயப்படுத்தும் சம்பவங்கள் ஏதோ வடிவங்களில் நடந்து கொண்டிருக்கின்றன.

இப்போது அங்கே சட்டவிரோதச் சம்பவங்களின் செயற்பாடுகள் அதிகரித்துள்ளன.

ஆகவே மக்களுக்கும் பிரச்சினை. படையினர் மற்றும் பொலிஸ் தரப்புக்கும் சவால் என்ற நிலையே ஏற்பட்டுள்ளது.

போரின்போது கைவிடப்பட்ட அல்லது விட்டுச் செல்லப்பட்ட சனங்களின் பொருட்களையும் உடமைகளையும் யாரோ எல்லாம் வந்து எடுத்துச் செல்கிறார்கள்.

பொருட்களைக் கைவிட்டவர்களின் கண்முன்னேயே இந்தச் சம்பவங்கள் ஆண்டுக்கணக்காக நடந்து கொண்டிருக்கிறது. இப்போது மிஞ்சிய இரும்பும்கூட இவ்வாறு எடுத்துச் செல்லப்படுகிறது.

தங்களின் வாழ்க்கை முழுக்க - தொடர்ந்து நடந்து கொண்டிருந்த போரின் மத்தியில், பொருளாதாரத் தடைகள் போன்ற நெருக்கடிகளின் மத்தியில் எல்லாம் மிகச் சிரமப்பட்டு உழைத்துச் சேர்த்த பொருட்களை போரின் இறுதி நாட்களில் காப்பாற்ற முடியாத நிலையில் அந்தச் சனங்கள் அவற்றைப் போர்ப் பரப்பில் விட்டுச் சென்றனர்.

ஆனால், இப்போது அவற்றை எடுப்பதற்கு உரிமையாளர்களுக்கு ஆயிரம்



வகையான கட்டுப்பாடுகள், விதிமுறைகள், சட்டங்கள்.

பதிலாக அந்தப் பொருட்களை எடுத்துச் செல்ல வரும் வெளியாட்களுக்கு இந்தச் சட்டங்கள் எந்தளவிற்கு பயன்படுகின்றன? என்று தெரியவில்லை. ஏனெனில் அவர்கள் மிக இலகுவாகவே வந்து தங்கள் பொருடகளை எடுத்துச் செல்வதைப்போல எடுத்துச் செல்கிறார்கள்.

அடுத்தது கொள்ளை.

முகத்தை வெளிப்படையாகவே தெரிய வைத்துக் கொண்டு வீடுகளுக்கு வரும் கொள்ளையர்கள், எந்தப் பயமுமில்லாமல், எந்தக் கூச்சமும் இல்லாமல், எத்தகைய மனச் சாட்சியும் இல்லாமல் சனங்களிடம் உள்ளதையெல்லாம் பிடுங்கிக் கொண்டு போகிறார்கள்.

இதனால், வன்னியில் - குறிப்பாக கிளிநொச்சிப் பகுதியில் இந்தக் கொள்ளையர்களின் அட்டகாசம் மிக உச்சத்துக்குப் போயுள்ளது.

கடந்த நான்கு மாதங்களில் ஏறக்குறைய இருபத்தைந்துக்கு மேற்பட்ட பாரிய கொள்ளைச் சம்பவங்கள் நடைபெற்றுள்ளன. சில இடங்களில் கொலையும் நடந்துள்ளது.

இந்தக் கொள்ளையர்கள் ஏதோ மறைந்து, யாருக்கும் தெரியாமல் பதுங்கிப், பதுங்கி வருகிறார்கள், என்று நினைத்து விடாதீர்கள்.

பொழுது இறங்கும் வேளையில் - மாலை ஆறு அல்லது ஏழு மணிக்குள் வீடுகளுக்கு வந்து விடுகிறார்கள். வந்து, தமிழ்ச் சினிமாவில் வருவதைப்போல (திருப்பாச்சியில் பயன்படுத்தப்படும் பெரிய கத்தி - தமிழகத்தில் அதை அரிவாள் என்று சொல்கிறார்கள்) பெரிய கத்தியைக் கொண்டு வந்து உங்கள் கழுத்தில் வைக்கிறார்கள். மன்னிக்கவும் வீட்டாரின் கழுத்தில் வைக்கிறார்கள். மற்றவர்கள் தடிகளும்,பொல்லுகளும், துப்பாக்கிகளும் (அது விளையாட்டுத் துப்பாக்கி என்று பிடிபட்டதற்குப் பின்னரே தெரியவருகிறது) கொண்டு தாக்குகிறார்கள்.

யாரும் கத்தவோ, சத்தமிடவோ முடியாது. அதேவேளை சம்பந்தப்பட்ட வீடு முற்றாக முற்றுகையிடப்பட்டு விடும். யாரும் வெளியே போகவும் முடியாது. யாரும் உள்ளே வரவும் இயலாது.

வீட்டினுள்ளே செல்லும் கொள்ளையரகள் முதலிற் சொல்வது, 'உங்களின் வீட்டில் புலிகளின் ஆயுதங்கள் இருக்கிறது என்று எங்களுக்குத் தகவல் கிடைத்துள்ளது. சோதனையிடப் போகிறோம். அதற்கு முன்னர், உங்களுடைய நகைகளையும், பணத்தையும் எடுத்துத்



தனியாக வைத்துக் கொள்ளுங்கள். பிறகு அவை காணவில்லை என்று சொல்லக்கூடாது....'

இப்படிச் சொல்லி விட்டுக் கொள்ளையர்கள் பார்த்துக் கொண்டிருப்பதில்லை. ஒவ்வொரு அறைகளாகத் தங்களுடைய சோதனை நடவடிக்கையை ஆரம்பித்து விடுகிறார்கள்.

சமையற்கட்டு வரையுள்ள அத்தனை பொருட்கள், பாத்திரங்களையும் திறந்து, கொட்டி, அலசு, அலசென்று அலசிச் சோதித்துத் தங்களுக்குரிய அத்தனை பொருட்களையும் எடுத்துக் கொள்கிறார்கள்.

இதற்காக அவர்கள் சில வீடுகளில் ஒரு மணி நேரத்துக்கு அதிகமான நேரத்தையும் செலவழித்திருக்கிறார்கள்.

போதாக்குறைக்கு வீட்டிலுள்ளவர்கள் அணிந்திருக்கும் நகைகளையும் கழற்றும்படி கூறி அவற்றையும் எடுத்துக் கொண்டு மிகச் சாதாரணமாகவே வெளியேறிச் சென்று விடுகிறார்கள்.

இந்தக் கொள்ளைக்காக அவர்கள் நான்கு ஐந்து மோட்டார் சைக்கிள்களைப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். சில வீடுகளுக்குச் செல்லும்போது ஓட்டோவையும் பயன்படுத்தியுள்ளனர்.

சில வீடுகளுக்குச் சென்ற கொள்ளையர்கள், அந்த வீடுகளில் இருந்த பொருட்களையும் எடுத்துச் சென்றுள்ளனர்.

ஆனால், இந்தக் கொள்ளையர்களை மிக விரைவாக பொலிஸாரும் படையினரும் கைது செய்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்க இன்னொரு நல்ல அம்சமாகும். அதேவேளை ஒரு குழு பிடிபடும்போது இன்னொரு குழு இந்தத் தொழிலில் அறிமுகமாகிறது.

கைது செய்யப்பட்டவர்களை அவதானிக்கும்போது அதிகாரத்தரப்பின் பெயரைப் பயன்படுத்தி உள்ளூர் வாசிகளே இந்தக் கொள்ளைச் சம்பவங்களில் அதிகமாக ஈடுபட்டுள்ளனர் என்று தெரியவருகிறது.

இதேவேளை, சட்டவிரோத கால்நடைகளைக் கடத்துதல், மணல் அகழ்வில் ஈடுபடுதல், காட்டு மரங்களை வெட்டிச் செல்லுதல், கசிப்பு உற்பத்தி என்று மேலும் பல அனர்த்தச் சம்பவங்கள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன.

இந்தச் சம்பவங்களிற் பல அரசியற் தரப்புகளின் செல்வாக்கு இருப்பதாகவும் தெரியவருகிறது.

இதனால், மக்களும் சூழலும் பாதிப்புக்குள்ளாகும் நிலையே ஏற்படுகிறது.

இதைத் தடுப்பதற்கு உரிய நடவடிக்கைகளை யார் மேற்கொள்வது? அவற்றை எப்படி மேற்கொள்வது? என்பதே இன்றுள்ள பிரச்சினையாகும்.

போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் - பாதிக்கப்பட்ட மக்களுக்கே மேலும், மேலும் பாதிப்புகள்.

இதைத்தான் மரத்தால் வீழ்ந்தவனை மாடு ஏறி மிதித்தது என்கிறார்களோ!

சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநாட்டும்போதே ஒரு சமூகம் ஆரோக்கியமாகச் செயற்பட முடியும்.

கொள்ளை மற்றும் சட்டவிரோதச் சம்பவங்களில் ஈடுபடுவோரும் இந்த மக்களைக் குறித்துச் சற்றுச் சிந்திக்க வேண்டும்.

எல்லாவற்றையும் இழந்த மக்களே இன்று வன்னியில் உள்ளனர்.

உறவுகளை இழந்தோராகவும் உடல உறுப்புகளை இழந்தோராகவும் பொருட்கள் மற்றும் உடமைகளை இழந்தோராகவுமே எல்லோரும் உள்ளனர்.

இவர்கள் மீண்டும் தங்களுடைய வாழ்வைக் கட்டியெழுப்புவதற்காக மிகக் கஸ்ரப்படுகிறார்கள்.

பலரும் கடனாளிகளாக இருந்து

**- கிருஷ்ணமூர்த்தி அரவிந்தன்**

கொண்டே தொழில்களைச் செய்கின்றனர். வங்கிகளுக்கு வட்டியும் முதலுமாகக் கட்டுவதற்கே பலரும் நாளாந்தம் சிரமப்படுகின்றனர்.

இந்த நிலையில் இப்படியொரு அநீதியா?

போரினால் அழிந்த இயற்கை வளங்களை விட சட்ட விரோத மணல் அகழ்வினாலும், மரத்தறிப்பினாலும் அழியும் வளங்கள் அதிகம் என்று பிரதேச வாசிகள் கவலைப்படுகின்றனர்.

இவ்வாறே கால்நடைகள் கடத்தப்படுவதைப் பற்றிய கவலைகளும் உள்ளன. போரின்போது ஆயிரக்கணக்கான கால்நடைகள் வன்னியில் அழிந்துவிட் டன. மிஞ்சியவற்றையும் காவு கொள் கின்றனர் சட்டவிரோதிகள்.

ஆகவே இவை எல்லாவற்றுக்குமான ஒரு நடவடிக்கைக்காக இன்று வன்னிப் பிரதேசம் காத்து நிற்கிறது.

**- 250 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் -**

## காற்று, சூரிய சக்தியைப்பயன்படுத்தி காங்கேசன்துறையில் மின் நிலையம்

(யாழ்ப்பாணம்)

மக்களுக்கு சுத்தமான மின்சக்தியை வழங்குவதற்காக யாழ்ப்பாணம் காங்கேசன்துறையில் சூரிய மற்றும் காற்று சக்தியைப் பயன்படுத்தி மின் உற்பத்தி செய்வதற்கான மின் நிலையம் ஒன்று அமைக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. சுமார் 250 மில்லியன் அமெரிக்க டொலர் பணச்செலவில் இந்த மின் நிலையம் அமைக்கப்படவுள்ளது.

இந்தத் திட்டத்திற்கென காங்கேசன்துறை கரையோரப்பகுதி நிலங்களை மலேசிய நிறுவனம் ஒன்றிற்கு 22 வருடங்கள் குத்தகை அடிப்படையில் இலங்கை அரசாங்கம் வழங்கியுள்ளது.இந்த நிறுவனத்திடமிருந்து மின்சாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கான ஒப்பந்தத்தில் இலங்கை மின்சார சபை கைச்சாத்திட்டுள்ளது.

இந்தத் திட்டத்திற்கான நிலங்களை வழங்குவதற கான உடன்படிக்கைகள் . 2010ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 16 ஆம் திகதி இலங்கை அரசாங்கத்திற்கும் மலேசியாவின் கே.எல்.எஸ் நிறுவனத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

## பெண்களை சக்தி மயப்படுத்தல் குறித்து இந்தியாவில் இலங்கைக்குழு ஆராய்வு

(கொழும்பு)

இந்தியாவுக்கான விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ள இலங்கை பிரதிநிதிகள் குழு, நேற்று முன்தினம் இந்திய பஞ்சாயத்து மற்றும் சமூக நலன் அமைச்சர் எம்.கே.முனீரை சந்தித்துள்ளது.இந்தக் குழு, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தில், யுத்தத்தின் பின்னரான துரித அபிவிருத்திக்கான திட்டங்கள் குறித்து அங்கு ஆராய்ந்துள்ளது.

இந்தக் குழுவில் திருகோணமலை நகரசபை தலைவர் மொஹமட் மஹரூப் உட்பட 10 பேர் பங்குபற்றியுள்ளனர். கேர்ளாவில் உள்ள பொது நிர்வாக கற்கைநிலையத்துக்கும் அவர்கள் விஜயம் மேற்கொண்டனர்.அமைச்சர் மூனீருடன் இடம்பெற்ற சந்திப்பின் போது, மக்களின் அபிவிருத்தித் திட்டங்கள், பெண்களை சக்திமயப்படுத்தல் போன்ற விடயங்கள் குறித்து பேசப்பட்டுள்ளன.

# யாழ். குடாவில் அதிகரிக்கும் சமூக சீர்கேடு தடுத்து நிறுத்த நடவடிக்கை வேண்டும்

## அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் கோரிக்கை

COUNCIL OF NGOs, J.D

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் இடம் பெறுகின்ற சமூக சீர்கேடுக ளைக் கட்டுப்படுத்த பொலிஸார் தீவிர நடவடிக்கையினை மேற் கொள்ள வேண்டும் என அரச சார்பற்ற நிறுவனங்களின் இணை யம் கோரிக்கை விடுத்துள்ளது.

நேற்று நண்பகல் 12.00 மணி யளவில் இடம்பெற்ற பத்திரிகை யாளர் சந்திப்பிலேயே மேற்கண் டவாறு கோரிக்கை விடுத்துள் ளது.

குடாநாட்டில் தற்போது நடை பெற்று வரும் சமூக பண்பாட்டை மீறிய செயல்கள் மற்றும் இளம் சமுதாயத்தினரின் அதிகரித்த மதுபான பாவனை, போதைப் பொருள் பாவனை போன்றவற் றினால் எமது இளம் சமூகத்தினர் பாதிக்கப்படுவது மிகவும் கவ லைக்குரியது.

மேலும் தற்போது கிடைக்கப் பெறும் கைத்தொலைபேசி மற் றும் மோட்டார் சைக்கிள் போன் றவற்றின் அதியுச்ச பயன்பாட் டின் காரணமாகவே எமது பண் பாடு மற்றும் விழுமியங்கள் சிதைந்து போகின்றன.

இப்பயன்பாடுகளை இளம் சமுதாயத்தினரிடமிருந்து கட்டுப் படுத்துவதன் மூலமே யாழ். மண்ணின் கலாசாரத்தினையும், இளம் சமுதாயத்தினரையும் பாதுகாக்க முடியும். அதற்கு பொலிஸார் தீவிர நடவடிக்கை யில் ஈடுபட வேண்டும்.

போதைப் பொருள் பாவனை க்கு எதிராகவும், முறைகேடான செயற்பாடுகளுக்கு எதிராகவும் பொலிஸாரின் நடவடிக்கைகள் வரவேற்கத்தக்கது. இருந்தபோதி லும் அவை மேலும் தீவிரப்படுத் தப்பட வேண்டியது மிகவும் அவ சியமானதொன்றாகும்.

இதுபோன்று நெடுங்காலமாக அதிகரித்துவரும் திருட்டு மற்றும் கொள்ளைச் சம்பவங்கள், பெண் கள் மீதான பாலியல் துஷ்பிர யோகங்கள் போன்றவற்றில் ஈடு படும் குற்றவாளிகள் இனங்காணப் பட்டு தகுந்த தண்டனை பெற் றுக்கொடுப்பதற்கு அனைவரும் முன்வரவேண்டும்.

இதற்குப் பெற்றோர்கள் முக் கிய பங்களிப்பு செய்ய வேண் டும். தமது பிள்ளைகளின் செயற் பாடுகளை கண்காணிக்க வேண் டும்.

அத்துடன் அங்கீகாரமற்ற சட்ட விரோத மதுபான நிலையங்க ளுக்கும், தங்குமிடங்களுக்கும் எதிராக பொலிஸாரும் மதுவரி திணைக்களமும் தீவிர நடவ டிக்கை மேற்கொள்ள வேண்டும்.

சமூக விரோத செயல்களைக் காணும் பொதுமக்கள் அதனைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டும் என்றும், தேவைப்படின் பொலிஸாருக்கு தகவல் கொடுத்து அவர்களது நடவடிக்கைகளுக்கு ஒத்துழைக்க வேண்டும் எனவும் கோரப்பட் டுள்ளது.

மேலும் இளைய சந்ததியினர் போதைப் பொருள் பாவனை, மதுபான பாவனைக்கு அடிமை யாதல் தொடர்பில் விழிப்புணர்ச் சியை ஏற்படுத்த சனசமூக நிலை யங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதுடன் இவ்விட யங்களில் பெற்றோர்களின் பங்கு மிக முக்கியமானது எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேற்படி சமூக விழுமியங்க ளின் பாதுகாப்பிலும், மாற்றங் களை ஏற்படுத்துவதிலும் இளை ஞர் அமைப்புக்களின் பங்களிப்பு அவசியமாவதுடன், பன்னெடுங் காலமாக உலகத் தமிழினத்தின் பொக்கிஷ மையமாக விளங்கி வரும் யாழ்ப்பாண மண்ணின் பெருமைகளைத் தொய்யவிடாது பாதுகாக்க அனைவரும் தனித் தனியாகவும் கூட்டாகவும் செயற் பட வேண்டும் எனவும் அரச சார் பற்ற நிறுவனங்களின் மாதாந்த கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மா னத்தில் கேட்கப்பட்டுள்ளது. (எஸ்)

## போர்க்குற்றங்கள்...

கொழும்பு ஆங்கிலப் பத்திரிகை ஒன்று வெளியிட்டிருந்தது.

இந்நிலையில், கொழும்பு ஆங்கிலப் பத்திரிகையில் வெளியிடப்பட்டிருந்த இப்பரிந்துரைகள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூனின் கருத்து என்ன என இன்னர் சிற்றி பிரஸ் செய்தியாளர் மத்யூ ரசல் லீ மார்ட்டின் நெஸர்க்கியிடம் கேள்வி எழுப்பியிருந்தார்.

இக்கேள்விக்குப் பதிலளித்த மார்ட்டின் நெஸர்க்கி, தேசிய அளவிலான பொறுப்புக்கூறும் முறை எப்போதும் முக்கியமானது எனக் கூறியுள்ளார். அதேவேளை, இது குறித்து அவர் மேலதிக கருத்துகள் எதனையும் தெரிவிக்கவில்லை.

உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழு வின் அறிக்கை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பின்னரே, ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூனுக்கு அனுப்பி வைக்கப்படும் என அரசாங்கம் கூறியுள்ளமையும் குறிப் பிடத்தக்கது.

## அரசியல் தீர்வு....

ஏற்பட்டிருக்கின்றது. அரசாங்கம் அக்காலப்பகுதியில் அழிவுகளுக் குள்ளாகியிருக்கும் பௌதீக வளங்களை அபிவிருத்தி செய்து வருகின்றது. அது குறித்து மகிழ்ச்சியே. இருந்தும் தமிழ் மக்களின் மனங்களில் அவர்களுக்கான அரசியல் தீர்வினை அரசு வழங்க வில்லை என்ற கவலை குடிகொண்டிருக்கிறது. தமிழ் மக்களும் பெரும்பான்மை இன மக்களுடன் சரிசமமாக மதிக்கப்படவேண்டும்.

எனக்குக்கூட தென்பகுதியிலிருந்து வரும் கடிதங்கள் சிங்கள மொழிகளிலேயே வருகின்றது. தமிழ் மொழி அரச கரும மொழி என்பது நடைமுறையில் பேணப்படவேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

இச்சந்திப்பில் ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினர் ஜியோபெறி ஓர்டன் தெரிவிக்கையில்,

புலம்பெயர் தமிழ்மக்கள் இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக பிரச்சார நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதுடன், அங்கு நிதி திரட்டலில் ஈடுபட்டு வருவதாகவும் குறிப்பிட்டார்.

இதற்குப் பதிலளித்த ஆயர், இங்குள்ள நிலைமைகள் வெளி நாடுகளில் வாழும் தமிழ்மக்களுக்குத் தெரியாது. நீங்கள் குறிப்பிட் டது போன்று அவர்கள் நிதி திரட்டலில் ஈடுபட்டால் அந்த நிதியினை மக்களுக்கான நலத்திட்டங்களுக்குப் பயன்படுத்தலாம் எனத் தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்துத் தெரிவித்த ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினர், அரசியல் தீர்வு விடயமாக இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்களுடன் தாம் கலந்துரை யாடியிருப்பதாகவும், அரசியல் தீர்வு விடயத்தில் அவர்களும் ஆத ரவான கருத்துக்களைக் கொண்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

ஆயர் இல்லத்திற்கான விஜயத்தை முடித்துக்கொண்ட ஐரோப் பிய நாடாளுமன்ற உறுப்பினர் யாழ். நூல் நிலையத்திற்கும், நல்லூர் கந்தசுவாமி கோயிலுக்கும் விஜயம் செய்தார். (பா)

## பிக்கு காயம்

(திருகோணமலை)

திருகோணமலை நகர்ப்பகுதி யில் உள்ள பௌத்த பிக்குகளுக் கிடையில் ஏற்பட்ட வாக்குவாதம் காரணமாக ஒருவர் திருமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிய வருகின்றது.

பௌத்த பிக்குவால் தாக்கப் பட்டவர் திருமலை, கோட்டை பகுதியில் உள்ள கோகன்ன விகாரையின் விகாராதிபதியான தம்மாலோக ஹிமி (வயது - 70) என்பராவார்.

கோட்டையில் உள்ள விகா ரையின் கூரை சீரற்றுக் காணப் படுவதால் ஆண்டாங்குளம் பகு தியிலுள்ள திஸ்ஸ விகாரைக்கு சென்றதாகவும், பின்னர் அந்த விகாரைக்கு பொறுப்பான விபுல திஸ்ஸ எனும் பிக்கு தன்னை தாக்கியதாகவும் அவர் தெரி வித்தார்.

## சீரற்ற...


தெரிவித்துள்ளார்.

இயற்கை அனர்த்தம் காரண மாக நாடளாவிய ரீதியில் 6496 குடும்பங்களைச் சேர்ந்த 26 ஆயிரத்து 11 பேர் பாதிப்பிற்குள் ளாகியுள்ளனர். இதில் மாத்தறை மாவட்டத்திலேயே அதிகளவு பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளது.

இங்கு 1103 குடும்பங்களைச் சேர்ந்த 5515 பேர் பாதிக்கப்பட் டுள்ளதுடன், 106 வீடுகள் முழு மையாகவும், 997 வீடுகள் பகுதி யாகவும் சேதமடைந்துள்ளதா கவும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித் துள்ளது.

இதேவேளை, இன்றும் வட க்கு, கிழக்கு உட்பட நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் மழை பெய்யுமெனவும் வளிமண் டலத்தில் ஏற்பட்டுள்ள காற்றழு த்த தாழ்வு நிலை காரணமாக மீனவர்கள் கடலுக்குச் செல் வதை தவிர்க்க வேண்டும் என வும் வளிமண்டலவியல் திணைக் களம் அறிவித்துள்ளது.

# அரசியல் தீர்வை முன்வைக்க அரசிற்கு ஆர்வமில்லை



(கொழும்பு)

அரசியல் தீர்வுத் திட்டமொ ன்றை முன்வைப்பதில் அரசாங் கத்திற்கு ஆர்வமில்லை என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

தேசிய தொழிலாளர் சங்க செயற்குழுக் கூட்டத்தில் கலந்து கொண்ட போதே அவர் இவ் வாறு குறிப்பிட்டார்.

சிங்கள, தமிழ் மற்றும் முஸ் லிம் மக்களினால் ஏற்றுக்கொள் ளக்கூடிய அரசியல் தீர்வுத் திட்டமொன்றை முன்வைப்பதாக அரசாங்கம் அறிவித்திருந்தது.

எனினும், இது குறித்து நடவடிக்கை எடுக்கப்படவில்லை. மாறாக அரசாங்கம் போர்மியுலா வன் கார் பந்தயம் குறித்து கூடு தல் கவனம் செலுத்தி வருகின் றது. நாட்டின் பிரச்சினைகளுக்கு தீர்வுகாணாது கார் பந்தயம் தொடர்பில் அக்கறை செலுத்தப் படுவதாக ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

## பொன்சேகாவை...

இலங்கையின் உயர்மட்ட அமைச்சர் ஒருவருக்கும், அமெரிக்க இராஜதந்திரி ஒருவருக்கும் இடையிலான சந்திப்பின் போதே அமெரிக்கத் தரப்பில் இவ்வாறு அழுத்தம் கொடுக்கப்பட்டதாகவும் அந்தச் செய்தியில் கூறப்பட்டிருந்தது.

இதுதொடர்பாக கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகப் பேச்சாள ரிடம் தொடர்பு கொண்டு 'இந்து' நாளிதழ், கேள்வி எழுப்பியிருந்தது.

இந்தக் கேள்விக்கு மின்னஞ்சல் மூலம் பதிலளித்துள்ள கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகப் பேச்சாளர், இலங்கை அமைச்சருக்கு இடையிலான கலந்துரையாடல் பற்றிய அறிக்கை சரியானதல்ல என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்த மின்னஞ்சல் பதிலில் சரத் பொன்சேகாவை விடுவிக்குமாறு அமெரிக்கா கோரவில்லை என்று குறிப்பிடப்படாததுடன், கொழும்பு நாளிதழ் செய்திக்கு அமெரிக்கத் தூதரகம் அதிகாரபூர்வமான மறுப்பு அறிக்கை எதையும் வெளியிடவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

## ஐ.நா. அமைப்பினை...

நிலைமைகள் குறித்து தவறான தகவல்களை வழங்கியுள்ளார் என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட தொடர்பில் மொஹான் பீரிஸ் வெளியிட்ட கருத்துக்கள் தொடர்பிலும் சுதந்திர ஊடக அமைப்பு அதிருப்தி வெளியிட்டுள்ளது.

குறிப்பாக எக்னெலிகொட வெளிநாடொன்றில் அடைக்கலம் பெற்றிருப்பதாக மொஹான் பீரிஸ் தெரிவித்திருந்தார்.

இவ்வாறு வெளிநாட்டில் அடைக்கலம் கோரியிருந்தால் அது பற்றிய தகவல்களை அரசாங்கம் பொலிஸாருக்கும், மனித உரி மைகள் அமைப்பிற்கும் வழங்க வேண்டுமென சுதந்திர ஊடக அமைப்பு கோரியுள்ளது.

இந்தத் தகவல் குறித்து அரசாங்கம் நாடாளுமன்றிலும் அறி விக்கவில்லை என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஊடகவியலாளர் போத்தல ஜயந்த மீதான தாக்குதல் சம்பவம் குறித்த விசாரணைகள் அவரது வேண்டுகோளின் பேரில் வாபஸ் பெற்றுக்கொள்ளப்பட்டது.

எனினும், விசாரணைகளை வாபஸ் பெற்றுக்கொள்ளுமாறு தாம் ஒருபோதும் கோரவில்லை என போத்தல ஜயந்த தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர் ஜே.எஸ். திஸ்ஸ நாயகம் தொடர்பிலும் முன் னாள் சட்ட மா அதிபர் மொஹான் பீரிஸ் பிழையான தகவல்களை முன்வைத்துள்ளதாக ஊடக அமைப்பு குற்றம் சுமத்தியுள்ளது.


## ஐரோப்பிய நாடாளுமன்ற....

முன்னேற்றம் குறித்து கட்டளைத் தளபதி விளக்கிக் கூறினார்.

இதன்போது குடாநாட்டில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் கண்ணிவெடி அகற்றல் செயற்பாடுகள் தொடர்பாக ஓடன் ஆர்வத் துடன் கேட்டறிந்தார். இதற்குப் பதிலளித்த கட்டளைத் தளபதி, குடாநாட்டில் 98 வீதமான பகுதிகளில் கண்ணிவெடிகள் அகற் றப்பட்டுள்ளதாகவும், கண்ணிவெடி அகற்றப்பட்ட பகுதிகளில் மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.


அத்துடன், பொதுமக்களுடனான நல்லுறவை வளர்ப்பதில் படையினர் ஈடுபட்டு வருவதாகவும் இதன்போது தெரிவிக்கப்பட் டுள்ளது.

குடாநாட்டில் சந்திப்புக்களை முடித்துக்கொண்ட ஓடன் தலைமை யிலான் குழுவினர் முல்லைத்தீவுக்குச் சென்றனர்.



# ரூபாவின் பெறுமதியிறக்கம் ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல

## அமைச்சர் வாசுதேவ நாணயக்கார



(கொழும்பு)

ரூபாவின் பெறுமதியிறக்கம் குறித்த யோசனை ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல என தேசிய மொழிகள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் அங்கம் வகித்த போதிலும், இம்முறை வரவு செலவுத்திட்ட யோசனையில் முன்வைக்கப்பட்ட ரூபாவின் பெறுமதியிறக்கம் குறித்த பரிந்துரை ஏற்புடையதல்ல என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமது கட்சியும், தாமும் இந்த யோசனைத் திட்டத்தை எதிர்ப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.

வரவு செலவுத் திட்டம் தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு பேசியபோது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

ரூபாவின் பெறுமதி இறக்கத்தினால் பொருட்களின் விலை உயர்வடையக் கூடும் எவ்வாறெனினும், இந்த நிலைமையை ஈடுசெய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்.

உதாரணமாக பெருந்தோட்ட மக்களுக்கு அரிசி, மா, நிவாரண அடிப்படையில் வழங்கப்படவுள்ளது.

நாட்டின் வரவு செலவுத் திட்ட யோசனை என்பது பரிசுப் பொதிகளை பகிர்ந்தளிக்கும் நடவடிக்கை அல்ல என்பதனை எதிர்க்கட்சிகள் புரிந்துகொள்ள வேண்டும் என்றார்.

# மன்னாரில் கொட்டும் மழையிலும் பரிசுத்த பண்டம் வரவேற்பு



புனித டொன்பொஸ்கோவின் பரிசுத்த பண்டம் நேற்று முன்தினம மாலை மன்னாருக்கு கொண்டு வரப்பட்டது. மதியம் ஒரு மணியளவில் மடு சந்திக்குக் கொண்டு வரப்பட்ட பரிசுத்த பண்டம் மதியம் 2 மணியளவில் முருங்கன் டொன்பொஸ்கோ நிலையத்திற்கு கொண்டுசெல்லப்பட்டது.

பின் அங்கிருந்து நானாட்டானிற்கு கொண்டுசெல்லப்பட்டு தொடர்ந்து வங்காலை கிராமத்திற்கு கொண்டுசெல்லப்பட்டு மாலை 6 மணியளவில் வங்காலையில் இருந்து மன்னார் புனித செபஸ்ரியார் பேராலயத்திற்கு கொண்டு செல்லப்பட்டது.

இதன்போது பல ஆயிரக்கனக்கான மக்கள் கடும் மழையிலும் புனித டொன்பொஸ்கோவின் பரிசுத்த பண்டத்தை வரவேற்றனர். பின் மன்னார் புனித செபஸ்ரியார் ஆலயத்தில் விசேட ஆராதனைகள் இடம்பெற்றது.

நேற்றுக் காலை 06 மணிக்கு விசேட திருப்பலி இடம்பெற்று பின்னர் காலை 10 மணிக்கு வவுனியா புனித தூய அந்தோனியார ஆலயத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டது

# இரகசிய விசாரணைகள் இல்லாது ஒழிக்கப்படவேண்டும்

## ஐ.நா. சித்திரவதைக்கு எதிரான குழு

(கொழும்பு)

இலங்கையில் மனித உரிமைப பாதுகாவலர்கள் பாதுகாக்கப்பட வேண்டுமெனவும், சட்டவிரோதமான முறையில் இரகசியமாக நபர்களை தடுத்து வைத்து விசாரணை நடத்தும நடைமுறை இல்லாதொழிக்கப்பட வேண்டுமெனவும் ஐக்கிய நாடுகளின் சித்திரவதைகளுக்கு எதிரான குழு கோரிக்கை விடுத்துள்ளது.

மனித உரிமை ஆர்வலர்கள், ஊடகவியலாளர்கள், சட்டத்தரணிகள் மற்றும் சிவில் அமைப்பு பிரதிநிதிகள் நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகின்றனர்.

மனித உரிமைக்காக குரல் கொடுப்போரை பாதுகாக்க இலங்கை அரசாங்கம் கூடுதல் கரிசனை காட்ட வேண்டும்.

சிறுவர் பாதுகாப்பு குறித்த தேசிய திட்டம், உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு, தேசிய மனித உரிமைப் பாதுகாப்பு திட்டம் போன்றன வரவேற்கப்பட வேண்டியவை ஆகும்.

படையினரால் சட்டவிரோதமான முறையில் கடத்தல்கள் மற்றும் காணாமல் போதல் சம்பவங்கள் இடம்பெற்று வருவதாக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் குறித்து உன்னிப்பாக அவதானிக்கப்பட்டு வருகின்றது.

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் விசாரணைகள் மற்றும் பரிந்துரைகள் பக்கச்சார்பற்ற முறையில் அமுல்படுத்தப்பட வேண்டுமென ஐக்கிய நாடுகளின் சித்திரவதைகளுக்கு எதிரான குழு மேலும் சுட்டிக்காட்டியுள்ளது.

# சிரமங்களை எதிர்நோக்கும் மெனிக்பாம் மாணவர்கள்

வவுனியா மெனிக்பாமில் உள்ள மாணவர்கள் தமது கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு பல்வேறுபட்ட கஷடங்களை எதிர்கொள்வதாக கவலை தெரிவித்துள்ளனர்.

இங்குள்ள மாணவர்களுக்கு ஆசிரியர்கள் வளப்பற்றாக்குறையின் மத்தியில் கல்வி புகட்டி வருவதாக தெரிவிக்கப்படுகிறது. கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கு பாடம் புகட்டுவதில் ஆசிரியர்கள் கஷடங்களை எதிர்நோக்குகின்றனர்.

பரீட்சைக்கான மாதிரி வினாத்தாள்களையும் பயிற்சி வினாக்களையும் மாணவர்களே தயார் செய்து கல்வி கற்றுவருகின்றனர். இதேவேளை பருவப்பெயர்ச்சி மழை காரணமாக மாணவர்களும் ஆசிரியர்களும் பாரிய கஷடங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

வலயம் ஒன்றில் அமைக்கப்பட்டுள்ள தற்காலிக கல்வி கற்றல் கூடம் மழையினால் முற்றாக பாதிக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

# காரைநகர் பிரதேச சபையின் தவிசாளர் வீட்டின் மீது தாக்குதல்

காரைநகர் பிரதேச சபையின் தவிசாளர் வே.ஆனைமுகன் வீட்டின் மீது இனந்தெரியாதவர்கள் சிலர் தாக்குதலை மேற்கொணடதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முன்தினம் அதிகாலை 1.30 மணியளவில் திருநெல்வேலியில் அமைந்துள்ள அவரின வீட்டின் மீது பெற்றோல் நிரப்பப்பட்ட போத்தல்கள மூலம் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

காரைநகர் பகுதியில் அமைந்துள்ள இந்து ஆலயங்களில் மணி ஒலிப்புதற்கு இராணுவம் தடை விதித்துள்ளதாக இவர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இச்சம்பவம் தொடர்பாக பொலிஸாரிடம் முறையிட்டதாகவும், அதிகாலை 2 மணியளவில் சம்பவம் நடந்த இடத்தைப் பொலிஸார் பார்வையிட்டதாகவும் ஆனைமுகன் தெரிவித்தார்.

இந்தத் தாக்குதலுக்கும் தமக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்று இலங்கை இராணுவம் மறுத்துள்ளது. இது குறித்து சம்பந்தப்பட்டோர் புகார் கொடுத்தால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று இராணுவப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

மேலும் எவ்வித மத சம்பந்தப்பட்ட விடயங்களிலும் இராணுவம் தலையிடவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

# நடமாடும் சேவை

(ஆனைக்கோட்டை)

மானிப்பாய் பொலிஸாரின் ஏற்பாட்டில் பொதுமக்களுக்கான நடமாடும் சேவையொன்று நேற்று நவாலி சென்.பீற்றர்ஸ் றோ.க.த.க. பாடசாலையில் நடைபெற்றது.

இச்சேவையில் அடையாள அட்டைகளைத் தவறவிட்டவர்களுக்கான முறைப்பாட்டுப் பிரதிகள் பெற்றுக்கொடுக்கப்பட்டது. அத்துடன் டெங்கு ஒழிப்பு தொடர்பான விழிப்புணர்வுச் செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டது. (உ-104)

# முகாமைத்துவ போட்டியில் கரவெட்டிப் பிரதேசம் இரண்டாமிடம்

பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் 2009 / 2010 ஆம் ஆண்டில் பிரதேச செயலகங்களுக்கிடையில் நாடளாவிய ரீதியில் நடாத்தப்பட்ட முகாமைத்துவப் போட்டியில், யாழ். மாவட்டத்தில் கரவெட்டிப் பிரதேச செயலகம் இரண்டாம் இடத்தைப் பிடித்துக் கொண்டது. இந்தப் போட்டியில் முதலாமிடத்தை அம்பாந்தோட்டை மாவட்டமும், மூன்றாமிடத்தை குருநாகல் மாவட்டமும் பெற்றுக்கொண்டன.

வெற்றிபெற்ற பிரதேச செயலகங்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு நேற்றுக்காலை 9 மணியளவில் அலரி மாளிகையில் நடைபெற்றது. யாழ். மாவட்டத்திற்கான பரிசினை அரச அதிபர் இமெல்டா சுகுமார், கரவெட்டிப் பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன், ஆகியோர் ஜனாதிபதியிடமிருந்து பெற்றுக்கொண்டனர். (116)


## பதவி வெற்றிடம்

கணக்குப் பதிவாளர் பதவிக்கான விண்ணப்பங்கள் தகுதியானவர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| கல்வித் தகைமை | : | க.பொ.த உயர்தரப் பரீட்சையில் கணக்கியலில் விசேட சித்தியுடன் வர்த்தகம் உட்பட 3 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். |
| வயதெல்லை | : | 25 - 50 வருடங்கள் |
| ஏனைய தகைமைகள் | : | ஆங்கில மொழியில் தேர்ச்சியுடையவராகவும், மேற்கூறப்பட்ட பதவிக்கான முன் அனுபவம் மற்றும் கணினி அறிவுடையவராகவும் இருத்தல் வேண்டும். |

தகுதியுடையோர் சுய விபரத்துடன் கூடிய விண்ணப்பங்களை 30.11.2011 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கவும்.

ஆளணி முகாமையாளர்
தினமுரசு காரியாலயம்,
இல: 373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

(இ)


# இலங்கையில் கிரவல் வீதிகள் எதிர்காலத்தில் இருக்காது

## அமைச்சர் பஸில் கூறுகிறார்



(கொழும்பு)

நாட்டிலுள்ள கிரவல் வீதிகளால் பாடசாலை மாணவர்கள் பெரிதும் அவதியுறுகின்றனர். எனவே எதிர்வரும் காலங்களில் நாட்டில் கிரவல் வீதிகளென ஒனறுமே இருக்காதென அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

வத்தளையில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

இந்த நாட்டைப் பயங்கரவாதிகளின் பிடியிலிருந்து ஜனாதிபதி மீட்டது போல, பொருளாதாரத்திலும் அபிவிருத்தியை ஏற்படுத்துவார். ஜனாதிபதி பதவியை ஏற்கும்போது இந்த நாட்டில் பண வீக்கம் 26 வீதமாகவும், வேலைவாய்ப்பின்மை 12 வீதமாகவும் இருந்ததுடன், வெளிநாட்டு முதலீடுகள் அதல பாதாளத்தில் இருந்தன.

ஆனால் இன்று பணவீக்கம் 8 வீதமாகவும் வேலைவாய்ப்பின்மை 4.2 வீதமாகவும் குறைவடைந்துள்ளது. அத்துடன் வெளிநாட்டு முதலீடுகளும் நல்ல நிலையில் உள்ளன.

கடந்த சில வருடங்களாக வீதிகள், நீர்ப்பாசன பிரிவுகள் மிகப் பெரும் அபிவிருத்தியைக் கண்டு வருகின்றன. தற்போது வீதி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் சகல வீதிகளும் காப்பற் வீதிகளாக மாற்றமடைந்து வருகின்றன. எனவே எதிர்வரும் சந்ததி அபிவிருத்தியை மட்டுமே இந்த நாட்டில் காணவுளளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 நவம்பர் 27 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.